# போர்க்களம்



இளையவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்களம்

இளையவன்

விவேக அமுது வெளியீட்டகம்.
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு. இல. 01.

போர்க்களம் :

இளையவன் :

முதற்பதிப்பு : வைகாசி 2003.

வெளியீடு : விவேக அமுது வெளியீட்டகம்.

ஊரெழு, மேற்கு, சுன்னாகம். இலங்கை.

முகப்பு.

விலை ரூபா : 110/=
Price Rs : 110/=

Publication No: 01

Porkkalam.

A collection of short stories.

By : Ilayavan

First Print : May 2003.

Published by : Viveka Amuthu Publications.

Cover

Price.

## சமர்ப்பணம்

சொந்த மண்ணில் சுக வாழ்வு காணவும்
ஜனநாயக அரசியல் சூழல் நிலை பெறவும்
அர்ப்பணிப்புடன் பாடுபடும் அனைவருக்கும்
இப்படைப்பு சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தப் போர்க்களத்தில் பக்கங்கள்


| | |
|---|---|
| எமது கவனத்திற்குரிய ஓர் எழுத்தாளன் | 01 |
| இலக்கியல்வாத எழுத்துக்கள் | 03 |
| வாக்குமூலம். | 05 |
| 1. போர்க்களம் | 07 |
| 2. தடுமாற்றம் | 14 |
| 3. ஆறாத காயம் | 18 |
| 4. நியாயங்கள் | 22 |
| 5. முரண் | 26 |
| 6. தடயங்கள் | 30 |
| 7. நெருக்கடி நிலை | 34 |
| 8. மறுபிறப்பு | 37 |
| 9. வேப்பம் பூ | 41 |
| 10. புத்தி சீவியம் | 45 |
| 11. எக்ஸ்போர்ட் பார்சல் | 51 |
| 12. விபத்து | 56 |
| 13. ஒரு தமிழனின் கதை | 60 |




# எமது கவனத்திற்குரிய ஓர் எழுத்தாளன்

கலைஞர்கள் படைக்கும் உலகிற்கும், சாதாரணர்களின் புலன்களுக்குத் தென்படும் உலகிற்கும் ஏதும் தொடர்புண்டா? இருப்பின் அத் தொடர்பின் தன்மை என்ன?

இத்தகைய வினாக்களுக்கு, மேற்குலகைப் பொறுத்தவரை, பிளேட்டோ, அரிஸ்டோட்டில் காலத்திலிருந்து இன்றுவரை அழகியலாளர்கள் விடைகளைக் காண முயன்று கொண்டிருக்கின்றனர். ஆனாலும் எல்லோருக்கும் ஏற்புடையதான விடை இன்னும் கிட்டவில்லை.

கீழைத்தேய மரபிலும் தொன்று தொட்டு அழகியலாளர்கள் இத்தகைய விசாரணைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். இவ்விடயம் குறித்து, அழகியலாளர்களிடையே உடன்பாடு ஏற்படாததற்கு காரணம் உண்டு. வர்க்க ரீதியாகப் பிளவுபட்டிருக்கும் ஓர் சமுதாயத்திலே கலை பற்றிய நோக்கு வேறுபட்டிருப்பது இயல்பே. கீழைத்தேசங்களுக்கு இது பொருந்தாது. ஏனெனில் இங்கு சமுதாயம் சாதி அடிப்படையில் பிளவுண்டுள்ளது எனச் சிலர் வாதிடலாம். சாதி அமைப்பு கரு நிலையில் உறைந்துள்ள வர்க்க முறையே (Caste is class in embriyo) என இத்தகையவர்களிற்கு சுருக்கமாக விடையளிக்கலாம். சாதாரண வாசகனுக்கு அழகியலைப் பற்றியோ, தன்னைச் சார்ந்த கருத்தியல் பிரச்சினைகள் குறித்தோ அக்கறையில்லை. ஓர் குறிப்பிட்ட படைப்பு தனக்கு பரிட்சயமான உலகுடன் எத்தகைய தொடர்பு கொண்டதாயிருக்கிறது என்பதுதான் அவனது உரைகல்லாய் அமைகின்றது. அதனை அப்படியே பிரதிபலித்து பாளைக் கத்தியால் வெட்டுவது போன்று வாழ்க்கையை வெட்டி ஓர் துண்டாகத் தருகின்றதா? (A Slice of Life Naturalism) அல்லது வாழ்க்கைக்கு முகம் கொடுக்க வக்கற்று வெறும் கனவுலகில் தஞ்சம் புக முயல்கிறதா? (Escapeism) இத்தகைய தரிசனம் உலகை பிரஷ்ட் கையாளும் அன்னியப்படுத்தும் (Alienation Effect) உத்தியைக் கையாண்டு உணர்த்தப்பட்ட ஒன்றா? அல்லது நன்கு பரிட்சியப்பட்டவற்றை புதிய கோணத்திலிருந்து நோக்கும்போது அதனை மீண்டும் மட்டுக்கட்டுவதனால் ஏற்படும் மெல்லதிர்ச்சியும், சுவைப்பும் கலந்த ஒன்றா? (The Shock of Recognition) மேற் குறிப்பிட்ட வினாக்களிற்கும் இளையவனின் சிறுகதைகளிற்கும் என்ன தொடர்பு என நீங்கள் கேட்கலாம்? அவருடைய சிறுகதைகள் இத்தகைய சிந்தனைகளைக் கிளப்புகின்றன என்பதிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிறுகதைத் தொகுதி தட்டிக்கழிக்க முடியாதவாறு எமது கவனத்திற்குரியது என்பது விளங்கும். முதல் வாசிப்பில் அவரது கதைகள் என்னை அவ்வளவாகக் கவரவில்லை. அதற்கு ஒரு காரணம் அவை எமக்கு பழக்கப்பட்டுவிட்ட அவலங்களைக் கருப் பொருளாகக் கொண்டிருப்பதாக இருக்கலாம். மீண்டும், ஒருமுறை வாசிக்கும் போதுதான் அவரது அமைதியான படாடோபமற்ற கலைத்திறனை எம்மால் சுவைக்க முடிகிறது. முதல் கதையான "போர்க்களமே" இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. தலைப்பே முரண் உடையது. மிகைப்படுத்தப்படாத அன்றாட வாழ்க்கைக்கும், விமலன் ஈற்றிலே தெருச்சந்தியில் சடலமாக கிடப்பதற்கும் இடையிலுள்ள வேறுபாட்டிலிருந்தே கதை அதன் வலுவைப் பெறுகின்றது. நெஞ்சைத் தொடுகின்ற இச்சிறுகதை விறுவிறுப்பான குறும்படமாக ஆக்கப்படுவதற்கான உள்ளார்ந்த கூறுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. இதே போன்றுதான் "நியாயங்கள்" என்ற கதையிலும், இயல்பான அன்றாட வாழ்க்கையை ஒட்டிய தொடக்கத்திற்கும், இறுதியில் நாம் காணும் சம்பவங்களிற்கும் இடையே உள்ள வேறுபாடே கதைக்கு வலுவூட்டுகிறது.

பத்திரிகைத் துறையிலே அவர் பெற்ற அனுபவம் "தடயங்கள்" என்ற கதையிலே தரைமட்டமாக்கப்பட்ட கோவிலின் இடிபாடுகளில் அகப்பட்ட சடலங்களை அடையாளம் காணும் முறைமையினை, சேலைத்துண்டு, சைக்கிள், செபமாலை புலப்படுத்துகின்றது. சுட்டிப்பான சின்னஞ்சிறிய விடயங்களில் கவனம் செலுத்துதல், இதழியலையும் இலக்கியத்தையும் இரத்த உறவினராக்குகின்றது.

ஆறாத காயத்தின் திடீர் திருப்ப முடிவு **(Ending)** போல் முதலில் தோன்றுகிறது. இரண்டாவது வாசிப்பில் அது இயல்பாகவே படுகின்றது. மறுபிறப்பில் வரும் வேதநாயகியம்மா என்ற பாத்திரம் நன்றாக வார்க்கப்பட்டிருக்கிறது. "புத்தி சீவியம்"என்ற கதையில் மெல்லிய நகைச்சுவை உண்டு

மொத்தத்தில் எந்த ஓர் கதையும் பிரமாதம் என்று சொல்ல முடியாவிட்டாலும் பெரும்பாலன படைப்புக்கள் வெற்றிகரமானவை என்பதே என் கணிப்பு.

**ஏ.ஜே.கனகரட்ணா.**
**15/23, முத்துமாரியம்மன் வீதி,**
**திருநெல்வேலி.**
**03-09-1998**





# இலக்கியல்வாத எழுத்துக்கள்

காணி உறுதி (1998), வீடு (1994) ஆகிய சிறுகதைக் கோவைகளை ஏலவே ஈழத்து இலக்கிய உலகிற்கு அளித்த இளையவன் வழங்கும் மூன்றாவது சிறுகதை கோவை இந்நூலாகும். முன்னே கூறப்பட்ட நூல்கள் வெளிவந்த காலங்களும் பின்னணிகளும் எழுத்தாளனின் அநுபவங்களும் அவன் காலூன்றி நின்ற தளங்களுமே அக் கதைக் கோவைகளின் கதாமாந்தர்களையும் களங்களையும் கருப்பொருட்களையும் தீர்மானித்தன. உருவ அமைதியையும் வடிவமைத்தன. உருவமும் உள்ளடக்கமும் படைப்பு நிலை சார்ந்த இலக்கண அணிகளாக இருந்த பொழுதிலும் படைப்புக்கு அப்பால் நின்றும் ஒரு பேரணியாக இயங்க வேண்டிய நிர்ப்பந்தங்களும் இவற்றுக்குண்டு என்பதனைத் தற்கால பிறநாட்டு தேசிய இலக்கியங்கள் உணர்த்தி நிற்கின்றன. இந்த இலக்கியல்வாத நிலையில் இவரது எழுத்துக்கள் எழுகின்றன என்பதனை எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது.

இலக்கியங்களைக் காலம் வடிவமைக்கும்போது கலைஞன் ஒருபோதும் சுயமாக இயங்க முடியாது.காலத்தின் கட்டளைக்கு கட்டுப்பட்டே ஆகவேண்டும். அக்கட்டுத்தளையை மீறுபவன் சமூகத்தையும் அதற்கு அவன் ஆற்ற வேண்டிய பணியினின்றும் தன்னை விடுவித்துக் கொள்பவனாகின்றான். இந்தக் கலை கட்டுத்தளைகள் அரசியல், பொருளாதார சமூகம் மட்டும் சார்ந்ததாக அமையாது. அகில உலகமும் தழுவிய மானுடம் சார்ந்ததான விழுமிய அழகியல் பண்பாட்டு வகையிலான படைப்பியலிலும் இறுக்கம் கொள்கின்றன.

இந்த உண்மையை இவரது சிறுகதைகள் உணர்த்தி நிற்கின்றன. காணி உறுதி, இதுவும் ஒரு காதற் கதை, வீடு என்பன சிறந்த எடுத்துக்காட்டுக்கள். அதே வேளைகளில் சமீப காலங்களில் எல்லாவற்றிலும் மேலோங்கி நிற்கும் பண்பு விவரணம். இப்பண்பு பல சமயங்களில் கலாபூர்வமாகவும் சில சமயங்களில் வெறும் பதிவுகளாகவும் அமைந்து விடுகின்ற விபத்தும் நிகழ்ந்து விடுகின்றது. ஈழத் தமிழர் வாழ்வில் சம்பவங்களுக்கும் உண்மைகளுக்கும் எண்ணிக்கையில் பஞ்சம் ஏற்பட்டதில்லை. சம்பவங்களும் அவற்றின் பின்னணிகளின் சித்தரிப்புக்களுமே கதையாகிவிடுகின்றன. எனவே கலைஞனின் மனநிலை கலைநுணுக்க வெளிப்பாடு பற்றிய சிந்தனையில் அக்கறை கொள்ள முனைவதில்லைப் போலும். இதனால் பலசமயம் இலக்கணக் கோட்பாடுகளையும், விதிகளையும் தளர்த்தவோ புறக்கணிக்கவோ முனைகிறான். அப்போது புதிதான இலக்கியவகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறக்கிறது, அல்லது இருந்த வடிவம் அழிகிறது. இதனால் **(Anti-Shortstory)** என்னும் புதியதான கலைவடிவம் தோன்றுகின்றது. இவரது இத்தொகுப்பில் புத்திசீவியம், நெருக்கடி நிலை, தடயங்கள் என்னும் கதைகளில் இதனைக் காணக்கிடக்கிறது. இக்கதைகள் தாம் கொண்டிருக்கும் நிகழ்வுகளாலும் அவற்றின் உண்மைகளாலும் யதார்த்த நிலைக்குப் போய் வாசகனின் வாசிப்பு நிலையைக் கடந்து அவனது வாழ்நிலையோடு ஒன்றிவிடுகின்றன. இந்நிலையில் எழுத்தாளன் வெறும் சித்தரிப்பாளனாகவே தோற்றம் கொள்பவனாகின்றான். போர்க்களம் என்னும் கதை இயல்பாக நடைபெறுகின்றது. நடைமுறை வாழ்வின் சின்னஞ்சிறு (ஆனால் மரணக்குழிவாழ்வு) சம்பவம். ஆனால் அதனைச் சித்தரிக்கும் ஆசிரியர் எந்தப்படாடோப கலை முயற்சிகளிலும் ஈடுபடவில்லை. அவரது மனம் அச்சம்பவத்தின் விளைவு பற்றியே நகர்ந்து கொண்டிருக்கிறது என்பதை அறியாமல் நாங்களும் அவரின் பின்னால் செல்கிறோம். விமலன் வீட்டாரிடம் விடை பெற்றுச் செல்லும் வேளையில் எங்கடை ஆக்களைத் தேடித்தான் போறன். ஆனால் போய்ச் சேருவேனோ தெரியாது.... என்று விமலன் புறப்படவும், சிறுமி சிந்துஜா ஓடி வந்து மாமா டாட்டா.... என்று கூறி விடையளிப்பதுடன் கதையின் பணி முடிந்து விடுகின்றது. பின்னால் கூறப்படுபவை தேவையற்றவை மட்டுமல்ல, அவன் என்னவானான் என்ற துடிப்பும், செத்திருப்பானோ? சீச்சீ.... சாகாமல் நண்பர்களுடன் போய்ச் சேர்ந்திருப்பான் என்ற ஐயமிக்க சந்தோசமுமாக வாசகனை நிறுத்துவது படைப்பு நிலையில் நல்ல பயனளிக்கும். இவரது எழுத்து முறையால் இந்த அனுபவம் என்பது அற்றுப்போய் நிகழ்ச்சிச் சித்தரிப்பு அல்லது செய்திதான் மிஞ்சும். ஆபத்தும் எழலாம். ஆனால் இன்று படைப்புக்களுக்கு உணர்ச்சி தேவையில்லை என்று தென்னக எழுத்தாளர்களான சா. கந்தசாமி, பிரபஞ்சன் போன்றோர் கூறுவதையும் இவர் கதைகளைப் படிக்கும்போது நினைவில் கொண்டால் இவரது எழுத்தைப் புரிந்து கொள்வது சுலபமாகவும் மாறிவிடும். இத்தொகுப்பில் போர்க்களம், வேப்பம்பூ, மறுபிறப்புகள் குறிப்பிடக்கூடியன.

**செம்பியன் செல்வன்.**
**அத்தியடி,**
**யாழ்ப்பாணம்,**
**10.01.1999**





# வாக்குமூலம்

இது எனது படைப்புக்களின் மூன்றாவது தொகுதி. தத்தளித்துக் கொண்டிருக்கும் தேசிய இனத்தின் இலக்கியக் குரலைப் பதிவு செய்வது என்ற ஆர்வத்தின் வெளிப்பாடாகவே எழுதத் தொடங்கினேன். நடந்தவற்றைச் சுட்டிக் காட்டுவதும், நடப்பவற்றைப் பதிவு செய்வதும் பேனாக்கள் தமது தோள்களில் சுமக்க வேண்டிய இலக்கியக் கடமை என்பது என் எண்ணம். 1988 செப்டெம்பரில் சென்னையில் காணி உறுதியை வெளியிட்டபோதும், 1994ல்யாழ்ப்பாணத்தில் "வீடு" வெளியிடப்பட்டபோதும் இக் கருத்துக்களை குறிப்பிட்டிருந்தேன். எனினும் இந்த இரு சந்தர்ப்பங்களுக்கும் வேறுபட்டதும் மாறுபட்டதுமான ஒரு சூழ்நிலையில் இந்த மூன்றாவது தொகுதி வெளியிடப்படுகின்றது. எனவேதான் இந்தப் போர்க்களத்தில் வாக்கு மூலம் வழங்க வேண்டியுள்ளவனாகவுள்ளேன். சீறிப் பாயும் துப்பாக்கிச் சன்னங்களும் விழுந்து வெடிக்கும் எறிகணைகளும் இல்லாமலேயே போர்களத்தின் மத்தியிலே வாழ்ந்து கொண்டிருக்கும் சூழல் வாய்த்துள்ள நிலைமை, போக்குவரத்து, மின்வசதி, உணவுப் பொருட்கள் வழங்கல் என மனிதனுக்குத் தேவையான அத்தியாவசியமானவைகள் கூட நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலை. போர் என்பது மனித வாழ்வையும்விட முக்கியமானதாக மாறிவிட்டிருக்கும் காலம். இந்தச் சூழலில் வாழ்பவர்களின் எண்ணவோட்டங்களை இந்தப் படைப்பின் பாத்திரங்கள் புலப்படுத்தும் என நம்புகின்றேன். இதேவேளை 1995 அக்டோபர் வரையில் அதாவது வலிகாமம் முழுவதும் இடம் பெயர்ந்தமைக்கு முன்னர் வரையிலான காலப் பகுதியில் என்னைப் போன்றவர்களுக்குள் குடியிருந்த நம்பிக்கைகள் பொய்த்து விட்டன என்பதும் வெளிப்படையாக ஒப்புக்கொள்ள வேண்டியதே. வெட்கத்துடனும் வேதனையுடனும், ஏற்றுக் கொள்ள வேண்டியதே. வானம்வரையும் படைபலம் உயர்ந்துவிட்டது என்றெண்ணி கனவுகளுடன் காலம் கழிக்க முடியாதளவிற்கு யதார்த்தங்கள் முகத்தில் அறைகின்றன. அரசியல் உரிமைகள் நிலைநாட்டப்பட்டதைவிடவும் அகதிகள் என்ற அவல வாழ்விற்கு உள்ளாக்கப்பட்டு நிற்கும் சாதாரண மக்களின் கவலைகள் அதிகமாகியுள்ளது. தலை நிமிர முடியாதளவிற்கு சந்தேகப் பார்வை துளைத்தெடுக்க தடுப்புக் காவல் கைதிகளாக பலநூறுபேர் விடுதலை வேண்டி தவமியற்ற வேண்டியதாகியுள்ளது. அத்தியாவசிய அடிப்படை வசதிகளுடனான வாழ்வு கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. எனவேதான் ஆயுதமேந்திய எதிர்ப்பியக்கம் நிலைநாட்டிய சாதனைகளைவிட நாளாந்த மக்கள் வாழ்வில் சுமத்தியுள்ள வேதனைகளே அதிகமாகிப் போயுள்ளது என்பதை குறிப்பிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியுள்ளது. வீரத்தை விடவும் விவேகம் அதிகமாக வேண்டப்பட வேண்டியதாகவுள்ளது. இத்தகைய காரணங்களாலேயே போர் தொடரப்பட வேண்டுமெனக் கருதி ஒத்துழைக்க இயலவில்லை. அதே வேளை பொறுப்புணர்வை பிரதி பலிக்காமல் பறந்து போன பலரைப் போல ஒதுங்கிக் கொள்ளவும் முடியவில்லை இதுவே எனது வாக்குமூலம் ஆகும். என்னை தேர்ந்த படைப்பாளியாகவோ அல்லது எனது படைப்புக்களை சிறந்த இலக்கிய சிருஷ்டிப்புக்கள் என்றோ நான் எப்போதும் கருதியது கிடையாது. எனினும் எனக்குள் பிறந்த சத்தியமான உணர்வுகளின் பிரதிபலிப்பே என் பேனாவின் பிரசவங்கள். இவற்றை அவ்வப்போது பிரசுரித்த ஈழநாதம், ஈழநாடு, கலைமுகம், தினக்குரல், தினமுரசு இதழ்களின் ஆசிரிய பீடத்தினருக்கும், இன்னுமொரு காலடி நூலாசிரியர் களுக்கும் இங்கு எனது நன்றிகளை வெளிப்படுத்திக் கொள்கிறேன்.

இந்தப் படைப்புக்கள் மூலமாக சம காலத்தைப் பிரதி பலித்துள்ளேன் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அத்துடன் சுயநலம் மிகுந்த சந்தர்ப்பவாத போக்குகளை எதிரொலிக்கவில்லை என்பதோடு இந்த மண்ணில் இப்போதும் வாழ்கின்ற வாழ விரும்புகின்ற மக்களுக்கு எந்த துரோகத்தையும் இழைத்துவிடவில்லை என்பதும் புரிந்து கொள்ளப்படுமாயின் மகிழ்ச்சி கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இந்த நூலின் வெளியீட்டுக்கு தோள் கொடுத்துதவிய ஈழமக்கள் ஜனநாயக் கட்சி(ஈ.பி.டி.பி) யின் செயலாளர் நாயகம் கே. என். டக்களஸ் தேவானந்தா அவர்களுக்கும் இந்த நூலை அழகுபட அச்சிட்டு வெளியிடும் கோல்டன் ஆட் நிறுவனத்திற்கும் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய பெரியார்களுக்கும், மற்றும் இந்நூலின் ஆக்கத்திலும் வெளியீட்டிலும் துணை நிற்கும் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள் உரியதாகும்.

**01-01-2000.**

**இளையவன்**
**க.பாலநடராசன்**
**ஊரெழு மேற்கு,**
**சுன்னாகம்.**





# 1. போர்க்களம்

"தம்பி இந்தாரும் தேத்தண்ணி"
கிறீச் என்ற மெல்லிய ஒலியுடன் கதவு திறபடுவதற்கு முன்பாகக் குரல் செவிப்பறையில் வந்து தட்டியது. விமலன் நித்திரை கலைந்து கண் திறந்தான். சூரியக் கதிர்கள் சில வட்டப் பொட்டாக. சுவரில் தொங்கிக் கொண்டிருந்த மணிக்கூடு நேரம் ஆறரை மணி என்பதை உணர்த்தும் வகையில் ஒரு தடவை ஒலித்து ஓய்ந்தது. இனியும் படுத்திருக்கக் கூடாது, ஆனால் இப்பவே எழும்பி செய்யிறதுக்கு என்ன வேலை கிடக்கு, விமலனின் மனம் எண்ணிக் கொண்டது.
"என்ன தம்பி ஏதோ கடுமையாக யோசிக்கிற மாதிரிக் கிடக்கு"
தனலட்சுமி கேள்வி எழுப்பினாள்.
"அப்படி ஒன்றும் விசேடமில்லை." என்றவன் படுக்கையை விட்டெழும்பினான். தலையணையின் அருகில் நோட்டம் விட்டு மறைத்து வைத்திருந்த பிஸ்டலையும், ரவைக்கூட்டையும் பார்வையால் அலசினான். குனிந்து அவற்றை எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டபின் தலையணையை ஓரமாக எடுத்து வைத்து விட்டுப் பாயைச் சுருட்ட ஆரம்பித்தான்.
"அது கிடக்கட்டும் தம்பி, தேத்தண்ணி சூடாற முன்னம் குடியுமன்."
தனலட்சுமி வேண்டுகோள் விடுத்தாள்.
"ஓமோம் கொஞ்சம் பச்சைத் தண்ணி தாங்கோ..... வாயைக் கொப்பளிப்பம்." விமலன் கூறினான்.
செம்பு நிறைய தண்ணீருடன் வந்த தனலட்சுமி, அறைக்கு வெளியே வர வேண்டாம் எனச் சைகை காட்டியபடி செம்பைக் கதவோரமாக வைத்துவிட்டு அப்பால் நகர்ந்தாள்.
"என்ன ஆச்சி இண்டைக்கு நேரத்தோட வந்திட்டியள்..."
"ஓம் பழுத்தல் இலை குத்திக்கொண்டு போவமெண்டு வந்தனான், ராத்திரியும் ஆட்டுக்கு ஆன தீன் போடல்ல...."
"அதுக்கென்ன முத்தத்துப் பிலாவில் விழுந்து கிடக்கிறதைக் குத்துங்கோவேன்." எனக் கூறிய தனலட்சுமி முன் வராந்தாவில் கிடந்த கதிரையொன்றில் இருந்து கொண்டாள். தான் கொண்டு வந்திருந்த நீளமான கம்பி ஒன்றில் ஒவ்வொரு பலா இலையாகக் குத்தி மேலுக்கு இழுத்து விட்டுக் கொண்டிருப்பதையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் தனலட்சுமி.
ஒவ்வொரு இலையாகச் சேர்த்து, சுமார் இரண்டரை அடி நீளமான இக்கம்பி நிறைய பலாவிலை சேர்ந்ததும், "பிள்ளை நான் போட்டு வாறன்" ஆச்சிமுத்துக்கிழவி நகர்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமோம் போட்டு வாருங்கோ!"
தனலட்சுமி வழியனுப்பி வைத்தாள். அவளையும் அறியாமலே ஒருவித நிம்மதிப் பெருமூச்சு தோன்றியது.

□ □ □ □ □ □

"இனியெண்டாலும் வெளியில வரலாமோ?
விமலனின் குரல் தனலட்சுமிக்குத் தெளிவாகக் கேட்டது.
"இது சரியான விண்ணாணம் பிடிச்ச கிழவி....உம்மை இதில கண்டால் ஆர் எவர் எண்டு விசாரிக்கத் தொடங்கி, அதைப் பிறகு பத்து வீட்டுக்குச் சொல்லித் திரியும். எதுக்கு வீண் சோலி"
தனலட்சுமி தனது செய்கைக்கு காரணம் கூறினாள்.
"ஓமோம்.... அது சரிதான்."
ஆனால் உள்ளத்தின் மூலையில் ஏதோ இடித்தது.
"இந்தாருங்கோ, இதை அம்மாட்ட குடுங்கோ."
தேனீர் கோப்பைகளை நீட்டினான் விமலன், குழந்தை சிந்துஜாவை நோக்கி. கண்களைக் கசக்கி கொண்டு அப்போது தான் நித்திரை விட்டெழுந்து வந்த சிந்துஜா "அம்மா" என்று சிணுங்கினாள்.
"இங்கே இருக்கிறன் வாங்கோ...."
எனக் குரல் கொடுத்த தனலட்சுமி குசினிக்குள் தனது வேலையில் மூழ்கியிருந்தாள்.
"எங்கையக்கா அண்ணையைக் காணேல்ல?"
கிணற்றடியை நோக்கி நடந்த விமலன் வினா எழுப்பினான்.
"அவர் பாலும் வாங்கிக் கொண்டு பேப்பரும் எடுத்து வாறன் எண்டு போனவர்" தனலட்சுமி கூறி முடித்தாள்.
"அம்மா எனக்குத் தேத்தண்ணி" எனச் சிணுங்கியபடி சிந்துஜா தாயினருகே வந்து சேர்ந்தாள்.
"உது ஆர் பிள்ளை...கிணத்தடியில... உன்ரை அவரின்ரை ஆக்களோ?"
ஆரோ கேள்வியும் கேட்டு பதிலும் கூறுவது விமலனுக்குத் தெளிவாகக கேட்டது.
"ஓமோம் அது எங்கட அவரின்ரை அண்ணன் பெஞ்சாதியின்ரை அக்கா புருஷன்ரை அண்ணணின் மகன்."
தனலட்சுமி நீட்டி முழக்கி ஒரு சொந்தம் சொன்னாள்.
"ஆ...ஆ....ஏதும் அலுவலாய் வந்தவரோ".?
அந்தக்குரல் அடுத்த கேள்விக்குத் தாவியது.
"ஓமோம் இங்கயிருந்துதான் இனிமேல் படிக்கப் போறார்.
தாய் தகப்பனவை தீவுப் பக்கத்தில் இருக்கினம்...ரியூசனுக்கு வந்து போறது கஸ்டம்...இங்க இருந்தால் ரவுணுக்கு போய்வர சுகம்தானே..." தனலட்சுமி





விபரித்தாள்.
"ஓமோம்.... உங்களுக்கும் உதவி ஒத்தாசையாய் இருக்கும் தானே" குரலுக்குரியவரின் அபிப்பிராயம் வெளிப்பட்டது.
"சாய்..... எத்தனைபேர் என்னென்ன விதமாய் எல்லாம் கேள்வி கேட்கினம்... இதுக்கெல்லாம் பதில் சொல்லித்தானே என்னைக் காப்பாத்த வேண்டிக் கிடக்கு" எண்ணிக் கொண்டபோது விமலனின் உள்ளம் துணுக்குற்றது. நாய்கள் உரத்துக் குரைத்தன. தொலைவில் கேட்ட குரைப்பொலி தொடர்ச்சியாக.... நெருங்கி நெருங்கி வருவதாக "...சலோ ...சலோ.. ஜல்தி....ஜல்தி" இந்தி மொழி வார்த்தைகளும் கூட கேட்கத் தொடங்கி விட்டன. விமலன் விரைவாக, ஆனால் நிதானமாக தனது குளிப்பை முடித்து விட்டு தனது அறைக்குள் வந்து புகுந்தான். பத்திரப்படுத்தி வைத்திருந்த பிஸ்டலை கைகளில் எடுத்தவன் திடீரென அதற்கு ஒரு முத்தம் கொடுத்து விட்டு நிமிர்ந்தான்.
"அவங்கள் சும்மா ரோட்டால போறாங்கள்... கடைசி ஆளும் போய்ச சேர்ந்திட்டான். நீர் சாப்பிடுமன்."
எதிரில் நின்ற தனலட்சுமி கேட்டாள். காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்த விமலன் இனி பகல் முழுவதும் என்னதான் செய்யிறது என அலுத்துக் கொண்டான்.
"நீங்கள் எங்கேயும் போகப் போறியளோ?" தனலட்சுமி கேட்டாள்.
"ஏனக்கா எங்க போறது? அதுகும் பகல் நேரம்.... ஆரும் கண்டால் வீண் சோலி..."
"இல்லை... நான் குளிக்கப்போறன்... வெளியில போறதெண்டா வெளிக்கேற்றைப் பூட்டுவம் என்றுதான் கேட்டனான்."
"நேரம் பத்தாகப் போகுது.. அண்ணரையும் காணேல்ல.."
"ஆரும் கிடைச்சிருப்பினம்.. கதைச்சுக் கொண்டு நிக்கிறாராக்கும்.." என விமலனுக்கு பதில் கூறிவிட்டு, "சிந்துஜா வாங்கோ" எனக் கூப்பிட்டுக் கொண்டு கிணற்றடியை நோக்கி நடந்தாள். மூலையில் கிடந்த கரம்போர்ட்டை எடுத்து குட்டி மேசையில் வைத்து காய்களை ஒரு விதமாக அடுக்கி வைத்தான் விமலன். காய்களை அடிக்கும் மஞ்சள் நிற டிஸ்க்கை எடுத்துக் கொண்டு ஒரு காய்க்கு மூன்று தரத்திற்கு மேல் குறி வைக்கக் கூடாது. ஒரு காய் இன்னுமொன்றில் தட்டுப்படக்கூடாது. இந்தப் பதின்மூன்று காய்களையும் குழியில் விழுத்த வேண்டும் என்று தனக்குத் தானே விதிமுறை வகுத்துக் கொண்டு ஆட்டத்தில் இறங்கினான்.
ஒன்று.. இரண்டு... மூன்று.... நான்கு..... ஐந்து... சனியன் பிழைச்சுப் போச்சு, மீளவும் காய்களை எடுத்து அடுக்கினான். மீண்டும் ஒன்று இரண்டு... மூன்று.... சாய் பிழைச்சுப் போச்சு. மீளவும் அடுக்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும்... மீண்டும்..
“மாமா சீப்பையும் பவுடரையும் எடுத்துத் தாங்கோ..” சிந்துஜா கேட்டாள். கண்ணாடிக்கு முன்பாக இருந்த சீப்பையும் பவுடரையும் எழும்பிப் போய் எடுத்தவன் இந்தாருங்கோ என நீட்டினான்.
“இங்க வாங்கோ நான் பிள்ளைக்கு தலையிழுத்து விடுறன்.”
விமலனின் அழைப்பை ஒரு பக்கமாக தலையைத் திருப்பி நிராகரித்தாள் அவள்.
“ஏன் மாமா நானும் வரட்டே விளையாட?”
“நீர் கரம் அடிப்பீரோ?”
“ஓமோம் நானும் இப்படிச் சுண்டுவன்” என விரல்களைச் சேர்த்துக் காட்டினாள்.
“இண்டைக்கு பள்ளிக்கூடம் போகல்லையோ?”
“நான் பள்ளிக்கூடமே போறனான், நேசரிக்கல்லோ போறனான்”
சிந்துஜாவின் குரலில் ஒருவித நளினம்.

□ □ □ □ □ □

அப்போது வெளிப்படலைக்கு அருகே சைக்கிளின் மணி ஒலிக்கும் சத்தம் கேட்டது. “ஆரெண்டு பாருங்கோ” எனச் சொல்லிய விமலன் டக்கென்று எழுந்து அறைக்குள் புகுந்தான். சிந்துஜா போய் படலையைத் திறந்தாள். சாரமும் சேட்டும் அணிந்த இருவர் வந்திருப்பதும் ஒருவரது கையில் உரப்பை ஒன்று இருப்பதும் தெளிவாகத் தெரிந்தது. வந்திருப்பவர்களின் கைகளில் ஆயுதங்கள் இருக்கக்கூடும் என்பதை ஊகித்துக் கொண்ட விமலன், வீட்டுக்கூரையின் கீழிருந்த லெவல் சீட்டுக்குள் தாவி ஏறிக் கொண்டான். கைத்துப்பாக்கியுடன் தன்னையும் மறைத்துக் கொண்டான். “என்ன வேணும்?” வந்திருப்பவர்களிடம் சிந்துஜாவின் கேள்வி.
“அப்பா இல்லையே?” சிறிது தடுமாற்றத்தின் பின்னர் ஒருவன் சிந்துஜாவைக் கேட்டான்.
“அப்பா கடைக்குப் போட்டார்” அடுத்ததாக என்ன கேட்கலாம்.... அவர்களுக்குள் ஒருவித குழப்பம்.
“வீட்டில் வேறு ஆரம்மா இருக்கினம்.”
செல்லக்குரலில் ஒருவன் கேட்டான்.
“அம்மா” என்றாள் சிந்துஜா
“அம்மாவை வரச் சொல்லுறியளோ.?” என்றான் மீண்டும்.
“அம்மா குளிக்கிறா”
இதனிடையே தோளில் போர்த்த துவாயும், நெஞ்சுவரை உயர்த்திக் கட்டிய பாவாடையுமாக வந்த தனலட்சுமி,
“படலையில ஆர் பிள்ள....” என்றாள் சிந்துஜாவை நோக்கி.





“ஆரோ ரெண்டு மாமாவை வந்திருக்கினம்” சிந்துஜா பட்டெனக் கூறினாள்.
“முன் விறாந்தையில் வந்து இருக்கச் சொல்லுங்கோ...” தனலட்சுமி அறையொன்றினுள் புகுந்துவிட்டாள். சற்றும் எதிர்பாராத இந்த அழைப்பையடுத்து வந்திருந்தவர்களில் ஒருவன் படலையைக் கடந்து வீட்டு வளவிற்குள் விறுவிறு என்று நடந்தான். மற்றவன் வேலியோரமாக உரப்பையுடன் நின்று கொண்டிருந்தான். “அம்மா” எனக் கூப்பிட்டபடி சிந்துஜா ஓடி வந்தாள்.
“மாமாவை வருகினம்........”
உரத்த குரலில் தெரிவித்தாள் அவள்.
“தம்பி விறாந்தையில் இருங்கோ, உடுப்பு மாத்திறன்.... வாறன்” தனலட்சுமி பலத்த குரலில் தெரிவித்தாள். அங்குமிங்கும் திரும்பி இரு கண்களாலும் எதையோ துழாவித் தேடிக்கொண்ட அவன் சிறிது தாமதித்து முன் விறாந்தையில் இருந்த கதிரையொன்றில் அமர்ந்து கொண்டான். சிந்துஜா அவனுக்கு முன்பாக நின்று கொண்டிருந்தாள். “உங்கட அப்பாவுக்கு பெயரென்ன?”
“அருணாசலம்”
“உங்களுக்கு என்ன பேர்?”
“சிந்துஜா”
அறைக்குள் இருந்து வெளியே வந்த தனலட்சுமி
“என்ன தம்பி என்ன விசயம்?” என்றாள்.
“அருணாசலம் வீடு இதுதானே?”
“ஓமோம் அவர் வெளியில் போட்டார்”
“இங்க விமலன் எண்டு ஆரும் இருக்கினமோ?” கேள்வி செவிப்பறையில் வந்து பட்டதும், விமலனுக்கு நெஞ்சு திக்கென்றது. என்ன பதில் வரப்போகின்றதோ? அடுத்து என்ன நிகழப்போகின்றதோ? என்று மனம் திடுக்குற்றது.
“நீங்கள் ஆரைத்தேடி வந்த நீங்கள் தம்பி?”
“விமலன் அல்லது ரமேஸ் எண்டு சொல்லுவினம், முந்தி இங்க ரியூட்டரியில படிச்சவர், நெடுந்தீவு ஆள்.”
“அப்படி ஒருத்தரும் இங்க இல்லையே” அவள் நறுக்கெனப் பதிலளித்தாள்.
“அருணாசலம் வீடு இதுதானே... இங்க தான் நிக்கிறது எண்டு சொன்னவர்..” அவன் திரும்பவும் கேட்டான்.
“இவருக்கும் அதுதான் பெயர்.... ஆனால் நீங்கள் சொல்லுகிற மாதிரி ஒருத்தரும் இங்க இல்லை.” அவள் திட்டவட்டமாகத் தெரிவித்தாள்.
“சரி அப்ப நான் போட்டு வாறன்” என்று கூறி அவன் திரும்பிய வேகத்தில் கதிரை சுவருடன் சென்று மோதியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனமாக.. ஆனால் அவனுக்கு 'கோபம் வந்துவிட்டதை யூகித்துக் கொண்டவளாக அவள் தலையசைத்தாள். படலைவரை போனவன் திரும்பி, "எப்ப வந்தால் அவரைச் சந்திக்கலாம்?" என அங்கேயே நின்றபடி கேட்டான்.
"இப்ப கடைப் பக்கம் போனவர், வந்து வேலைக்குப் போனால் இரவு வர நேரம் செல்லும்... எதுக்கும் நாளைக்கு வெள்ளணத்தோடு வாங்கோவன்" எனப் பதிலளித்தாள். படலையை நோக்கி நடந்தபடி. வந்த இருவரும் சைக்கிளில் தாவி ஏறி வேகமாக மறைந்தனர். படலை வரை அவள் சென்று விட்ட போது எவரையும் காணவில்லை. படலையை சாத்தி கொழுவியைப் பூட்டிவிட்டு திரும்பினாள்.

"இங்க மாமா கூரைக்குள் இருந்து வாறார்." சிந்துஜா கூறினாள்.
"இப்ப ஏன் உப்பிடிக் கத்துறாய், மெதுவாக கதையன்"
அதட்டினாள் தனலட்சுமி. அதனிடையில் படலையடியில் மீண்டும் சத்தமும் ஆரவாரமும் கேட்டது. ஓடிப்போன சிந்துஜா, படலையைத் திறந்தபடி, "அப்பா வாறார்" என்றாள். தலை நிறைய ஒட்டறையும் தேகம் முழுவதும் ஊத்தையும் கரியுமாக விமலன் நின்ற கோலம அருணாசலத்திற்கு ஆத்திரமூட்டியது.
"இதென்ன கோலம் தம்பி... வினோத உடைப் போட்டிக்கு வெளிக்கிட்ட மாதிரி..." அவர் கூறி முடிப்பதற்கிடையில்
"இனியும் இங்க நிற்கிறது சரிப்பட்டு வராது அண்ணே.."
விமலனின் குரலில் இறுக்கம் தொனித்தது.
"என்ன நடந்தது? என்ன பிரச்சனை இங்க உமக்கு"?
"அவனவை இங்கயும் வந்திட்டுப் போறாங்கள்."
"நீர் ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம். உம்மை பாதுகாக்கிறது என்ரை பொறுப்பு" அருணாசலம் கூறினார்.
"அது நீங்கள் நினைக்கிற மாதிரி அவ்வளவு சுலபமான வேலையில்லை அண்ணை."
விமலன் கூறியபோது கையிலிருந்த பிஸ்டலின் ரவைக்கூடு தனியாக்கப்பட்டது. விரல்களால் ஒவ்வொரு ரவையாகக் கழற்றி எடுத்த அவன் பிஸ்டலின் ஒவ்வொரு பாகத்தையும் தனித்தனியாக கழற்றினான்.
"உந்த கிறிஸ் பேணியத் தாங்கோ" எனக் கேட்ட விமலன், சாக்குத் துணி ஒன்றை எடுத்து நன்கு உதறி விரித்து விட்டு அதில் குந்திக் கொண்டான். பிஸ்டலின் ஒவ்வொரு பகுதிக்கும் நன்கு கிறீஸ் பூசி பொலித்தீன் பேப்பர்களால் நன்கு சுற்றி அதற்கென இருந்த பெட்டிக்குள் பத்திரப்படுத்தி வைத்தான். பின் மண்வெட்டியை எடுத்துக் கொண்டு நடந்தான். இவனது செயல்கள் ஒவ்வொன்றையும் கவனித்துக் கொண்டிருந்த அருணாசலம் எதுவும் புரியாதவராக முழித்துக் கொண்டார். சற்று நேரத்தில் நன்கு குளித்து உடைமாற்றி கம்பீரமான தோற்றத்தில்





விமலன் வந்தான். "என்ன தம்பி எங்கேயோ வெளிக்கிடுகிற மாதிரி கிடக்கு?" தனலட்சுமி கேட்டாள்.
"ஓமக்கா.... நான் ஒரு முடிவுக்கு வந்திட்டன். இனியும் இப்படி ஒழிச்சு... ஒழிச்சு சீவிக்க ஏலாது." என்ன வார்த்தை சொல்லி எப்படி அவனைத் தடுப்பது என்பது தெரியாமல் தனலட்சுமியும் அருணாசலமும் தடுமாறினர்.
"உங்கட ஆக்கள் ஆரும் வந்தால்." அருணாசலம் மெல்லிய குரலில் இழுத்தார்.

"எங்கட ஆக்களைத் தேடித்தான் போறன், ஆனா போய்ச் சேருவனோ தெரியாது. உங்களுக்கு நல்லாத் தெரிஞ்ச ஆக்கள் ஆரும் வந்தால்... இதை மட்டும் குடுங்கோ" என்று கூறி ஒரு காகிதத் துண்டை நீட்டினான். அவன் போகும் திசையையே அருணாசலமும் தனலட்சுமியும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.
சிந்துஜா ஓடி வந்து "மாமா டட்டா.. மாமா டட்டா.." எனக்கூறித் தலையசைத்தாள். "போகேக்கை பின்னால் கூப்பிடப்பிடாது..." எனத் தாய் கூறிக் கொண்டிருப்பதை அவள் பொருட்படுத்தியதாக இல்லை.

□ □ □ □ □ □

விக்டோரியா வீதியும் பலாலி வீதியும் சந்திக்குமிடத்தில் அடையாளம் தெரியாத ஒரு இளைஞனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்ற செய்தி பிரசுரமாகியிருந்தது. அதனைக் கவனித்த அருணாசலம் ஒவ்வொரு எழுத்தையும் உன்னிப்பாக வாசிக்கலானார். துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சுமார் இருபத்தி நான்கு மதிக்கத்தக்க இளைஞரொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. ரவுசர் சேர்ட் அணிந்த நிலையில், நன்கு சவரம் செய்யப்பட்ட முகத்தையுடைய இச்சடலம் அடையாளம் காணப்படுவதற்காக ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது என்பதற்கு மேலே ஒரு எழுத்தையும் படிக்க முடியாமல் கண்களை நீர் மறைத்து விட்டது.

**ஆகஸ்ட் - 1990**

**நன்றி : இன்னுமொரு காலடி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. தருமாற்றம்

''டேய் மொட்டையா வாடா வெளியில''
விடிந்தும் விடியாததுமான அதிகாலையின் இருட்டுக்குள் வீட்டு வாசலில் இந்தக் குரலைக் கேட்ட தாவீதன் திடுக்கிட்டெழுந்தான். ஓலைப் பாயைக் காலால் எட்டி உதைத்துவிட்டு கதவுப் பக்கம் விரைந்தான். கிறில் கற்களின் இடைவெளிக்கு ஊடாக இருவர் வெளியே நிற்பது புலப்பட்டது. ஓடிச் சென்று கதவுகளை திறந்தபோது ஆச்சரியம் மேலிட்டது. பூமகனும் கண்ணனும் சைக்கிளை விட்டிறங்கி நின்று கொண்டிருந்தனர்.
''வாங்கோ.... வாங்கோ என்ன விடியப்பறமாகவே இந்தப் பக்கம்....'' தாவீதன் அன்பான அழைப்புடன் விசாரிப்புக்களை விடுத்தான்.
''நீ செய்த வேலை சரியோ.. உன்னால் எவ்வளவு பிரச்சினையள் வரப்போகுது எங்களுக்குத் தெரியுமே''
பூமகனின் வார்த்தைகள் கோபம் கலந்த தொனியில் வெளிப்பட்டன.
''என்னடாப்பா... என்ன.. விளக்கமாய் கதைப்பம்.. வாங்கோவன், வந்து இருங்கோவன்'' தாவீதன் குரலில் கெஞ்சல்கள்.
''நீ செய்த வேலைக்கு உன்ரை வீட்டுக்கை வரவே மனம் இல்லை. இனிமேல்பட்டு இப்படிச் செய்தாயென்றால் நடக்கிறது வேற'' எனக் கூறிக் கொண்டே விறுக்கென சைக்கிளுக்குத் தாவினான் கண்ணன். ஓடிச் சென்ற தாவீதன் சைக்கிளின் காண்டிலைப் பிடித்தபடி,
''என்னடாப்பா என்ன செய்து போட்டன்.. அதையாவது சொல்லேன்'' என்றான் அப்பாவித்தனமாக.
''செய்த உனக்கு தெரியும்தானே'' கோபம் கொப்பளித்தது கண்ணனுக்கு.
''உண்மையாகவே நீங்கள் என்ன சொல்லுறியள் எண்டே எனக்கு விளங்கேல்லை'' தாவீதன் முறையிட்டான்.
''செய்யிறதையும் செய்து போட்டு நடிப்பும் வேற எடுடா கையை நான் போறன்.'' கண்ணன் சைக்கிளின் பெடலை அழுத்தி உதைத்தான். சுமார் முப்பது வருட கால சினேகம் அறுந்து போவதைப் போல உணர்ந்த தாவீதன் திகைத்து நின்றான். கண்ணன் கோபத்துடன் போவதையும் பூமகன் வாசலில் நிற்பதையும் கண்ட தாவீதனின் மனைவி அருளம்மா ''உள்ளுக்கு வாங்கோ'' என அழைத்தாள்.
பூமகனின் கைகளை இறுகப் பற்றிய தாவீதன் ''வாடாப்பா.. வா என்ன நடந்தது எண்டாவது சொல்லு'' என்றான். வாசலில் செருப்பைக் கழற்றி வைத்து விட்டு கதிரையில் போயமர்ந்தான் பூமகன். அவனுக்கு அருகில் தானும் ஒரு கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டான் தாவீதன். பூமகன் உதிர்க்கக்கூடிய வார்த்தைகளுக்காக அருளம்மா காத்திருந்தாள்.





தாவீதனின் பிள்ளைகளான கீதன், பொன்கலன், கிருஷாந்தி ஆகியோர் கண்களைக் கசக்கியபடி எழுந்து சென்றனர். ''வெங்கட் இங்க வந்தவனோ'' பூமகன் நிதானமாகக் கேட்டான். பெயரைக் கேட்டதும் தாவீதனின் உடம்பில் வியர்வை அரும்பியது. ஓம் அல்லது இல்லை என்று எந்தப் பதிலையும் கூறாமல் ''ஏன் என்ன நடந்தது'' என்று பதட்டத்துடன் பதில் கேள்வி எழுப்பினான் தாவீதன்.
''வெங்கட் பற்றி உனக்கு ஒன்றும் தெரியாதோ?''
''என்னென்று சொல்லன்''
முந்தாநாள் பின்னேரம் வெங்கட் கண்ணன் வீட்டை போனவனாம்'' பூமகன் சொல்லி நிறுத்தினான்.
''ஆ...பிறகு''
''வேறையும் இரண்டு பேர் அவனோட போனவையாம். கையில் மற்றச் சாமான்களும் வைச்சிருந்தவையாம்''
''அவனுகள் அதில்லாமல் திரியிறேல்லைத் தானே...'' அப்ப இங்கயும் வந்தவையோ.. நீ கண்டனியோ'' பூமகன் கேள்வி எழுப்பி நிறுத்தினான்.
''இரண்டு மூன்று நாளைக்கு முந்தி வந்தவை. ஒரு ஐந்து கொத்து அளவில் அரிசியும் கொண்டு வந்தவை. ஒவ்வொரு நாளும் இரண்டு சுண்டு அரிசியும் போட்டுச் சோறு சமைச்சுத் தரச் சொல்லிக் கேட்டவை, நான் மாட்டன் எண்டிட்டன். எங்களிட்டையும் பெடியள் இருக்கு. அவை நித்தமும் இங்க வந்து போகத் தொடங்கினா பிறகு ஆமியால பிரச்சனையள் வரும் தானே. முந்தி நாங்கள் எவ்வளவு உதவி செய்தனாங்கள் எண்டு உங்களுக்குத் தெரியும்தானே. என்ரை காப்பைக் கூட கழட்டிக் குடுத்தனான். ஆனா இப்ப நிலமை சரியில்லை, உந்த உதவியள் செய்யேலாது. நானும் படிப்பிக்கப் போறனான் இவரும் வேலைக்குப் போறவர். பகலில் வீட்டில் நாங்கள் இல்லாத நேரம் அவையள் வந்தால் கரைச்சல் தானே. பிறகு ஆமிப் பிரச்சினைகளும் வரும் எண்டு நான் அவைக்கு நேரேயே சொல்லிப் போட்டன். அதுக்குப் பிறகு அவையளை இந்தப் பக்கம் காணேல்ல'' தங்கு தடங்கலின்றி அருளம்மா கூறி முடித்தாள்.
''வெங்கட் கண்ணன் வீட்டை போனவனாமே?'' தாவீதன் கேள்வி கேட்டு நிறுத்தினான்.
''ஓமோம் கண்ணனை அவனுக்குத் தெரியாது, ஊருக்குள் விசாரிச்சுத்தான் கண்ணன் வீட்டைக் கண்டுபிடிச்சிருக்கினம். கண்ணன் வீடு தெரியும் தானே உனக்கு, ஒழுங்கையளுக்குள்ள.. சன நெருக்கடி உள்ள இடம். இவர்கள் வந்து விசாரித்ததால் ஊருக்கை ஒரே அமுலோதி.. கண்ணனுக்கு ஏதோ பிசகு என்று கதை... அதாலதான் கண்ணனுக்கு கோபம்'' பூமகன் இடைநிறுத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவங்கள் இருக்கேக்கை கண்ணனுக்கு எவ்வளவு உதவி செய்தவங்கள். அவங்கட பஜிரோவில் ஏறித்திரிந்தான். மோட்டச்சைக்கிள் கொண்டு வந்து வைச்சிருந்தான். அவங்கள் செய்யிறது சரியெண்டு மேடை மேடையாப் பேசித்திரிந்தான். ஏன் அவங்களுக்காக நிதியும் சேர்த்துக் கொடுத்தவன்தானே. அவனுக்கு ஏன் பிசகு வரப்போகுது" தாவீதன் பதில் கேள்வி எழுப்பினான்.
"அதெல்லாம் சரி.... அந்தக்காலம்... ஆனா... வெங்கட்டுக்கோ அவனோட வந்தவைக்கோ கண்ணனத் தெரியாதாம். நீ தான் சொல்லி அனுப்பிப் போட்டியாம். தன்னைக் காட்டிக் கொடுத்திட்டியாம் எண்டு தான் கண்ணன் விசரில் நிக்கிறான். ராத்திரிகூட வீட்டில் படுத்திருக்கப் பயந்து என்ரை வீட்டை வந்து படுத்திருந்தவன்" பூமகன் கூறவும் தாவீதன் வாயடைத்து நின்றான். அருளம்மா அவ்விடம் விட்டு மெல்ல அகன்றாள் தாவீதனை முறைத்தபடி. கண்ணனின் குடும்ப அமைதியை தான் குலைத்துவிட்ட குற்ற உணர்வு மேலோங்கி தாவீதனின் மனம் குறுகுறுத்தது.
"ஏன் அவங்களால ஏதும் பிரச்சினை வருமெண்டே கண்ணன் பயப்படுகிறான்.?"
"அப்படியில்லை.. இவங்க ரெண்டு மூன்று தரம் வந்துபோக ஆரும் கண்டு ஆமிக்குச் சொல்லிப் போட்டால் பழையதுகள் எல்லாம் கிளறப்படுமெல்லே... அதுதான் யோசிக்கிறான்" பூமகன் எடுத்துரைக்கவும் தாவீதன் குறுக்கிட்டான்.
"போராட்டம் என்டு வந்தால் கஷ்டங்களும் வரும்தானே, விடுதலை தேவை எண்டால் சிரமங்களுக்கும் முகம் கொடுக்கத்தானே வேணும் எண்டெல்லாம் கண்ணன் பேசித் திரிஞ்சவன்தானே?"
"ஓமோம்.. அது சரி... அதெல்லாம் இப்ப பழங்கதையாப் போச்சு" எனப் பூமகன் கூறிக் கொண்டிருக்கையில் படாரென ஒரு வெடிச்சத்தம் பலமாக ஒலித்தது. யன்னல் கண்ணாடிகள் அதிர்ந்தன. அருளம்மா தட்டில் வைத்துப் பக்குவமாக எடுத்து வந்த தேநீர்க் கோப்பை சரிந்து தேனீர் சிந்தியது.
"சந்திப் பக்கம்தான் என்னவோ வெடிச்சிட்டுது போல" எனப் பூமகன் சொல்லிக் கொண்டான். வெளியே வந்த தாவீதன் சைக்கிளுக்குத் தாவி ஏறி சந்திக்கு விரைந்தான். எதுவும் நடக்கவில்லை என்பது போல ஒவ்வொருத்தரும் தத்தம் பாட்டுக்குச் சென்று கொண்டிருந்தனர். தேநீர்க் கடை ஒன்றிக்கு முன்னால் சைக்கிளை நிறுத்திய தாவீதன் "சிகரட் ஒன்று தாருங்கோ" என காசை நீட்டியபடி "என்ன ஏதோ சத்தம் பெரிதாய் கேட்டுது" என விசாரித்தான். சிகரெட்டை எடுத்து நீட்டியபடி கடைக்காரர் அருகில் இருந்த மதகுப் பக்கத்தைச் சாடையால் காட்டினார். பச்சை இரத்தம் பாய நிலத்தை முத்தமிட்டபடி ஒருவன் கிடந்தான். அருகில் சென்று அவனை அடையாளம் காண ஆர்வம் உந்தினாலும் அச்சம் தடுத்தது. வைத்த கண்ணை எடுக்க முடியாமல் தவித்தான்.
கணங்கள் நிமிடங்களாக கரைய... படையினர் வாகனம் விரைந்து வந்து நின்றது. தடதடவெனக் குதித்த படையினர் துப்பாக்கிகளைப் பிடித்தபடி





நிலையெடுத்துக் கொண்டனர். மெதுவாக அடிக்கு மேல் அடியெடுத்து வைத்து மதகுப் பக்கம் சென்ற ஒருவன் நிதானமாக அவ்வுருவத்தை உருட்டினான். முகம் சிதைவடைந்திருந்தாலும் வெங்கட் தான் என்பதை தாவீதன் இனங் கண்டு கொண்டபோது மனம் வேதனையில் மூழ்கியது. சிலையாக நின்றான். "நல்ல வேளை முதலே வெடிச்சிட்டுது. இல்லாட்டில் இதில் இருக்கிற எல்லாக்கடைக்காரரும் தான் செம சாத்து வாங்கவேண்டி வந்திருக்கும்" கடைக்காரர் கூறியது தெளிவாகக் கேட்டது. திரும்பிப் பார்த்தான். "என்ன மாஸ்டர் வெறும் மேலோட நிக்கிறியள்.." என்ற கேள்வியால் தன்னிலை உணர்ந்த தாவீதன் சைக்கிளுக்குத் தாவி மறைந்தான்.

**ஜனவரி 1997**

**நன்றி :- தினக்குரல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. ஆறாத காயம்

"இங்க வா தம்பி"
பூசை அறையிலிருந்த சாம்பசிவக்குருக்களின் குரல் ஒலித்தது. வாசலுக்கருகே சப்பாத்துக்குள் காலைத் திணித்துக் கொள்ள சிரமப்பட்டுக் கொண்டிருந்த பிரகலாதன் அதை அப்படியே விட்டுவிட்டு மெல்ல எழுந்து தந்தையிடம் சென்றான். காலைநேர சிவபூசையை முடித்துக் கொண்ட குருக்கள் சிறிதளவு விபூதியை எடுத்து பிரகலாதனின் நெற்றியில் தடவினார். "கோயிலை ஒரு தரம் கும்பிட்டிட்டுப் போ, இந்த வேலை கட்டாயம் கிடைக்கும்." ஆசி கூறினார். கண்களை மூடி ஒரு தரம் மௌனமாக பிரார்த்தித்துக் கொண்டான் பிரகலாதன். சப்பாத்துகளினுள் காலை திணித்து கழுத்துப் பட்டியையும் சரி செய்து தனது சைக்கிளில் ஏறிக் கொண்டான். "கவனமாய் போட்டு வா மோனை" பாட்டி வீட்டிற்குள்ளிருந்து குரல் கொடுத்தாள். "சேர்ட்டிபிக்கட்டுகள் எல்லாம் எடுத்துப் போட்டியே அண்ணை" தங்கை கங்கா கேள்வி எழுப்பினாள். "ஓமோம் நான் போட்டு வாறன் அம்மா" என்று கூறியபடி பிரகலாதன் சைக்கிளை மிதிக்கத் தொடங்கினான். "சப்பாத்தும் ரையும் லோங்சும் சேர்ட்டுமாய் பெடியன் வெளிக்கிட்டுப் போறதை ஆரும் கண்டாலும் கண்ணூறு பட்டுப்போம். திரும்பி வந்த உடன் திருஷ்டி சுத்திப் போட வேணும் பிள்ளை கண்டியோ" பாட்டி தன் மகளுக்கு உத்தரவு பிறப்பித்தாள். இதுதானே அவனுக்கு முதலாவது இன்டர்வியூ எண்டாலும் இந்த வேலை கிடைச்சிட வேணும். அம்பாளுக்கு நான் நேர்த்தி வைச்சிருக்கிறன். இவ்வளவு காலமும் பிள்ளை எவ்வளவு கஷ்டப்பட்டுப் படிச்சது. அம்மா தனக்குள் சொல்லிக் கொண்டாள். "அவையள் கேட்டதையும் விட தகுதி கூட இருக்கு. அதோட கோசலா எண்டர்பிரைசஸ் மனேஜிங் டைரக்டர் அப்பாவுக்கும் தெரிஞ்சவர் தானே. ஆனபடியா இந்த வேலை கட்டாயம் கிடைக்கும். நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம்." கங்கா கூறினாள். அம்மாவுக்கு இருக்கிற பிரஷர் வருத்தம் தேவையில்லாத யோசனைகளால் கூடிவிடுமோ என்ற பயம் அவளுக்கு. குடும்பத்தவர்களின் கற்பனைக்கு களம் தந்த நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் கிடைத்த நாள் முதல் வேலையே கிடைத்துவிட்டது போன்றதொரு மகிழ்ச்சி பிரகலாதனுக்கு. சைக்கிளின் பெடலை கால்கள் இரண்டும் அமுத்தின. ஆனால் எண்ணம் எங்கெல்லாமோ பறந்து கொண்டிருந்தது. இந்த வேலை கிடைத்தால் முதல் மாதச் சம்பளத்தை எப்படி பகிர்வது என்றெண்ணிப் பார்த்தது ஒரு கணம். சம்பளம் எடுத்ததும் அம்பாளுக்கு முதல் வேலையா சகஸ்ரநாம அர்ச்சனை செய்விக்க வேண்டும். அம்மாவுக்கு ஒரு சாறி, தங்கைக்கு உடுப்பு வாங்க வேணும். இந்தச் சப்பாத்து பழசாகிப் பழுதாய் போச்சு. புதுசு வாங்க வேணும்.





ஒவ்வொரு மாசமும் இருநூறு ரூபாயாவது மிச்சம் பிடிக்க வேணும். இவ்வளவுக்கும் எவ்வளவு காசு தேவைப்படும்? அம்மாவின் சாறிக்கு முன்னூறு, தங்கச்சிக்கு முன்னூறு, சப்பாத்திற்கு இருநூற்றியம்பது, சேமிப்புக்கு இருநூறு, கைச் செலவுக்கு ஒரு நூறு. இதுக்கே ஆயிரத்து நூற்றைம்பது வேணும். எவ்வளவு சம்பளம் தருவார்கள்? கோசலா எண்டர்பிரைசஸ் பெரிய நிறுவனம்தானே, சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம் என்றுதானே போட்டிருந்தவை, எவ்வளவு சம்பளம் கேட்கலாம், எனது தேவைகளோடை கணக்குப் பார்த்தால் குறைஞ்சது மாதம் ஆயிரத்து ஐநூறாவது வேணும். அவ்வளவு தருவினமோ? பெரிய எக்கவுண்ட் மாருக்கே ஆயிரத்து ஐநூறு, இரண்டாயிரம் ரூபாதானே குடுக்கினம். நான் கேக்கிற சம்பளம் கூடிப் போச்சு எண்டு வேலை இல்லை எண்டிட்டா என்ன செய்கிறது? எதுக்கும் எவ்வளவு சம்பளம் எதிர்பார்க்கிறீர்? என்ற கேள்வி வந்தால் நேரடியாக மறுமொழி சொல்லக்கூடாது. என்ற தீர்மானம் பிறந்தது. ஆனால் என்ரை ஐ.சி.எம்.ஏ பெஸ்ட் கிளாஸ் சேர்ட்டிபிக்கேட்டை பார்த்தவுடன் கட்டாயம் வேலை தருவினம். அதோட புக்கீப்பீங் செய்திருக்கிறன். தமிழ் ரைப்பிங்கும் செய்வன். கொழும்பு நாணயக்காரா கம்பனியிலும் வேலை செய்திருக்கிறன். இதுக்கும் மேல எக்கவுண்ட் கிளார்க் வேலைக்கு என்ன தகுதி வேணும். ஆயிரத்து ஐநூறுக்குக் குறைய எண்டால் வேலைக்குப் போய் வாறது கட்டுப்படியாகாது. சம்பளத்தில் கொஞ்சம் இறுக்கிப் பிடிச்சாலும் என்ரை வேலையில் திறமையைக் காட்டினால் பிறகு கூட்டித் தருவினம். அராலியிலிருந்து புறப்பட்டு கல்லுண்டாய்வெளி கடந்து துர்மணம் வீசி வரவேற்கும் பொம்மைவெளி பகுதிக்கு வந்தபோது வசந்தபுரம் என்ற பெயர்ப்பலகை கண்ணில் தென்பட்டது. குப்பைகள் கழிவுகள் வீதியின் இரு மருங்கும் நிறைந்து மேடாக காட்சி தரும் இப்பகுதிக்கு ஏன்தான் வசந்தபுரம் என்று பெயர் வைத்தார்களோ? இதைப்பற்றி நான் யோசித்து என்ன பயன்? நேரம் என்ன ஆச்சுதோ என மனம் நினைக்கவும் கண்கள் கடிகாரத்தை நோக்கின. சின்னக்கம்பி, பெரியகம்பி, வேகமாய் ஓடும் செக்கன் கம்பி பற்றியெல்லாம் கவலைப்படத் தேவையில்லாத டிஜிட்டல் கடிகாரம் அது. எட்டு நாற்பத்தைந்து எனத் துல்லியமாகக் காட்டியது. இன்னும் பதினைந்து நிமிடங்களுக்குள் போய்ச் சேர வேணும் என்னும் எண்ணம் பிறந்த வேளையில் கால்களுக்கு வேகம் தானாகவே கூடியது. சைக்கிளின் வேகத்தையும் கடந்து மனம் கோசலா எண்டர்பிறைசஸ் வாசலுக்கு விரைந்தது. யாழ்ப்பாண நகரத்தின் மத்தியிலிருந்து சற்று உள்ளே தள்ளி மூன்று மாடிக் கட்டிடமாய் நிமிர்ந்து நின்றது கோசலா எண்டர்பிரைசஸ். உயர்ந்த மதிலின் அருகாக காவற்கூண்டு. பாதுகாப்பு உத்தியோகத்தரின் தொடர்ச்சியான கண்காணிப்பு. அகலமான இரும்பு கேற்று. அதன் ஓரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபர்களுக்கான நடைபாதை வழி. வரிசையாக வளர்க்கப்பட்டிருக்கும் குரோட்டன்களும் அசோக மரங்களும். அர்த்தம் இழந்துபோன ஆடம்பரங்களாக ஓடாத வாகனங்கள் பலவற்றின் தரிப்பிடமாக கராஜ் கொட்டகை. அங்குமிங்குமாக பலர் போய் வந்து கொண்டிருந்தனர். மெல்லிய குரலில் பேசுவதும் சந்தடியற்று நடப்பதுமாக அவர்களின் செயற்பாடுகள். ரை கட்டிய கழுத்தும் சப்பாத்துக் கால்களுமாக அங்கிருந்த ஒவ்வொரு ஆடவரின் நடையுடை பாவனைகளிலும் ஒருவித கம்பீரம். அவர்களுக்கு சற்றும் சளைக்காத விதத்தில் எழிற்கோலமாக மங்கையர் சிலர். எனினும் குண்டுசி விழுந்தாலும் சத்தம் கேட்கக் கூடியவிதமான அமைதி. இத்தனையும் சேர்ந்து ஒருவித பிரமையை எவருக்கும் ஏற்படுத்தும். சைக்கிளின் திறப்பை கையில் எடுத்தபடி பிரகலாதன் பாதுகாப்பு அலுவலரை நோக்கி நடந்தான்.
“தம்பி இண்டர்வியூவிற்கே வந்தனீர்? என்றார் அவர்.
“ஓமோம்”
“லெட்டர் கொண்டு வந்தனீரோ”?
பைலை பிரித்து கடிதத்தை வெளியே எடுத்து அலுவலரிடம் நீட்டினான். கடிதத்தை வாங்கிய அவர் “உள்ளுக்குப் போய் இருங்கோ” எனப் பணித்தார். அறிமுகமில்லாத பலர் கையில் பைல்களுடன் கதிரைகளில் அமர்ந்திருந்தனர். அவர்களும் இந்த நேர்முகப் பரீட்சைக்காகவே வந்திருக்கின்றனர் என்பதை ஊகிப்பது சிரமமானதாக இருக்கவில்லை. கொத்துக் கொத்தாய் பூத்துக் குலுங்கும் ரோஜாச் செடிகளில் அல்லது விதம் விதமான நிறங்களில் வளர்க்கப்பட்டிருக்கும் குரோட்டன்களில் அல்லது நிழல் பரப்பியபடி பரந்திருக்கும் மல்லிகைப் பந்தலில் மனம் அப்போது லயிக்கவில்லை.

இண்டர்வியூ எப்படி நடக்கும்? என்னென்ன கேள்விகள் கேட்பார்கள்? எப்படி பதிலளிக்கலாம் என்பது போன்றவற்றிக்கு பதில் தேடியபடி இருந்தது மனம். ஒவ்வொரு பெயராக அழைக்கவும் ஒருவர் எழுந்து உள்ளே செல்ல மற்றுமொருவர் வெளியே வர நேர்முகப் பரீட்சை நடந்துகொண்டிருந்தது.
“சா.பிரகலாதன்,” பியூனின் அழைப்பு.

எழுந்தான். கழுத்துப்பட்டியைச் சரி செய்தான். தலைமயிரை ஒரு தடவை தடவினான். ஏனையோரை ஓரக் கண்ணால் பார்த்தான். நிமிர்ந்து நடந்தான். மூடிய அறையின் உள்ளே புகுந்தான். நீண்டதொரு மேசையின் அந்தப் பக்கத்தில் மூவர் அமர்ந்திருந்தனர். முற்றாக சவரம் செய்யப்படாத முகம். எண்ணெய் தடவி ஒழுங்காக வாரி விடப்பட்ட தலை, மடிப்புக்களை தெளிவாக காட்டும் சேர்ட், நடையை உற்று நோக்கினார். “குட்மோர்னிங் ஐ ஆம் பிரகலாதன்” என்றபடி அவன் மேசை அருகே சொல்லவும், “குட்மோனிங் டேக் யுவர் சீற்” என்ற பதில் வரவும் சரியாக இருந்தது.





நரை விழுந்த தலையும் வேட்டியும் சேர்ட்டுமாக ஒருவர் வலக்கைப் பக்கமாக இருந்தார். நெற்றியில் நிறைந்திருந்த திருநீற்றுப் பூச்சும் சந்தனப் பொட்டும் அவரது பக்தி விசுவாசத்தைப் பறைசாற்றியது. மூன்றாவது நபருக்கு சற்று பருமனான தோற்றம், மெல்லிய தாடி, நடுவில் இருந்தவர் கைகளை நீட்டியதும் பைல்களை ஒப்படைத்தான். ஒவ்வொரு பக்கமாகத் தட்டிப் பார்த்தார்
“வட் இஸ் யுவர் பாதர்?” வேட்டிக்காரரின் கேள்வி.
“கி இஸ் எ பிறீஸ்ட் அற் அராலி”
“சாம்பசிவக்குருக்கள் ஐயாவின் மகனா நீர்?”
நடுவில் இருந்தவரின் கேள்வியில் வியப்புத் தொனி. தலையசைப்பின் மூலம் பதிலளித்தான்.
“உம்மை வேலைக்கு எடுத்தால் பெயர் சொல்லிக் கூப்பிடுவதையா? ஐயா என்று அழைப்பதையா விரும்புவீர்?” இது வேட்டிக்காரரின் கேள்வி.
“மற்றவர்களை எப்படி அழைப்பீர்களோ அதே போல் என்னையும் அழைக்கலாம்.” பிரகலாதனின் பதில் நறுக்குத் தெறித்தாற் போல ஒலித்தது.
“மற்றவர்களை பெயர் சொல்லித்தான் கூப்பிடுவம். ஆனா உங்களை அப்பிடிக்கூப்பிட்டா உங்களுக்கும் மரியாதையில்லை, பாக்கிறவையும் ஒரு மாதிரி நினைப்பினம். என்டாலும் நாங்கள் வேலைக்கு வைச்சிருக்கிற ஆளை ஐயா எண்டு கூப்பிடேலாது தானே.” வேட்டிக்காரர் பல்லை இளித்தார். சடக்கென எழுந்து பிரகலாதன் பைலைப் பறித்து எடுத்தான். “என்ரை தகுதிக்கும் திறமைக்கும் தான் வேலை கேட்டு வந்தனானே தவிர சாதிக்கல்ல” அறையெங்கும் எதிரொலித்தது அவனது குரல்.

ஜுலை 1990

நன்றி: ஈழநாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. நியாயங்கள்

“இப்படியே இருந்தென்ன செய்யிறது, அஞ்சலா உழைச்சால்தானே குஞ்சுகளைப் பசி, பட்டினி கிடக்க விடாமப் பார்க்கலாம். பிலிப்பண்ணன்ரை போட்டில் போவப் போறன்” விடி வெள்ளி கிழக்கு வானில் எழும்பத் தொடங்கியிருந்த வேளையில் பிரான்சிஸ் தனது மனைவி அஞ்சலாவிற்குக் கூறினான்.

“பயமில்லையே அப்பா” அஞ்சலாவின் குரலில் பதட்டம். இரவின் இருளைத் தவிர்த்து விடச் சுடர்விடும் குப்பி விளக்கொளியில் கூட அஞ்சலாவின் முகமாற்றம் பிரான்சிசுக்கு நன்கு தெரிந்தது.
“ரோலரில் ஆழ் கடலுக்கு சென்று வந்த எனக்கு என்ன பயம். இது கரைக்கடல் தொழில்தானே.”
“இல்லையப்பா.... ஆமி கடலடங்கு சட்டம்.... அதுதான்” அஞ்சலா இழுத்தாள்.
“இங்கை பார் பிள்ளை... உதுகள் எல்லாத்துக்கும் பயந்து போய் வீட்டுக்கை இருந்தா பிள்ளையள் பட்டினியில் தான் சாக வேண்டி வரும். உங்க எல்லாரும்தானே போகினம். போகப் போறன் நீ ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம்.” பிரான்சிஸ்சின் குரலில் உறுதி தொனித்தது.

“சரி கவனமாய் போட்டு வாங்கோ” அவள் எழுந்து குசினிக்குள் புகுந்தாள். பிரான்சிஸ் கிணற்றடிக்குப் போய் கால் கை அலம்பி வந்தான். அஞ்சலா தேநீர் கோப்பைகளை நீட்டினாள். தேநீரை அவன் ரசித்துக் குடித்துக் கொண்டிருந்த வேளையில் அவள் மனம் பின்னோக்கிப் பறந்தது. கழுத்தில் தங்கச் சங்கிலி பளபளக்கும், விரல்களில் தங்க மோதிரம் மினுமினுக்கும், கட்டுமஸ்தான தேகக் கட்டு, மேனியின் நிறம் காகக் கறுப்பு என்றாலும் அஞ்சலா மனதுக்குப் பிடித்திருந்தது. சம்மாட்டி... சம்மாட்டி... என்று வாய்க்கு வாய் கூப்பிட்டபடி தொழிலாளர் பலரும் அவனைச் சுற்றி வலம் வருவர். நாட்டில் எங்கெங்கோ நடைபெற்ற சம்பவங்கள் பிரான்சிஸ்சின் வீட்டிலும்... ஆழ்கடல் தொழிலுக்குப் போன பிரான்சிஸ்சின் ரோலர் திடீரென வந்து மோதிய எறிகணையால் கடலுக்குள் மூழ்கிப் போனது. இரண்டு நாட்களாக நீந்திய பின் தொழிலாளர்கள் சிலர் கரைக்கு வந்து சேர்ந்தனர். நைலோன் வலைத் தொழில் செய்த பிளாஸ்டிக் போட்டும் அடிபட்டது. நேவிக்காரர் வலையைப் பறிச்சுப் போட்டாங்கள், எங்களுக்கு செமத்தியான அடியும் உதையும். முதுகையும் மார்பையும் காட்டியபடி தொழிலாளர்கள் வந்து சொல்லினர். சொந்தமாய் ரோலர் வச்சு... போட் வைச்சு.. தொழில் செய்த மனிசன்... இப்ப கூலியாய் போகுது. எண்ணம் குமிழியிட அவளது கண்களில் நீர் கோர்த்தது. “ஏன் பிள்ளை தொழிலுக்கு வெளிக்கிடேக்கை அழுகிறாய்?”





பிரான்சிஸ் குழைந்தான். “அது...வந்து... ஒன்றுமில்லையப்பா...” அவள் கூறினாள். சுட்டு விரலை நீட்டி அவளது கண்ணீரைத் துடைத்தான் அவன். “கவலைப் படாமலிரு... நான் போட்டு வாறன்... பிள்ளையள் கவனம்” அவன் விரைந்தான். “அண்ணை பிரான்சிஸ் அண்ணை” சவரிமுத்து படலையருகே கூப்பிட்டார். “நீங்களும் தொழிலுக்கோ?” அஞ்சலாவின் கேள்வி. ஓம் பிள்ளை எத்தனை நாளைக்குத்தான் வீட்டுக்கை தொழிலில்லாமல் கிடக்கிறது. நேரம் போகுது”

“இவர் கரைக்கடல் பக்கம் போட்டார்”
“சரி.. சரி.. நான் வாறன்”

“அம்மா பாப்பா,” உரத்த குரலோடு கண் விழித்தாள் மரியசீலி. தாயின் அணைப்பில் மகிழ்ந்திருந்த வேளையில் மூத்த பிள்ளைகளான யசிந்தாவும் ஸ்ரீபனும் கூட கண் விழித்துக் கொண்டனர். “எழும்பி முகத்தைக் கழுவுங்கோ.... தேத்தண்ணி ஊத்தித் தாறன்” எனக் கூறிக் கொண்டு அஞ்சலா குசினிப்பக்கம் நடந்தாள். உமிச்சாம்பலைக் கையில் எடுத்துப் பல் விளக்கியபடி ஸ்ரீபனும், யசிந்தாவும் கிணற்றடிக்கு நடந்தனர். விடிந்தும் விடியாததுமான அதிகாலைப் பொழுதில் மிகத் தூரத்தே கெலிகொப்டர் ஒன்றின் படபடக்கும் ஓசை மிகத் தெளிவாகவே கேட்டது. “பிள்ளைகள் கிணத்தடிக்குப் போகாதையுங்கோ... வெளியில தண்ணி வாளியில இருக்கு...” அஞ்சலா கத்தினாள்.

“அம்மா கெலி வருகுது..” என்றான் ஸ்ரீபன் அண்ணாந்து பார்த்தபடி “கெலி பதியுது.... வட்டம் போடுது... அண்ணை வீட்டுக்கை வா..” யசிந்தா கூக்குரலிட்டாள். “டேய் ஸ்ரீபன் கெதியாய் ஓடியாடா.” அஞ்சலா கூப்பிட்டாள். “அது எங்கையோ போகுது இப்ப ஏன் பதறுறியள்.” பூவரசமரத்தின் கீழ் ஒதுங்கிக் கொண்ட ஸ்ரீபன் தெரிவித்தான். சட... சட.... சடவென வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இரு தடவைகள் வட்டமிட்டபின் கெலிகொப்டர் உச்சி வானில் சென்று மறைந்தது. பாலாவி கரைக்கு அங்கால தான் சுட்டிருக்கிறான்போல்...” கெலிகொப்டர் தாக்குதல் நிகழ்த்திய இடம் பற்றி ஒருவரின் விமர்சனம். “உது பாலாவியாய் இருக்காது.... கொழும்புத்துறைப் பக்கம் போல..” இன்னுமொருவரின் கணிப்பு. “பொடியளின்ரை போட் எதுகும் வந்திருக்கும் அதுதான் சுட்டவன்களாக்கும்” மற்றுமொருவரின் கற்பனை. “கீழ் வந்து சுடப் பயம்... எட்டத்தில் நிண்டு கொட்டிப் போட்டு போறான்” அடுத்த ஒருவரின் வீறாப்பான பேச்சு. அஞ்சலாவின் நெஞ்சு திக்திக் என்று அடித்துக் கொண்டது. பாண் வாங்குவதற்காக கடைக்குப் போன ஸ்ரீபன் திரும்பி வந்தான். “தொழிலுக்குப் போனவையைக் கறுப்பு உடுப்புக்காரங்கள் வெட்டிப் போட்டாங்களாம் அம்மா” ஸ்ரீபன் கூறிய செய்தியால் அஞ்சலா திடுக்குற்றாள். “என்னடா சொல்லுகிறாய்?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சவரிமுத்து நீந்திக் கரைக்கு வந்திட்டாராம், அவர்தான் சொன்னதாம், கடையடியில ஆக்கள் கதைக்கினம்?"
என்ன சொன்னவராம்?"

"கறுப்பு உடுப்போட வந்தவனுகள் சிங்களத்தில பேசி போட்டில வந்தவையளை வெட்டினாங்களாம். சவரிமுத்து கடலில் குதிச்சு நீந்தினவராம்" ஸ்ரீபன் சொல்லி முடிப்பதற்கிடையில் அஞ்சலா நிதானமிழந்தாள். கையிலிருந்தவற்றை அப்படியே போட்டுவிட்டு ஓடினாள். கடற்கரையை அடைந்தாள். கடலில் எல்லைகளை நோக்கிப் பார்வையை எறிந்தாள்.

"ஐயோ.. என்ரை ராசா.. உனக்கென்னையா நடந்தது" எனக் குழறினாள். "ஐயோ.. நீயும் போட்டால் இந்தக் குஞ்சுகளை ஆரையா பாக்கிறது.." என அரற்றினாள். கடற்கரையெங்கும் அவளைப் போல பலர். இளம் தாய்மார் முதல் குடுகுடு கிழவிகள் வரை, குழந்தைகள் முதல் பெண்கள் ஆண்கள் எனப் பலரும் கடற்கரையில் குழுமினர். ஊர் முழுவதும் கடற்கரையில் கூடிவிட்டது. அனைவரது முகங்களிலும் வேண்டிய ஒருவரை இழந்து விட்டது போன்றதொரு உணர்வு. ஏக்கம்.. "போன ஆக்களைப் பார்த்துவர போட் ஒன்று போட்டுதெல்ல" யாரோ ஒருவர் வினவினார். "ஆரிட போட் போனது? ஆரார் போனவயள்?" மற்றுமொருவரின் கேள்வி. "அலெக்சியான்ரை போட்தான் போனது.. மிக்கேல், சிமியோன், பேதுறு, பர்ணாந்து, யேசுராசா ஆக்களோட சவரியும் போனவராம்." இப்படியே கேள்வியும் பதிலுமாக தொடர்ந்து கொண்டிருந்தது. போட் ஒண்டு கரைக்குச் சமீபமாக அண்மித்தது. போட்டை சுற்றி வளைத்து சனம் முண்டியடித்தது.

"எல்லாரும் வாசிகசாலைக்குப் போங்கோ." கட்டளையொன்று பிறந்தது. அதை அமுல்படுத்தும் வகையில் அங்கு திரண்டிருந்த இளைஞர்கள் பலரும் "வாசிகசாலைக்குப் போங்கோ" எனக் குரல் கொடுத்தனர். பச்சைத் தென்னோலைகள் பரப்பப்பட்டன. அவற்றின் மேலாக சடலங்கள் கொண்டு வந்து அடுக்கப்பட்டது. சிலவற்றின் தலை இருக்கவில்லை . சில சடலங்களில் மேனியெங்கும் வெட்டுக் காயங்கள்... சில சடலங்கள் ஊதிப் பெருத்து.. கோரம் நிறைந்ததுவாய்.... அழுகைக் குரலால் அந்தப் பிராந்தியமே அதிர்ந்து போனது. "கறுப்பு உடுப்போட வந்தவனுகள் வாளால் வெட்டினாங்களாம்" "சயனட் கத்தியால குத்தினவங்களாம். குதிச்சு நீந்தினவையளை கெலி துரத்திச் சுட்டதாம்." பலவிதமான கதையளும் அடிபட்டது. "இவ்வளவும் தானோ... இன்னமும் வேற சடலங்களும் கிடக்கோ..."
"நீந்தேக்கை சூடுபட்டுச் செத்தவையின்ரை சடலங்கள் இனித்தான் கரைக்கு ஒதுங்கும்." பிரான்சிஸ்சின் உடல் இருந்து விடக்கூடாது என்ற பலமான பிரார்த்தனையுடன் வந்த அஞ்சலாவின் கால்கள் அடியெடுத்து வைக்கவே





தயங்கின. "பிலிப்பண்ணையின்ரை போட்டில தானே பிரான்சிசும் போனது" என்று "கேட்டவரின் முகத்தைப் பாராமலே தலையை அசைத்தாள் அவள். அடுத்த அடியை எடுத்து வைத்த அவள் "ஐயோ" என்ரை ராசா" என்று கதறிக் கொண்டு ஓடினாள். கோரமாகச் சிதைந்திருந்த சடலமொன்றின் தலைப் பகுதியை மடிமேல் தூக்கி வைத்துக் கொண்டு கதறினாள். பிரான்சிசின் சடலம் நல்லடக்கம் செய்யப்பட்டு சில நாட்களில். ஸ்ரீபனை மட்டுமல்ல அவனோடு ஒத்த பலரையும் ஊரில் காணமுடியவில்லை. "இரத்தத்துக்கு இரத்தம்.. பழிக்குப் பழி..." பைத்தியம் பிடித்தவள் போல அஞ்சலா தெருவெங்கும் சொல்லிக் கொண்டு திரிகிறாள்.

**செப்டெம்பர் 1991**

**நன்றி : ஈழநாதம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. முரண்

ட்ரிங்.. ட்ரிங்.. சைக்கிள் மணி ஒலித்து ஓய்ந்தது.

''ஆரது.. என்ன.. விசயம்.''

குசினிக்குள் இருந்தபடியே ஜன்னலால் எட்டிப்பார்த்து குரல் கொடுத்தாள் கௌரி.

''கேசவன் நிக்கிறாரோ?'' சைக்கிளில் வந்திருந்த ஒருவன் கேட்டான். ஓமோம் எனக் கூறியவள் படலையை நோக்கி நடக்கத் தொடங்கினாள். அதனிடையில் வீட்டின் முன் பகுதிக்கு வந்துவிட்ட கேசவன் ''நில்லுங்கோ வெளிக்கிட்டு வாறன்'' எனக் கூறியபடி கிணற்றடிப் பக்கமாகப் போனான். ''வாருங்கோவன்... வந்து இருங்கோவன்'' அறைக்குள் இருந்து வெளியே வந்த பொன்னம்பலம், கேசவனின் தந்தை அழைப்பு விடுத்தார்.

''வந்து இருங்கோவன்.'' பொன்னம்பலத்தின் அழைப்பை அவரது மனைவி கௌரியும் ஆமோதித்தாள். சைக்கிளை நிறுத்திவிட்டு முன்பக்க வராந்தாவின் படிகளில் ஏறி கதிரைகளில் வந்தமர்ந்தனர். கௌரி குசினிக்குள் புகுந்து கொண்டாள்.

''தம்பியவைக்கு என்ன பேர்? எந்த ஊர் நீங்கள்?''

பொன்னம்பலம் கேள்வி எழுப்பினார்.

''நான் ரவி.. இவன் மூர்த்தி'' மெலிந்த உருவமும், உயர்ந்த தேகக்கட்டும் கொண்டிருந்தவன் பதிலளித்தான்.

''தம்பியோட படிக்கிற நீங்களோ''? அடுத்த கேள்விக்கு தாவினார். ஓமோம் ரியூசன் கிளாசில ஒண்டாய் படிச்சனாங்கள்.''

எப்படி எக்ஸாம் எல்லாம்... நல்லாச் செய்தனீங்களோ...

''என்னத்தை நல்லாச் செய்து என்ன..''

மூர்த்தி அலுத்துக் கொண்டான். வெறுப்பும் விரக்தியும் கலந்து அவன் பதில் கூறுவதாகப் பொன்னம்பலம் உணர்ந்தார்.

''தம்பி இப்ப கிளார்க் மற்றும் ரீச்சிங் போஸ்ட் எல்லாத்துக்கும் அப்ளிகேசன் கோல் பண்ணியிருக்கல்லோ. போடலாம்தானே?''. ''வேலை தேடுறதுதானே இப்ப எங்களுக்கு வேலை'' ரவி குறிப்பிட்டான்.

''சோதினை ரிசல்ட் வரும்வரையாவது வீண் பொழுதாய்க் கழிக்காமல் ஏதும் வேலை செய்தால் நல்லது தானே.'' தேநீர்க் கோப்பைகளோடு வந்த கௌரியின் ஆலோசனை.

''அதுக்குப் பிறகு தான் என்ன பெரிசாய் கிழிக்கப் போகுதாக்கும்.. அடுத்த நேரம் எங்க ஓடுறதெண்டு தெரியாமல் சனமெல்லாம் அந்தரப்படுகுது. வேலையொண்டுதான் இப்ப இல்லாத குறையாக்கும்.'' சேர்ட்டுக்குள் தன்னைத்





திணித்துக் கொண்டே கேசவன் பொரிந்து தள்ளினான். கௌரியும் பொன்னம்பலமும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். கேசவனோடு சேர்ந்து ரவியும் மூர்த்தியும் வெளியேறிப் போயினர்.

''தம்பியின்ரை போக்கு வர வர ஒரு மாதிரிக் கிடக்கு கவனிச்சீரோ'' பொன்னம்பலம் கேள்வி கேட்டார் மனைவியிடம்.

''சோதினையால இவ்வளவு நாளும் ஒரு இடமும் போகாமல் இருந்து படிச்சவன், இப்ப மன அமைதிக்காக சும்மா அங்கின இங்கின போனால் இவருக்கு...''

''அதில்லையப்பா.. ஆனா முந்தி அவனோட திரியிற கண்ணன், ராஜன், முரளி ஒருத்தரையும் இப்ப காணேல்ல... புதுப் புதுப் பெடியள் வருகினம்... கதையளிலயும் சாடையா விரக்தி தெரியிற மாதிரிக் கிடக்கு...'' பொன்னம்பலம் இழுத்தார்.

''என்ன சொல்லுறியள்... எனக்கு விளங்கேல்லை'' கௌரி குறுக்கிட்டாள்.

''இப்ப வந்தவை ஆரெண்டு உமக்கு வடிவாத் தெரியுமோ?''

''ஆர் ரவியையும், மூர்த்தியையுமே கேட்கிறியள்.''

''ஓமோம் அவைக்கும் இவனுக்கும் என்னெண்டு தொடர்பு''

''என்னப்பா என்ன சொல்லுறியள்'' கௌரி சினந்தாள்.

''உமக்கு வாழைப்பழத்தை உரிச்சு தந்தால் தான் விழுங்குவீர் போல,'' என முடித்தார்.

''ச்சீச்சீ... தம்பி படிச்ச பெடியன். அப்பிடியெல்லாம் போகமாட்டான்'' கௌரி நம்பிக்கை வெளியிட்டாள்.

''உதெல்லாம் நம்பேலாது, கவனமாய் இருக்க வேணும்''

''உள்ள நகை நட்டெல்லாம் வித்து வெளிநாட்டுக்கு அனுப்பின கொண்ணையின்ரை மகனுக்கு இவனையும் கூப்பிடச் சொல்லி கடிதம் எழுதி ஆறு மாதமாச்சு. அதுக்கு ஒரு பதிலும் இல்லை, மிடில் ஈஸ்ற்றுக்கு அனுப்புவம் எண்டால் அதுக்கும் வக்கில்லை. பிறகு என்னத்தையாம் கவனமாய் இருக்கிறது.'' கௌரி வெடித்துச் சீறினாள். ''உமக்கு என்ரை ஆக்களை இழுத்துப் பேசாட்டி திருப்தி வராதுதானே'' ''பின்ன என்னெண்டு கேக்கிறன், இந்த நாளையில கும்ப் பிள்ளையைக் கூட வைச்சிருக்கலாம். ஒரு பெடியனை வைச்சிருக்கிறது எண்டால் வைத்தில் நெருப்பைக் கட்டியிருக்கிற மாதிரிக் கிடக்கு... அதுக்குள்ள நொட்டை வேற''

''இப்ப உம்மை யார் நொட்டை சொன்னது'' பொன்னம்பலம் பணியலானார். கௌரி சாந்தமானாள்.

''கிளார்க் வேலைக்கு அவனை அப்ளிக்கேசன் போடச் சொல்லுமன். நீர் சொன்னால் அவன் கேட்பான்.'' பொன்னம்பலத்தின் ஆலோசனை.

''உதெல்லாம் கதைச்சு மினக்கெடக்கூடாது. போமை வாங்கி நிரப்பிப் போட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கோ நான் கையெழுத்து வாங்கித் தாறன்.'' கௌரி கூறினாள். பொன்னம்பலம் சைக்கிளுக்குத் தாவினார்.

□ □ □ □ □ □

''என்ன உலகமிது சீயெண்டு போச்சு. இனியும் இருந்து என்ன பிரயோசனம்'' கேசவன் சேட்டைக் கழற்றியபடி கூறிக் கொள்வதை கௌரி கேட்டாள்.

''என்ன தம்பி ஆரோட கதைக்கிறாய்?''

''இல்லை எணை... றோட்டால வெளிக்கிட்டுப் போய் சனத்தைப் பார்க்க என்னவோ செய்யுது.''

''ஏன்.. ஏன்... என்ன நடந்தது''

பண்டத்தரிப்பு... மாதகல் பக்கத்திலிருந்து சனமெல்லாம் ஓடி வருகுதுகள். கைக்குழந்தையோட கால் நடையா... ஓடிவாற சனங்கள் இருக்கிறதுக்கு ஒரு கூரைக்குக் கூட வழியில்லாம மரங்களுக்குக் கீழ் குந்தியிருக்குதுகள். புட்டுப் பானை, கேத்தல் தொடக்கம் வண்டில் மாடுவரை சாமானுகளோடை சனங்கள் அலையிற கோலம். உடுத்த உடுப்பைத் தவிர வேறு எதுவும் இல்லாமல் அந்தரப்படுகிற விதம். இப்படி எத்தின சனம் என்னென்ன விதமாய் எல்லாம் கஷ்டப்படுகுதுகள். இதுகளைப் பார்க்க மனதுக்கு சங்கடமாய் கிடக்குது.''

''இப்ப எங்க தம்பி போட்டு வந்தனீ'' கதையைக் திசைதிருப்பும் நோக்கில் கௌரியின் கேள்வி.

''அகதியளுக்கு உதவுறதுக்காக கிடுகு, உடுப்பு, அப்பிடி இப்பிடி சாமானுகள் சேர்த்துக் கொடுக்கத்தான் மூர்த்தி. ரவி ஆக்களோட போட்டு வந்தனான்.''

''தம்பி கேக்கிறன் எண்டு குறை நினைக்காதை. அவங்கள் இயக்கப் பெடியளோ'' தாயின் கேள்விக்கு எப்படி பதில் கூறுவதென்று யோசித்தான்.

''ஏன் மற்றவை இயக்கம் இல்லாமலே இருக்கினம்'' பதிலுக்கு கேள்வி தொடுத்தவன், ''ஒரு செம்பு நிறைய தண்ணி தாணை'' என்றான். ''மேலைக் கழுவிப் போட்டு வாவன் சாப்பிடலாம்'' என்றாள்.

அவன் கை, கால், முகங் கழுவிப்போட்டு வர, அவள் கோப்பையில் சோற்றைப் போட்டு வைத்தாள். ''பருப்புக்கறியோட சோத்தைச் சாப்பிடு, குழம்பும் கிடக்கு, அப்பளம் பொரிச்சு வைச்சனான் தாறன்''

''ஓமோம்'' எனத் தலையசைத்தவன் சாப்பிடத் தொடங்கினான்.

''கண்ணன் முரளியாக்கள் கிளார்க் வேலைக்கு அப்ளிக்கேசன் போட்டிருக்கிறாங்களாம் மெய்யோ?''

''ஓமாக்கும்... நான் கன நாளா காணேல்ல..''

''நீயும் போடலாம்தானே''

''போடலாம் ஆனால் வீண் தண்டம்''





''ஏன் தம்பி அப்படிச் சொல்லுறாய்''

''எங்கட சனத்தின்ர உயிருக்கே உத்தரவாதம் இல்லை, சனம் ஊர் ஊராய் திரிய வேண்டிக் கிடக்கு... அப்படி வைச்சிருக்கிற அரசாங்கத்திற்கு விசுவாசமான ஊழியனாய் எப்படி இருக்கிறது''

''அதுகளைப் பற்றி உனக்கென்னத்துக்கு கவலை... தம்பி உனக்கு வேலை கிடைச்சால் சரிதானே'' அவள் கூறினாள்.

அவன் உதடுகளை கடித்து மௌனமானான். இந்த மௌனம் சம்மதத்தின் அறிகுறியா? கலகத்தைத் தவிர்க்கும் நோக்கமுடையாதா?

**1992**

**நன்றி ஈழநாதம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. தடயங்கள்

ஒரு நொடி!
ஒரு கணம்!
ஒரு பேரிரைச்சல்!
ஒரு பெரு முழக்கம். அவ்வளவும் தூசுமண்டலமாக மாறிப் போய் விட்டது. கண் இமைக்கும் நேரப் பொழுதுக்குள் ஒரு கோரம் கண் முன்னே நிகழ்ந்தேறி விட்டது. நூற்றியம்பது ஆண்டு காலத்துக்கும் மேலாக அமைதியைத் தேடும் ஆத்மாக்களுக்கு அடைக்கலம் கொடுத்த ஆண்டவனின் இருப்பிடம் கற்குவியலாய் மாறிப் போய் விட்டது.
புகை மண்டலம்!
தூசிப்படலம்!

என்பவற்றுக்குள் மனிதர்களின் அவலக்குரல் ஐயோ அம்மா! ஆணடவனே! உச்சஸ்தாயில் எழுந்த கூக்குரல்கள், நெடுஞ்சாண் கிடையாக மண்ணோடு மண்ணாக கிடந்த நிமலன் கண்விழித்தான். குத்தெனப் பறந்து வந்த விமானம் மேலெழுந்து ஒரு புள்ளியாகத் தெரிந்தது. புகை மண்டலமும் தூசிப்படலமும் எங்கும் சூழ்ந்திருந்தது. உடம்பிலிருந்து விடுபட்ட ஒரு தலை காற்றில் பறந்து போய்க் கொண்டிருந்தது. மரணத்தின் பின்பு மேலோகம் செல்லும் பாதை இப்படித்தான் தொடர்கிறது போலும். இவ்வாறு எண்ணங்கள் அலைக்கழிய... கைகளை அசைத்துப் பார்த்தான், அது மெல்ல மடிந்தது. நிலத்தில் கையை ஊன்றி நிமிர்ந்தான். எந்த வலியும் இல்லாமல் எழ முடிந்தது. ஆச்சரியம் இவனுக்குள் பரவியது. புகை மண்டலத்தையும் தூசுப்படலத்தையும் ஊடுருவி பார்வையைச் செலுத்தினான். கட்டிட இடிபாடுகள். நெளிந்து வளைந்து சிதறிப் போய்க்கிடந்த சைக்கிள், அறுந்து தொங்கிய இரும்புக் கம்பிகள்.. அடிமேல் அடி வைத்து மெல்ல நகர்ந்தான். கால்களில் சேறு போல ஏதோ பிசுபிசுத்தது. நின்று பார்த்தான். நெடுஞ்சாண் கிடையாக ஓர் மனித உருவம், கையிலும் வயிற்றுப் பகுதியிலும் இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. மூக்கு நுனியில் உள்ளங்கையை வைத்தான். காற்றில் வெப்பம் வீசியது. "ஐயோ... ஆரெண்டாலும் வாருங்கோ" பெருங்குரலில் கூவினான். சிலர் ஓடிவரும் கால் சத்தம் கேட்டது. தலைக்கு கீழாக கையைக் கொடுத்து மெல்லத் தூக்கினான். கால் பக்கத்தில் ஆரோ தூக்கினர். காயம் பட்டிருந்த கையை மற்றுமொருவர் பிடித்துக் கொண்டார். தூசுப்படலம் கடந்து வெளியே வந்தபோது சைகையை ஒலித்தபடி அம்புலன்ஸ் வாகனம் ஒன்று நின்றது தெரிந்தது. அதிலிருந்து சிலர் இறங்கி ஓடிப்போய் காயம் பட்டிருந்த அந்த மனிதனைத் தாங்கிக் கொண்டனர். "வேறயும் காயம் பட்ட ஆக்கள் இருக்கினமோ?" ஒரு குரல் கேட்டது.





"அம்மா தாயே" வீரிட்டதொரு அலறல். கைகளில் திடீரென கனம் அதிகரித்தது போன்றதொரு உணர்வு. தூக்கி வந்த மனிதனின் தேகம் விறைத்துக் கொண்டது. "இதை இப்ப அம்புலன்சில் ஏற்ற அவசரப்பட வேண்டாம் மரத்திற்கு கீழே வளர்த்துங்கோ" கட்டளை பிறப்பித்தவர் அப்பால் நகர்ந்தார். பெரியதொரு பச்சை நிறச் சேலைத் துண்டு கைகளில் தென்படவே அதை எடுத்து விரித்த நிமலன், சடலத்தை அதன் மேல் வளர்த்த உதவினான். காயம் பட்டவர்கள் மேலும் இருக்கின்றனரா? தேடும் முயற்சிகள் தீவிரமாகின. முடிச்சுப் போட்டபடி சேலைத்தலைப்பொன்று தென்பட்டது. குனிந்து எடுத்தான். ஐந்து ரூபாய் குற்றியுடன் பத்து ரூபா நோட்டும் மடித்து முடியப்படிருந்தது. சில நொடிப் பொழுதுகளுக்கு முன் புனித யாகப்பர் ஆலயம் என அழைக்கப்பட்ட பகுதி வெறும் கற்குவியலாய் கிடந்தது. "இங்கை ஒரு கை கிடக்கு.. தலையின் சிதைந்த பகுதி இது." என்றவாறான குரல்களுக்கு மத்தியில் தேடுதல்கள் தொடர்ந்தது. பொறுக்கி எடுக்கப்பட்ட மனித அங்கங்கள் விரிக்கப்பட்டிருந்த ஓலைப் பாயில் குவிக்கப்பட்டன. எத்தனை பேர் இறந்திருக்கக் கூடும்? யார் யார் இறந்திருக்கலாம்? என்பது பற்றி அங்கிருந்தவர்கள் மத்தியில் பலத்த கேள்விகள்.

"எங்கட அன்ரி காலம கோயிலுக்கு வெளிக்கிட்டு வந்தவா.." என விம்மிக் கொண்டு வந்தாள் இளம் பெண்ணொருத்தி. அவளது விம்மலையும் அழுகையையும் கண்டு நிமலன் அவளருகில் வந்தான். "அன்ரிக்கு என்ன பேர்" மெல்லிய குரலில் கேட்டான். அவளது அழுகை நிற்பதாக இல்லை. அவளுக்கு ஏதாவது ஆறுதல் கூற நினைத்தான் நிமலன். "தங்கச்சி அழாதையுங்கோ...." என்றான். மௌனமாகினாள். "இப்பிடி வாங்கோ" என அழைத்த நிமலன் கற்குவியலைத் தாண்டினான். இயந்திரம் போல் அவனது அழைப்புக்குக் கட்டுபட்டு அவள் நடந்தாள். "ஐயோ எங்கட அன்ரி" திடீரென அவள் அலறினாள், நிமலன் திரும்பிப் பார்த்தான் சடலம் கிடத்தப்பட்டிருந்த மரத்தடியை நோக்கி அவள் ஓடினாள். பச்சை நிறச் சேலைத் துண்டைப் பிடித்தபடி கதறினாள். "அன்ரி கையில காசு எதுவும் வைச்சிருந்தவவோ"? நிமலன் கேட்டான். "கோயிலால வரேக்க சீனி வாங்கியாறத்துக்காக காசு கொண்டு வந்தவா" விக்கி விக்கி அவள் தெரிவித்தாள். "காசை வழக்கமாக எங்கை வைச்சிருக்கிறவ"?
"சீலைத் தலைப்பில் முடிச்சு வைச்சிருப்பா.."

நிமலன் காற்சட்டைப் பொக்கற்றுக்குள் கையை வைத்து சீலை முடிச்சை எடுத்தான். திருமதி. புஸ்பமேரி அன்டன் எட்வேட் துண்டு துண்டாக சிதறிப் போய் விட்டாள் என்பதை உணர்த்தும் தடயப் பொருளாக அந்தச் சீலை முடிச்சு. "ஆசைப்பிள்ளை அண்ணையின்ரை சைக்கிள் எல்லே இது" முன் பக்கம் வளைந்து கைப்பிடிகள் சிதைந்து போய்க்கிடந்தது. சைக்கிளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீற்றை மட்டும் வைத்துக் கொண்டு கனிஸ்டஸ் இனம் காட்டினான். "ஓம் போலத்தான் கிடக்கு, வீட்ட ஒருக்காப் போய்ப்பாப்பம்." சுவக்கீன் கூறியபடியே ஓடினான். யாகப்பர் ஆலயத்திலிருந்து சில யார் தூரத்திலிருந்த ஆசைப்பிள்ளை வீட்டின் வாசலுக்கு வந்துவிட்ட சுவக்கீன் "அண்ணே.. அண்ணே.." எனக் குரல் எழுப்பினான். அமெல்டா வீட்டிலிருந்து வெளியே வந்தாள்.
"அப்பா எங்கை பிள்ளை?"
"வெளியில போனவர் இன்னும் வரல்ல..."
"அவர் சந்தைப் பக்கம் போனவர்... ஏன் தம்பி?" கேட்டுக் கொண்டு வந்தாள் பிலோமினா, ஆசைத்தம்பியின் மனைவி.

"யாகப்பர் கோயிலடியில அவரின்ரை சைக்கிள் கிடக்கு." கூறி முடிப்பதற்கிடையில் ஐயோ எனக் கதறியபடி பிலோமினாவும் அமெல்டாவும் ஓடத் தொடங்கிவிட்டனர். பொம்பர் குத்திக் கொண்டு வந்தபோது ஆசைப்பிள்ளை சைக்கிளைப் போட்டிட்டு கோயிலுக்கை போனதை கண்டனான் என்று காயம்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அன்ரன் வாக்கு மூலம் கொடுத்துக் கொண்டிருந்தான். "அம்மாவுக்கு ஒண்டும் ஆகியிருக்கக் கூடாது கர்த்தரே அம்மாவைக் கைவிடாதேயும்," ரோஸ்மலரின் உதடுகள் உச்சரித்துக் கொண்டிருந்தன. வளர்த்தப்பட்டிருந்த சடலங்களுக்கு மத்தியிலும் குவிக்கப்பட்டிருந்த சதைக் குவியல்களுக்கு இடையிலும் ரோஸ்மலர் தனது தாயாரைத் தேடிக் கொண்டிருந்தாள். அம்மா தனக்காக எவ்வளவு கஸ்டப்பட்டவா... அம்மா இல்லாட்டி என்ரை எதிர்காலம் என்னவாகுமோ... அவளது எண்ணம் அலைபாய்ந்து கொண்டிருந்தது. "அம்மா வழக்கமா ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலமை வந்து செபமாலை சொல்லுறவா."
"அவவுக்கு ஒண்டும் ஆகியிருக்காது, பிள்ளை கவலைப் படாதேயும்" பங்குத் தந்தை ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது கையொன்றின் சிதைந்த பாகமொன்று இடிபாடுகளுக்கு இடையிலிருந்து மீட்கப்பட்டது. இரண்டு விரல்களுக்கிடையில் செபமாலை சிக்குப்பட்டபடி தொங்கிக் கொண்டிருந்தது. செபமாலையின் உலோகத் தகட்டில் பொறிக்கப்பட்டிருந்த **R** என்னும் ஆங்கில எழுத்து றீற்றம்மா இனிமேல் திரும்பி வரமாட்டாள் என்பதைச் சொல்லிக் கொண்டிருந்தது. சதைக்குவியல்களுக்கு மத்தியிலிருந்து முழங்காலுக்கு கீழே துண்டிக்கப்பட்ட நிலையிலிருந்து காலொன்றைத் தூக்கி வந்த மலக்கியாஸ் இறந்து போனவர்களில் தனது மைத்துனரும் ஒருவன் எனக் குறிப்பிட்டான். "கோயிலுக்கை நிண்டால் குண்டு போடமாட்டான் எண்டு சொல்லுவியே மச்சான்" அவன் புலம்பினான். "செபஸ்தியான் கோயிலுக்கு வந்தவனோ?" ஆரோ கேள்வி எழுப்பினார். "மோட்டச் சைக்கிள் அக்சிடென்டில அம்பிட்டு செபஸ்தியான்ரை காலில் இரண்டு விரல் கழட்டினது தெரியாதே" எனப் பதிலுக்கு கேட்டபடி மலக்கியாஸ் புலம்பிக் கொண்டிருந்தான். அவனது





தலை, கைகள் மற்றும் உடம்புக் கூறுகள் எங்கே போயிருக்கும் எனச் சிலர் தேடிக் கொண்டிருந்தனர். சிதைவடைந்து போனது யாகப்பர் ஆலயமும்... அப்பாவித் தமிழர்களின் உடல்களும் மட்டுமல்ல.

**1994**

**நன்றி : ஈழநாதம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. நெருக்கடி நிலை

"என்னப்பா சொல்லுகிறீர்? ஒண்டும் விளங்கேல்லை"
கிசுகிசுத்த குரலில் நான் கூறியது மனைவிக்கு சினத்தை ஊட்டியிருக்க வேணும். அவளது முகபாவத்தில் திடீர் மாற்றம் காட்டியது. உதடுகளை அசைத்தும், கண்களின் ஜாடைகளாலும், கைகளின் சைகைகளாலும் அவள் பேசிய மொழி எனக்குப் புரியவில்லை.

"என்ன புருசனும் பெண்சாதியும் ஏதோ ரகசியம் பேசுறியள் போல கிடக்கு" இரத்தினம் ஒலி பெருக்கி விட்டான். "இந்த மனுசனுக்கு என்னத்தைச் சொல்லி என்னத்தை விளங்கப்படுத்திறதோ தெரியாது." புறுபுறுப்புடன் அவள் இருக்கையை விட்டு எழுந்தாள்.

"இஞ்ச இருமப்பா சொல்ல வந்த விசயத்தைச் சொல்லுமன்.. இரத்தினம் அண்ணை என்ன பிறத்தியே..." சமாளிப்புக்கான எனது முயற்சி.
"சரி.. சரி.. நீங்க கதையுங்கோ, நான் உதில கடைக்குப் போறன். நீரும் வாறீரோ எண்டு கேக்கத்தான் வந்தனான்" என்று கூறியபடி நடையில் வேகத்தைக் கூட்டினார் அவர்.

நாளென்ன ரகசியமே பேசினனான். இண்டைக்கு வெள்ளிக்கிழமை கோயிலுக்குப் போவமெண்டு பார்த்தனான்" அவள் கூறினாள்.
"அதுக்கென்ன மோட்டச் சயிக்கிள் நிக்குதுதானே... போட்டு வருவம்." நான் ரெடிமேட்டாய் பதிலளித்தேன்.

"உதில கிடக்கிற பண்டித்தலைச்சி அம்மா கோயிலுக்குப் போறதுக்கு என்னத்துக்கு மோட்டச் சயிக்கிள்" மனைவி கூறினாள். எனக்குள் வியப்பின் கோடுகள் படர்ந்தன. வலிகாமத்தில் இருக்கும்வரையில் பக்கத்து வீட்டுக்கும்கூட நடந்து போகப் பஞ்சிப்படுவாள் அவள். இடம் பெயர்வு எல்லாரையும் தான் நல்லாய் மாத்திப் போட்டுது. எனக்குள் எண்ணம் ஊற்றெடுத்தது. தென்மராட்சியில் நண்பன் இரத்தினம் வீட்டுக்கு நாங்கள் வந்து சேர்ந்தபோது அவ்வீடு அவர்களின் உறவினர்களால் நிறைந்திருந்தது. எனினும் எனது குடும்பத்திற்கும் இடம் ஒதுக்கித் தரப்பட்டது. இருந்தும் மனைவியுடன் மனம்விட்டுப் பேசிய சந்தர்ப்பங்களைக்கூட விரல் விட்டு எண்ணிவிடலாம். கிணற்றடியில் அவள் முகம் கழுவித் திரும்புவதற்கிடையில் மூத்தவள் சிந்துஜா வெளிக்கிட்டே விட்டாள். "எங்க சிந்து வெளிக்கிட்டு நிக்கிறாய்?" "அம்மாவோட கோயிலுக்குப் போகப் போறன்." அவளது பதில் கேட்ட அபிநயா நானும் வாறன் எனக் கூறிக்கொண்டு கிணற்றடியை நோக்கி ஓடினாள். அப்பா நானும் வரப்போறன் என்றபடி மூன்றாவது சாரத்தைப் பிடித்துத் தொங்கியது. "சரிபோய்





வெளிக்கிடுங்கோ" தோளில் துவாயைப் போட்டபடி கிணற்றடியை நோக்கி நடந்தேன். "அண்ணை நீங்கள் நடந்தே போகப் போறியள்" இரத்தினத்தின் மனைவியின் தங்கை குமுதா கேள்வி எழுப்பினாள். "ஓமோம்" தலையசைப்பின் மூலம் பதிலளித்தேன். "அப்ப வனஜாவையும் கூட்டிக் கொண்டு போய் வாறியளோ?" "ஓம் அதுக்கென்ன... குழந்தையளும் வருகினம்" நான் கூறி முடித்து விட்டேன். எதிரில் வந்த மனைவியின் பார்வை என்னை முறைத்தது. படலை தாண்டியது தான் தாமதம் குழந்தைகள் குதூகலத்துடன் ஒன்றையொன்று முந்தி ஓடின. வனஜா அவர்களை அரவணைத்து தன் கைப்பிடிக்குள் கொண்டு வந்தபடி முன்பாக நடந்து கொண்டிருந்தாள். நானும் மனைவியும் பின்தொடர்ந்தோம். ஒழுங்கைகளைக் கடந்து தார்வீதியைத் தாண்டி வயல் வரம்புகளில் நடந்தோம். கதிர் தள்ளியிருக்க வேண்டிய வயல் வரம்புகள் மணல் மேடாகக் கிடந்தது. பாளம் பாளமாக வெடித்துக் காணப்பட்டன. வயல் நிலங்கள் ஊடாக வரும் தென்றல் காற்றிலும் வெப்பத்தின் வீச்சு.

"அடுத்த வருஷமும் பஞ்சம்தான் போலத்தான் கிடக்கு." என்னையும் அறியாமல் உதடுகள் முணுமுணுத்தன.

"உங்களுக்கு எப்பவும் ஏதும் சோலிதான் நினைவு... நான் பக்கத்தில வரேக்கையாவது குடும்பத்தின்ரை நினைவு வர வேண்டாமோ?" மனைவியின் குரல் காதுக்குள் கணீரென்றது. திரும்பிப் பார்த்தேன். "உங்களுக்கு குடும்பத்தைப் பற்றி கவலையில்லை." அவள் குற்றப்பத்திரம் தாக்கல் செய்தாள்.
"என்னப்பா என்ன சொல்லுறீர்"

"இரத்தினம் அண்ணை வீட்டில் எத்தனை குடும்பம் இருக்கு தெரியுமோ"? அவள் பதில் கேள்வி கேட்டாள்.

"இரத்தினண்ணை குடும்பம், வனஜான்ரை குடும்பம், தமையனவையிட குடும்பம், தமையன்ரை மச்சானவை, அவற்றை மாமன் மாமி, மற்றது சங்கர் குடும்பம், தேவாண்ணை குடும்பம், எங்களோடை சேர்த்து ஒரு பத்துக் குடும்பங்கள் தேறும் என்ன?" எனக்குள்ளேயே ஒரு வியப்பு முதன் முறையாகத் தோன்றியது.

"இப்பவும் நாங்கள் தனிக் குடும்பமாயில்லை, கனபேரோட இருக்கிறம், அதுக்கேத்தபடி நடவுங்கோ எண்டால் உங்களுக்கு அது விளங்குதில்லை" அவள் மூக்கைச் சிந்தினாள்.

"சொல்லுறதை எப்பன் விளக்கமாய்ச் சொல்லுமன்"
"அண்டைக்கு ஒரு நாள் அந்தாள் சிவசண்முகசுந்தரம் வந்தபோது என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தனியள்? யோசிச்சுப் பாருங்கோ"
என்ன செய்தனான் எனக்குள் யோசனை.?

"வழக்கமா அந்தாள் வந்தா கனநேரம் இருந்து கதைப்பியள். கதைக்கட்டும் குளிச்சிட்டு வந்து அடுப்பை மூட்டுவம் எண்டிட்டு நான் கிணற்றடிக்குப் போனன். அதுக்கிடையில் இரத்தினண்ணையின்ரை அக்காட்ட தேத்தண்ணி கேட்டிருக்கிறியள். சீனியும் இல்லாம அவ தேத்தண்ணி ஊத்தித்தர என்ன பாடுபட்டவ எண்டு தெரியுமே உங்களுக்கு" அவளது வார்த்தைகள் செவிக்குள் சூடாக இறங்கின. "வனஜாவின்ரை அம்மா முந்தநாள் அப்பம் சுட்டவவெல்லோ, அண்டைக்கு தங்களுக்கும் அப்பம் வேண்டுமெண்டு கேட்டு சிந்துவும் அபியும் என்னோட சண்டை" மனைவி அடுத்த குண்டைத் தூக்கி அநாயாசமாக வீசினாள். "இதுகளுக்கு நான் என்னப்பா செய்யிறது?" உதடுகள் இறுகிக் காய்ந்து போக வரண்ட குரலில் நான் கேட்டேன். "சிந்துவுக்கு இப்ப ஐந்து வயசு முடிஞ்சுது, பள்ளிக்கூடம் போகத்தான் வழியில்லை... வீட்டிலையாவது ஏதும் சொல்லிக் குடுக்கலாம் தானே, தன்ரை பாட்டில கட்டாக்காலி மாதிரித் திரியிறாள், பொம்பிளைப் பிள்ளையெல்லே.."

அறுபது எம்.எம். மோட்டார் ஷெல்லொன்று அருகில் வெடித்துச் சிதறியது போலிருந்தது. எனது சிந்தனை சிதறியது. இப்பிடி எத்தனை எத்தனை குடும்பப் பிரச்சினைகள்... இதுகளை மனம் விட்டுக் கதைக்கக்கூட வழியில்லாமல் ஆளை ஆள் பார்த்து முழுசிக் கொண்டு இப்படியே எத்தனை நாளைக்குத் திரியிறது.... இந்தச் சீவியம் எத்தனை நாளைக்கு... யதார்த்தங்கள் முகத்திலறைய மௌனப் போர்வையினுள் என்னைத் திணித்தபடி என் உருவம் நகர்கிறது. எதை நாம் இழந்தோம்? இமயத்தின் உச்சியை கடந்து கேள்வி எழுகிறது.

**டிசெம்பர் 1995**





# 8. மறுபிறப்பு

"சாகிறனுமில்லை... உயிர்த்து எழும்புறனுமில்லை... இதென்னடாப்பா இப்படிக்கிடந்து எல்லாரையும் கஸ்டப்படுத்திறனே..."

வேதனையில் முனகிய வேதநாயகியம்மாவின் குரல் எல்லோருக்கும் தெளிவாகவே கேட்டது. வலிகாமத்தில் வளமாக வாழ்ந்தவர் எனச் சொல்ல முடியாதுதான், ஆனால் தானுண்டு தன்பாடுண்டு என்று சுத்தம் சுகாதாரமாக வாழ்ந்தவர்களில் வேதநாயகியம்மாவும் ஒருத்தி. சந்தையில் வாங்கப்படும் காய்கறிகளைக் கணவர் கூட நேரே வீட்டுக்குக் கொண்டு வந்திட முடியாது. அவ்வளவுக்குச் சுத்தமானவர். பச்சைக் காய்கறிகளைப் பத்துத் தரம் கழுவி... கத்திக்கும் சோப்புப் போட்டுத் தேய்த்து சுத்தப்படுத்தி விட்டுத் தான் சமையலுக்காக வெட்டுவது அவரின் வழக்கம். தேனீர்க் கோப்பை முதல் சமையல் பாத்திரங்கள் ஈறாக ஒவ்வொன்றையும் நன்கு தேய்த்துக் கழுவி சூரிய வெய்யிலில் காய வைக்கும் அழகே தனி. பசு மாட்டுச் சாணியால் மெழுகிக் கோலம் போட்டிருக்கும் விதமும், சாணி கரைத்துத் தெளிக்கப்பட்டிருக்கும் பாங்கும், முற்றத்தில் கால் வைக்கவே கூசச் செய்யும். பாய் போடாமலே படுத்துத் தூங்கலாம் என்றால் பார்த்துக் கொள்ளுங்கோவன். வேதநாயகியம்மா வீட்டின் அழகுக் கோலத்தை கண்களுக்குள் அகப்படுத்திக் கொள்வதற்காகவே அயல் வீட்டுப் பெண்களின் விஜயம் தினசரி இடம் பெறும். ஆனால் வேதநாயகியம்மாவுக்கோ பக்கத்து வீட்டுக்கு வாசற்படி எந்தப் பக்கம் என்பதுகூடத் தெரியாது. அடுத்த வீட்டு வாசலுக்கு எத்தனை படி என்பதும் அவர் அறியாதது. மற்ற வீட்டு விவகாரங்களில் மூக்கை நுழைத்துக் கொள்வதும், வீண் வம்பு பேசுவதும், அம்மாவுக்கு துளியளவுகூட உடன்பாடு இல்லாத விடயங்கள். காலை முதல் மாலைவரை பம்பரம்போலச் சுழன்று வேலைகளைக் கவனிக்கும் அவர் வானலைகளில் மிதந்து வரும் சங்கீதத்துக்காக மட்டும் காதுகளை திறந்து வைத்திருப்பார். கூட்டிப் பெருக்குவது, பாத்திரம் தேய்ப்பது, சமையல் செய்வது, துணி துவைப்பது, என்று மாறி மாறி வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வதில் ஒரு அலாதிப் பிரியம் அவருக்கு. மேற்கு வானில் சூரியன் மறைந்து இருள் கவ்வத் தொடங்கவும் வானொலிப் பெட்டியை அருகில் வைத்துக் கொண்டு செய்திகளுக்கு மாறி மாறி செவி கொடுப்பார். பி.பி.சியின் தமிழோசை முழங்கி ஓயவும் சிவசிவா என்று விபூதியை அள்ளிப் பூசிக் கொண்டு அவர் நித்திரைக்குப் போகவும் சரியாக இருக்கும். அறுபது வருடங்கள் வரை ஓடிவிட்ட வேதநாயகியம்மாவின் வாழ்க்கை இப்போது நேரெதிராக தலைகீழாக மாறிப் போய்விட்டது. வலிகாமத்திற்கு பொருட்களை எடுத்துவரப் போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவர் திரும்பி வரவில்லையே என்ற ஏக்கம் ஒரு புறம், முதுமைக்கால உதவிக்கு குழந்தைகள் இல்லையே என்ற நிரந்தர கவலை மற்றொருபுறம், கணவரின் தமக்கை புருஷனின் தம்பியாரது என்ற உறவில் ஓட்டிக் கொண்டிருக்கும் இரவல் வீடு என்னும் குற்றவுணர்வு மற்றொரு புறம் உறுத்திக் கொண்டிருந்தது அவருக்கு. ஒரு நாள் மாலைப் பொழுதில் திடீரென மயக்கம் போட்டு விழுந்து விட்டார் வேதநாயகியம்மா. குழாய் ஒன்றின் ஊடாக நிறமில்லாத திரவம் அவரது உடலுக்குள் பாய்ந்து கொண்டிருந்தது. மூக்குத் துவாரம் ஊடாக மற்றுமொரு குழாய் தொங்கிக் கொண்டிருந்தது. அருவருப்பும் அசூசையும் முகத்தில் கொப்பளிக்க வேதநாயகியம்மாவின் கண்கள் அங்குமிங்குமாகத் திரும்பியது. அறிமுகமான முகங்கள் எதையும் காணவில்லை. "அம்மா கண் முழிச்சிட்டா..." குரலில் மகிழ்ச்சி கொப்பளிக்க யாரோ கூறினர். பார்வையைத் திருப்பினாள்.

"மாமி... இந்தாருங்கோ... இஞ்ச பாருங்கோ.." சுசீலாவின் குரல் இழுத்தது. மீண்டும் தலையை அசைத்து அம்மா திரும்பியபோது அவரது முகத்தில் அரும்பியிருந்த வியர்வையைச் சீலைத் தலைப்பால் துடைத்து விட்டபடி சுசீலா நின்று கொண்டிருந்தாள்.

"என்ன மாமி... என்ன செய்யுது... ஏதும் தேவையே..."
காதோரமாகக் குனிந்து கேட்டாள். வாய் திறந்தது உதடுகள் பிரிந்தது... நாவு அசைந்தது. அடிக்கிணற்றில் இருந்து வந்தது போலக் குரல் வெளிப்பட்டது. ஆனால் என்ன சொன்னார் என்பது தெளிவாக விளங்கவில்லை. சுசீலாவுக்கு அந்தரம் அதிகமாகியது. அருகிலிருந்தவரை அழைத்தாள். என்ன சொல்லுகிறாள் என்பதை கிரகித்துச் சொல்லும்படி கெஞ்சினாள். முகமறியாத சிலரும் முயன்று பார்த்தனர். அதனிடையில் வெள்ளைச் சீருடையிலிருந்த தாதி ஒருத்தி ஓடி வந்தாள்.

"எல்லாரும் சுத்தி வளைச்சுக் கொண்டு நிக்காதேயுங்கோ, அம்மாவுக்கு மூச்சு முட்டப் போகுது," அவள் வெடித்துச் சீறினாள்.
"சேலைன் முடிஞ்சுது... இனிக் கழட்டுங்கோ... அரை மணித்தியாலத்திற்குப் பிறகு என்னவும் குடிக்கக் குடுக்கலாம். இப்ப மெல்லிய ஈரத் துணியால் சொண்டுகளை நனைச்சு விடுங்கோ..."

இயந்திர கதியில் செயற்பட்ட அவள் அப்பால் நகர்ந்தாள். கூடவே கொண்டு வந்திருந்த சுடுநீர்ப் போத்தலின் மூடியைத் திறந்து இளஞ்சூட்டுடனான நீரை வார்த்து அதற்குள் சிறிதளவு குளுக்கோசையும் கொட்டிக் கலந்து பஞ்சு போன்ற துணியில் நனைத்துச் சொண்டில் தடவினாள். அது இதமளித்திருக்க வேண்டும். ஒருவித சந்தோஷம் அவளது முகத்தில் பரவியது. கை,





கால்களையும் முதுகுப்புறத்தையும் ஈரச்சீலையால் தடவி எடுத்தாள். அம்மா கைகளை மெல்ல அசைத்தாள். விரல்கள் முகத்தைச் சுற்றி வட்டமிட்டன. "அம்மா பவுடர் போடச் சொல்லுறா போல.."

அருகிலிருந்த ஒருத்தியின் குரல் கணீரென்றது. சுசீலா பார்வையை அவளது பக்கம் திருப்பியபடியே கைகளால் பவுடர் எடுத்துப் பூசினாள். ஆனாலும் கையசைப்பும் விரல்களில் ஆட்டமும் நிக்கவில்லை. குங்... குங்." வார்த்தைகள் விட்டுவிட்டு ஒலித்தன. சுசீலாவின் சிந்தனையில் ஒரு மின்னல் வெட்டு. கைப்பையில் வைத்திருந்த குங்கும டப்பாவை திறந்து விரல்களில் ஒற்றி எடுத்த குங்குமத்தை நெற்றியில் வைத்தாள். அம்மாவின் முகத்தில் மகிழ்ச்சிப் பிரவாகம்.

"தங்கச்சி நீர் இவாவின்ரை மகளோ?" அருகிலிருந்தவரின் விசாரணை.
"இல்லை ஏன் கேக்கிறியள்."
"ராத்திரி முழுக்க அம்மாவுக்கு நித்திரையில்லை... ஒரே புலம்பல்... இங்க டாக்குத்தர்மாருக்கும் இவ தப்புவா எண்டு நம்பிக்கையில்லாமப் போச்சு," என்று கூறியவள் நாக்கைக் கடித்து சிறிது தாமதித்து,
"அப்ப நீங்கள் இவவுக்குச் சொந்தமே.." மற்றுமொரு கேள்விக்குத் தாவினாள்.
"ஓமோம்" எனக்கூறித் தலையசைத்த அவள் தொடர்ந்து,
"இவவின்ரை புருசனின் தமக்கையின்ரை மனுசனின் தம்பி பொஞ்சாதி" என்று தன் சொந்தத்தை விளக்கினாள். அத்துடன் இடம் பெயர்ந்து வந்தபிறகு எங்கட வீட்டில தான் இருக்கிறவா... எனத் தனது நெருக்கத்தையும் குறிப்பிட்டாள். அதனிடையில் கழுத்தில் ஸ்டெதஸ்கோப் தொங்க வந்த டாக்டர்,
"நீங்களோ இவவோட நிக்கிறது," எனக் கேள்வி எழுப்பினார். மெல்லியதாக இவள் தலை அசைந்தது. மூக்குக் கண்ணாடி ஊடாக அவர் கண்டு கொண்டிருக்க வேண்டும்.
"இவவுக்கு டிக்கட் வெட்டியாச்சு.. வீட்டை கொண்டு போறது நல்லது." அப்பால் நகர எத்தனித்தார்.
"இவர் அஞ்சு மணிக்குப் பிறகுதான் வருவார், அதுவரைக்கும் நிக்கலாமே.." மெல்லிய குரலில் இழுத்தாள்.
"உங்களை கலைக்கிறம் எண்டு நினைக்காதேயுங்கோ ஆனா அவ்வளவுக்குத் தாங்குமோ தெரியாது." டாக்டர் நகர்ந்து விட்டார். "தற்சமயம் சீவன் போட்டுதெண்டா பிறகு காரில கொண்டு போறதும் கஸ்டமாயிடும்." அருகிலிருந்தவரின் இலவச ஆலோசனை. இண்டைக்கு வெள்ளிக்கிழமை, இப்பவே மணி இரண்டாய் போச்சு, தற்சமயம் ஏதுமெண்டால்... நாளைக்குச் சனிக்கிழமை, சனிப்பிணம் தனிப்போகாது எண்டெல்லே சொல்லுறவை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுசீலாவின் உள்ளத்து உணர்வுகள் அலைக்கழித்தன.

“இந்தா சீவன் போட்டுதெண்டு கொண்டுவந்த மனிசி, இப்ப எழும்பி இருக்கவும் தொடங்கி விட்டா... இனியென்ன...” பொன்னுத்துரையர் முணுமுணுத்தார். சுசீலாவின் கணவருக்கு அவர்தான் அண்ணர். வீட்டிலேயே மூத்தவர். இவரது பேச்சுக்குத் தம்பியாரான சின்னத்துரையர் என்றும் மறு பேச்சு பேசியது கிடையாது. உடன்பாடு இருக்கோ இல்லையோ எதிர்ப் பேச்சுப் பேசுவது சின்னத்துரையருக்குப் பழக்கமில்லை. ஆனால் இன்றோ பொன்னுத்துரையரின் முணுமுணுப்பு முடிவதற்கு முன்பாகவே.

“அந்த மனிசன் எங்களை நம்பிக் கொண்டு வந்து விட்டிட்டுப் போனது, அந்தாள் திரும்பி வரும்வரையாவது மனிசி கண் மூடாமல் இருக்க வேணும்.. ஆண்டவனே எனப் பிரார்த்தித்தார். இது பொன்னுத்துரையருக்கு மட்டுமல்ல அங்கிருந்த அனைவருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

இவை செவியில் விழுந்ததாலோ என்னவோ, படுக்கையிலிருந்த வேதநாயகியம்மாவின் குரல் ஒலித்தது.

“அண்டைக்கு என்ன எழுதினானோ அதன்படி தான் எல்லாம் நடக்கும்.” அண்டைக்கு எழுதினவன் இனியே அழிச்சு எழுதப்போறான்....”

“என்னத்தை எழுதினவன்... எங்கை எழுதினவன்..”

சிறுபிள்ளைத்தனமாக சுசீலாவின் கேள்வி...

“மண்டையில் எழுதியதை மயிரால எல்லே மறைச்சுப் போட்டான்.” வேதநாயகியம்மாவின் தெளிவான பதில் கேட்டு அனைவரது உதடுகளும் இறுக ஒட்டிக் கொண்டன.

**ஜனவரி 1996.**





# 9. வேப்பம் பூ

தென்றல் காற்று மிக இதமாக வீசிக் கொண்டிருந்தது. வீட்டின் நடுவேயுள்ள ஹோலில் ஈசிச்சேரில் சாய்ந்து கொண்டிருந்த அன்னம்மாவை சாளரத்தினூடாக புகுந்த தென்றல் தொட்டுத் தழுவிச் சென்றது. தென்றலின் இதமான தழுவலை மெல்லத் தழுவி உச்சி குளிரச் செய்யும் பண்பை ரசித்து அநுபவிக்கும் மனநிலை தான் இப்போது அன்னம்மாவிற்கு இல்லை. கட்டிடங்கள் காடுபோல விரிந்து கிடக்கும் நகர மத்தியில் இளம் குடும்பமாக இருந்தபோது காற்று வாங்குவதற்காக வாரம் ஒரு முறையேனும் காசு செலவழித்து கடற்கரைக்கும் பூங்காக்களுக்கும் சென்று வந்தவள்தான் அவள். ஆனால் இப்போதோ இலவசமாக... எந்தத் தொந்தரவுகளும் இல்லாமல்... இதமான தென்றல் தழுவுகின்ற போதும் அதன் சுவையை ரசிக்க அவளால் முடியவில்லை. சாம்பல் பூத்த நெருப்பின் மீது காற்று ஊதும்போது சுடர்விடுவதைப் போல அவள் மனமும்... காற்றைச் சபித்தாள். ஏன்தான் இப்பிடி அடிக்குதோ சனியன் எனத் திட்டினாள். இப்ப ஒரு கொஞ்ச நாளைக் கெண்டாலும் அடிக்காம இருந்தால் எவ்வளவு நல்லது. மனம் என்னென்னவோ எண்ணியது. ஆனால் வீசும் காற்றுக்கு தடைவிதிக்க முடியுமா? சிந்தனை ஆராய்ச்சியில் சுழன்றது. கொடியில் கிடக்கும் துணி காற்றின் அசைவிற்கேற்ப படபடப்பதைப்போல மனமும் படபடத்தது. என்ன செய்யலாம்? என்று தொடங்கி எதுவும் முடியாது என்று முடிவுறும்போது கைகளைப் பிசைந்தாள். அந்த நீண்ட ஹோலில் முன்னும் பின்னுமாக நடக்கத் தொடங்கினாள். இரண்டு மூன்று நாளைக் கெண்டாலும் கொஞ்சம் பலமாக அடிக்காம இருக்காதோ.... ஒரு கொஞ்சத்தையாவது அள்ளிப்போட்டா..... அவன் சுரேசனைக் கூப்பிட்டாப் போல என்ன அவனும் முந்தி மாதிரி இல்லை... கூப்பிட்ட உடன் ஒடி வந்து வேலையைச் செய்ய... அவனும் இப்ப பஞ்சிப்படுறான். பின்ன வந்து பாப்பம்... பிறகு செய்யிறன்... எண்டெல்லே சாட்டுப் போக்கு சொல்லுறான். இல்லாட்டி நேற்றுப் பின்னேரம் அல்லது இண்டைக்கு காலமை ஒரு கொஞ்சத்தையாவது அள்ளியிருக்கலாம். எப்பன் இறுக்கிக் கதைச்சால் அவன் பிறகு இரவில் துணைக்கு வாறதையும் நிப்பாட்டிப் போடுறான். அவனும் இல்லையெண்டா இந்தப் பெரிய வீட்டில் தட்டத்தனிய நான் இந்த வயதுபோன காலத்தில என்னெண்டு இருக்கிறது. தற்சமயம் ஆரும் கள்ளர் காடையர் வந்தாலும்... நினைக்கவே பயமாய் கிடக்கு... எதுக்கும் இண்டைக்கு பின்னேரம் வந்த உடனே.. இப்ப நிலவுக் காலம்தானே ஒருக்கா சொல்லிப் பாப்பம். சாய் இந்த யோசனை நேற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருந்தால்.. ஒரு கொஞ்சத்தையாவது அள்ளியிருக்கலாம் தான். அநியாயமாய் போச்சு. இது என்ன காசைக் குடுத்தால் சந்தையில் போய் வாங்கக் கூடிய சாமானே. இந்தக் காலத்தை விட்டால் பிறகு அடுத்த வரியம் வரையுமெல்லோ காத்துக்கிடக்க வேணும். வழமைபோல பின்னேரமும் வந்தது. சுரேசனும் வந்தான். கையில் சில புத்தகக் கட்டுக்களுடன். அவன் வந்ததும் வராததுமாக தேனீர்க் கோப்பையை கையில் திணித்தாள். உயர்தரப் பரீட்சையை எழுதிவிட்டு சாவகாசமாக மறுமொழி வரட்டுமென் பாப்பம் என்று அநாயசமாகத் திரியும் சுரேசனின் கைகளுக்குள் புத்தகத்தைக் கண்டதால் தனது சிந்தனையை வெளிப்படுத்தத் தயங்கினாள். ஆனால் நிதானமாக பார்த்தபோது அவை வெறும் கதைப் புத்தகங்கள் என்பதைக் கண்டு கொண்டாள். மெல்லக் கதையைத் தொடங்கினாள்.

“தம்பி சுரேஸ்”

“என்ன அன்ரி”?

நேற்றும் சொன்னனான் மறந்து போனீர் போல..”

“எதைச் சொல்லுறியள்”

“வீட்டுக்கு மேல கிடக்கிற பூவை அள்ள வேணும்”

“ஆ.. ஆ.. இந்த வேப்பம் பூவைச் சொல்லுறியளோ”?

“அதுக்கு ஏன் அன்ரி அவசரப்படுகிறியள், ஆறுதலாய் அள்ளலாம்தானே. அள்ளித்தாறன்.” அவன் சாவகாசமாகப் பதிலளித்தான்.

“இல்லை கச்சான் காற்று அடிக்கத் தொடங்கிட்டுது. இனி பூவெல்லாம் உதிர்ந்து காத்தோட போயிடும். ஓட்டில கிடக்கிறதுகூடப் பறந்திடும். இப்பவே ஓட்டில பாரும் எவ்வளவு பூ நிலத்தில எவ்வளவோ பூ கொட்டிண்டு போய் கிடக்கு. அநியாயமாய் பறக்குது.”

“அப்ப நிலத்தில் கிடக்கிறத கூட்டி அள்ளுங்கோவேன் அன்ரி.”

“நாய்கள் கண்டபாட்டுக்கு ஓடித்திரியிற அந்த நிலத்தில கிடக்கிற பூவை எடுத்து வடகம் செய்ய ஏலுமே. சாப்பிடுகிற சாமான் எல்லே செய்ய வேணும்.”

“இதெல்லாம் பக்குவமாய் செய்தாப் போல... என்ன அன்ரி..” அவன் முடிக்கவில்லை.

“இல்லையில்லை பக்குவமாய்... வடிவாய்... செய்தால் வெளியில இருக்கிற இரண்டு பெடியளுக்கும் அனுப்பலாம். வடகம், வத்தல் எண்டால் நல்ல விருப்பம், இரண்டு பிடி கூடச் சாப்பிடுவாங்கள்”

“அப்ப நீங்களும் அவையோட போயிருக்கலாமே பக்குவமாய் செய்து கொடுக்கலாமே....”





“போயிருக்கலாம் தான் பிறகு வீடு.... அதுக்குத்தானே இங்க இருக்கிறன்.” அவள் பேச்சை இடையில் நிறுத்திக் கொண்டாள். அவர் இப்ப வைகாசி விரதத்தோட போசன் போயா தானே. இந்த லீவுக்குள்ள வருவார். இந்த வடகத்தையும் போட்டு ரெடியாய் வைச்சிருந்தால் அவருக்கும் குடுத்துவிடலாம். மகனவைக்கும் அனுப்பலாம்.

“மோனை நீ தேத்தண்ணியைக் குடிச்சுட்டு ஒருக்காப் பஞ்சியைப் பாராம அள்ளித்தாறியே? ஜன்னலால ஏறலாம். இப்ப நிலவு காலம்தானே. ஒரு அரை மணித்தியாலத்தில அள்ளிப் போடலாம். கிடக்கிற பூ எல்லாத்தையும் அள்ளினா இப்போதைக்குக் காணும்.”

“ஏன் நாளைக்கு அள்ளினா என்ன?”

“இல்லை வெய்யில் ஏறினா விழுந்து போய் கிடக்கிற வேப்பம்பூ உடைஞ்சு துண்டு துண்டாய்ப் போயிடும். அதுதான் பாக்கிறன்.” என்று அவசரமாய் பதிலளித்தாள்.

“அட இவ்வளவு நேரமும் சொல்ல மறந்தெல்ல போனன்... ராசன் கடிதமெல்லே போட்டிருக்கிறான். இண்டைக்குத்தான் வந்தது”

“என்ன புதினமாம்”

“உன்னை கடிதம் எழுதச் சொல்லியும் எழுதியிருக்கிறான். அதோட வாற ஆக்களிட்டை வடகமும் வத்தலும் குடுத்து விட்டுமாம். அங்கை இந்தியன் சொப்பில வாங்கிறது ருசியாய் இல்லையாம்.”

“ஆரும் கிட்டடியில போகிற ஆக்கள் இருக்கினமோ அன்ரி?”

“ஓமோம் தவத்தின்ரை பொம்பிளை வாற கிழமை போறா. மல்லாகத்துப் பிள்ளை பார்த்தால் நல்ல குணசாலி போலக் கிடக்கு. போன புதன்கிழமை தவத்தான் வீட்டில வந்து தாய் தேப்பனுக்கு சொல்லிப் போட்டு போகுது.” அவள் நீட்டிக் கொண்டே போனாள். இந்த மண்ணுக்குள் தான் எத்தனை செல்வங்கள் பொதிந்து போய்க் கிடக்க, தூரத் தூர விலகி ஓடினாலும் எட்டி அரவணைக்கும் அன்னையின் அன்பைப் போல இந்த மண்ணின் உணவுச் சுவை உலகின் எந்த மூலையிலிருந்தாலும் ஈர்க்கச் செய்கிறது என எண்ணியவாறு சிந்தனையில் மூழ்கினான் சுரேசன். தனது கதைகளுக்கு செவி சாய்க்காது அவன் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து போயிருப்பதை நேரம் கழித்துத்தான் அவள் அவதானித்தாள். “நானும் என்ர பாட்டில் சொல்லிக் கொண்டே போறன் நீரும் ஏதோ கடும் யோசினை போல... என்ன சுரேஸ்?” அவள் குரலின் தொனி உயர்ந்தது. திடுக்கிட்டு நிமிர்ந்தான் சுரேசன். “இல்லை.. ராசன்ரை கடிதத்தைப் பற்றிதான் யோசிச்சனான்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீர் ஏதும் எழுதித்தாறதெண்டா எழுதித் தாரும்... நான் அனுப்பி விடுகிறன்..."
"இல்லை அன்ரி உடுக்குச் செலவழிக்கிற நேரமும், எழுதுகிற பேப்பரும் நட்டம். ஓலைப் பெட்டியொன்று தாருங்கோ.... கொஞ்சமெண்டாலும் வேப்பம் பூவை அள்ளித்தாறன்."
சுரேசன் எழுந்தான். வேப்பம்பூ கிடைக்கப் போவதில் மட்டும் அன்னம்மாவிற்கு மகிழ்ச்சி.

**வைகாசி 1995.**





# 10. புத்தி சீவியம்

அதிகாலையிலேயே சைக்கிள் மணியின் ஓசை படலையருகே ஒலித்தது. சுசீலா எட்டிப் பார்த்தாள்.
"சீலன் அண்ணை நிக்கிறாரோ?"
குரல் தெளிவாகவே கேட்டது. பதில் சொல்வதற்காக முகத்தை எட்டிப் பார்க்க முனைந்தாள்.
"இண்டைக்கு எப்பிடி எண்டாலும் காசைக் கொண்டு வந்து தரட்டாம். பாங்கு (Bank) க்கு கட்ட வேணுமாம். முதலாளி சொல்லி விட்டவர். நேரம் போகுது. போட்டு வாறன் நான். கடை திறக்க வேணும்." தந்திப் பாசையில் பேசினான் பேப்பர் கடைப் பையன். வார்த்தைகளை அவள் முழுமையாகக் கிரகிக்க முன்பே அவனது சைக்கிள் கண்களுக்கு மறையத் தொடங்கிவிட்டது. தோளில் போட்ட துவாய்த் துண்டுடன் பற்களைத் துலக்கியபடி சீலன் வந்தான். சுசீலா உற்றுப் பார்த்தாள். என்ன கவிஞரே எப்பிடிக் கடன் கட்டப் போறதாய் உத்தேசம்? கேள்வி அவளது பார்வையில் தொக்கி நின்றது.
ஒரு றீம் பேப்பர் மூவாயிரத்து ஐநூறு ரூபாய். ஐந்து றீம் அச்சுத்தாள் கடனுக்கு வாங்கி அச்சிட்ட கவிதைப் புத்தகங்கள் அறையின் மூலையில் மலைபோல் உயர்ந்து கிடந்தது. நெஞ்சம் கனத்தது. சீலனுக்கு கிட்டவாக வந்த சுசீலா,
"கடன் பட்டார் நெஞ்சம் போல.." எனக் கரகரத்தாள்.
"காந்தன் என்னை நல்லாய் ஏமாத்திப் போட்டான்"
பார்வை எங்கோ வெறிக்க சீலன் முணுமுணுத்தான். சீலனின் சிந்தனைச் சக்கரம் சுழன்றது. கவிஞன் என்று பெயர் பதிக்க ஆசைப்பட்டது ஏன்? கவிதைகள் புனையும் எனது எழுத்தாற்றல் விற்பனையாகாத பண்டங்களா? கையது கொண்டு மெய்யது பொத்தி, காலது கொண்டு மேலது பொத்தி என்பது போல தமிழ்க் கவிஞனும் வறுமையும் இரட்டைக் குழந்தைகளா? கவிதைகள் வாழ வைக்கா விட்டாலும் பரவாயில்லை.. கடனாளியாக்கிப் போட்டுதே. நினைவுத் திரையில் தோன்றித் தோன்றி அலைக்கழித்தன.

□ □ □ □ □ □

**<u>வெள்ளம்</u>**

கண்ணின் நீர் வழிந்து
மண் ஊறியிருந்தது
விண்ணின் நீர் சொரிய
தேங்கிப் போய்விட்டது.

பாடசாலைக் குறிப்புப் புத்தகத்தில் சீலன் எழுதியிருந்த இந்த வரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது எழுத்துலகப் பிரவேசத்திற்கு வாசற் கதவு திறந்து வரவேற்புக் கொடுத்தது. எதேச்சையாக இந்த வரிகளைக் கண்ட காந்தன் துள்ளிக் குதித்தான்.

"நீ ஒரு அற்புதமான கவிஞனடா... அபாரமான கற்பனை... என வியந்தான். எடேய் என்ன கவிதை.. சோக்கான சிந்தனையடா..." எனக்கூவினான். அந்தக் குறிப்புப் புத்தகத்தை அப்படியே தூக்கிக் கொண்டு போய் தமிழ் ஆசிரியருக்குக் காட்டினான். ஆசிரியரையும் அந்த வரிகள் ஆகர்சித்துவிட்டன. காலுக்கு சக்கரம் பூட்டியவர் போல வகுப்பறைக்கு விரைந்து வந்த அவர் சீலனைப் பாராட்டினார். பாத்திரங்களுக்குள்ளேயே உவமையைத் தேடும் உத்தி இதுவென விளக்கினார். இந்த உத்தியைக் கம்பன் கையாண்ட இடங்களை உதாரணங்களுடன் சுட்டிக் காட்டினார். பெண் எனும் பெயர்த் தையலாள் படக் கோடிய இராமன் கொடு முடி சூடுவன் நாளை எனக் குறிப்பிட்டதன் மூலம் தாடகையின் கொடூரத் தன்மையை சுட்டிய விதமும், அசோகவனத்துச் சீதை இழுத்து விடும் பெரு மூச்சில் ஈரச் சேலை உலர்ந்தமை பற்றிச் சொன்னதையும் விலாவாரியாக மாணவர்களுக்கு எடுத்து விளக்கினார். பின்னர் எழுந்து வெடிக்கும் எறிகணைகள்.... விமானக் குண்டு வீச்சுக்கள்... போர்க்கால சூழ்நிலையின் பதட்டம்.... நிச்சயமற்றதாகியுள்ள நிகழ்காலம் என்பவற்றால் கவலை கொண்ட மக்கள். ஏங்கி... ஏங்கி அழுத கண்ணீரால் மண் சேறாகி இருக்கிறது. அதனால் மழை பெய்தபோது நீர் தேங்கிப் போய்விட்டது. வெள்ளம் தேங்கிப் போய் விட்டமைக்குக் கூட ஒரு அரசியல் காரணம். அருமையான கற்பனை, அற்புதமான சிந்தனை, ஆசிரியரின் பாராட்டு வாசகங்கள்.... செவிப்பறையில் வந்து முட்ட.... காற்றில் பறப்பது போன்றதொரு உணர்வு சீலனுக்கு.

எழுத்துக்களின் இடைவெளிக்குள் ஆயிரமாயிரம் அர்த்தங்களைப் பொதிந்து வைக்கலாம். அந்தக் கலை தனக்கும் வந்துவிடலாம் என்ற நம்பிக்கை சீலனுக்குள் மெல்ல முளைத்து விட்டது. எண்ணங்களை எழுத்துக்களாக்கி மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்த முடியும் என்பதைக் காண உள்ளம் குதூகலித்தது. கடதாசிகள் மையினால் நிரம்பின. எண்ணங்கள் எழுத்துக்களாகக் கோலம் போட்டன.

**அறுவடை**

உழுபவனுக்கே நிலம்
சொந்தமாக வேணும்





உழைப்பவரின் குரல்
வான்வரையும் உயர...
அதனாலென்ன...
வைத்துக் கொள்ளுங்கள் என்றவர்
அறுவடையை எல்லோ அள்ளிச் சென்றனர்.

**விழிப்பு**

அடுத்த தலைமுறையின்
ஜனனத்திற்காக...
இருட்டில் பதுங்கி விழித்திருக்கும்
இளைஞர்கள் நாங்கள்
மலர்மாலைகளையல்ல
மலர் வளையங்களை நேசித்தபடியே...

சீலனின் குறிப்புக் கொப்பிகள் நிரம்பி வழிந்தன. நிகழ்கால நிகழ்ச்சிகள் பற்றிய கருத்துக்கள் பொதிந்த உள்ளடக்கம் குறித்தும் அந்த உள்ளடக்கம் பெறும் வடிவங்கள் பற்றியும் காந்தன் மிக நுணுக்கமாக ரசிப்பான். காந்தனின் ரசனைக்காகவே சீலன் அவ்வப்போது தோன்றும் எண்ணக் கருத்துக்களைப் பதிந்து கொள்வான். சீலனின் சக மாணவனும் சீலனுக்கு குடும்ப உறவினர் போல பழகியவனுமான கண்ணனின் தந்தை அகால வேளையில் அநியாயமாக உயிரிழக்க நேரிட்டபோது சீலனுக்கு உள்ளம் நொந்தது.

மண் மீதில் மனித வாழ்வு
கண் இமைப் பொழுதுக்குள்
இல்லையெனவாகலாம் ஆனாலும்
எண்ணத்தில் நிலைப்பீர்கள்.
ஆண்டவனின் பாதங்களில் உங்கள்
ஆன்மா இளைப்பாற வேண்டுகிறோம்.

என்று எழுதிய வரிகள் ஆக்கம் சீலன் என்ற குறிப்புடன் அச்சு வாகனமேறியது அஞ்சலிப் பிரசுரமாக. தந்தையைப் போன்றவரை இழந்த துயரம் மனதைக் குடைந்தாலும்.... தனது எழுத்து அச்சு வாகனமேறிப் பவனி வந்ததைக் காண ஒருவகைப் பெருமிதம் உள்ளூர ஊர்ந்தது.

விழி மூடிய தந்தையை
வழியனுப்பும் வைபவத்தில்
பங்கு கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதல் தந்த
அனைவருக்கும் நன்றிகள்.

என்று அவன் எழுதிக் கொடுத்த வரிகள் 31ம் நாள் அஞ்சலியாக பத்திரிகை விளம்பரத்தில் பிரசுரமாகியது. சீலனின் இரத்தினச் சுருக்கமான வார்த்தைப் பிரயோகம் ஊரில் பலரையும் கவர்ந்து விட்டது. அதன் விளைவு அவன் சற்றும் எதிர்பார்த்திருக்காதது. ஊரில் கிட்டத்தட்ட அனைத்துச் சாவு நிகழ்ச்சிகளுக்கும் அஞ்சலி செலுத்த வேண்டிய அவலம் வாய்த்தது. அறிமுகமே இல்லாத பலருக்காகவும் அழ வேண்டி வந்துவிட்டது. ஆனால் சீலன் வாழ்க்கையை நகர்த்தவே சிரமப்பட்டான். காற்றுப் போய்விட்ட சைக்கிளுக்கு ரியூப் மாத்த இயலாமையினால் நடந்து போன ஒரு நாளில்.... மூளைக்கு எந்த வேலையும் இல்லாமல் சைக்கிள் ஓட்டுபவனும், செருப்புத் தைப்பவனும் கூட தத்தம் தொழிலுக்கான கட்டணத்தை நறுக்காகப் பேசி வாங்கிவிட முடிகிறது. ஆனால் எனது எழுத்துக்கள்... மூளையைக் கசக்கி பிழிந்து எடுக்கும் வார்த்தைகள்... சாரமில்லாப் பண்டங்களா... என்ற சிந்தனை மேலெழுந்து அலைக்கழித்தது.

சுரேஸ் எதிர்ப் பட்டான்.
"என்னடா... சீலன் நடையில?"
"இல்லை சும்மா கிட்டடியில..." அவன் சமாளிச்சு இழுத்தான்.
"அப்ப வாவன் சைக்கிளில்." என்றபடி அவன் இடது கையை எடுக்கவும் சீலன் தாவி ஏறினான். சைக்கிள் உருண்டோடியது. லக்சுமி பவான் என்ற தேனீர்க் கடையின் முன்பாக சைக்கிளை நிறுத்தினான் சுரேஸ். "வா மச்சான் தேத்தண்ணி குடிப்பம்..." அழைத்தவாறு உள்ளே புகுந்தான். வடை வாய்ப்பன்களோடு பலகாரத்தட்டு வந்து சேர்ந்தது. "எடு சீலன்" அவன் வேண்டினான். வடையைக் கையில் எடுத்து ஒருமுறை கடிப்பதற்கிடையில்,
"மச்சான் எனக்கொரு உதவி செய்ய வேணும்"
அவன் பீடிகை போட்டான். வியப்பு மேலிட்டது சீலனுக்கு. ஏறிட்டுப் பார்த்தான்.
"மச்சான் ஒருத்தருக்கும் சொல்லாத அவள் கடிதம் எழுதிருக்கிறாள். பதில் எழுத வேணும். நல்லதொரு கவிதை எழுதித் தாறியே..."சட்டைப் பைக்குள் கையைவிட்டு என்வலப் ஒன்றை வெளியே எடுத்தான்.

கைதொட்டு எழுதிய கடதாசியை விடவும்
இதழ் நனைத்து ஒட்டிய உறை இனிக்கிறது
இதயத்தின் அருகே எப்போதும்.
சீலனின் உதடுகள் உச்சரித்தன. சுரேஸ் பரவசத்தால் உருகிப் போனான்.
"மச்சான் அப்படியே எழுதித்தாடா"





கெஞ்சினான். சீலனும் நிலத்தில் கிடந்த சிகரெட் பைக்கட் துண்டுக் கடதாசியை எடுத்து எழுதிக் கொடுத்தான். சுரேஸ் ஒரு நூறு ரூபாவைக் கைக்குள் திணித்தான். இது பற்றிக் கேள்விப்பட்ட காந்தன்,
"கவிதைகள் காசுக்கு ஈடாகாதடா... கற்பனையை விற்பனை செய்யாதே."
என்றெல்லாம் போதனை செய்தான்.
"காசு வேணுமெண்டால் உன்ரை கவிதைகளைப் புத்தகமாய் போட்டால் நல்லது"
என்று ஆலோசனையும் கூறினான்.

"யாழ்ப்பாணத்தில் எப்பிடிப் பார்த்தாலும் ஒரு ஆறு லட்சம் சனமாவது இருக்கும், அதில் சுமார் எண்பத்தைந்து வீதமான சனம் படிச்ச சனமடா... இந்தச் சனங்களுக்கு உன்ரை கவிதைகள் சரியாகப் போய்க் கிடைக்கவில்லை. புத்தகமாய்ப் போடுவம். கட்டாயம் விற்பனையாகும். அதில் லாபமும் வரும்.... உனக்கு மவுசும் வரும். உன்ரை கவிதைகளும் உலகிற்கு வெளிச்சமாகும். அதைவிட்டிட்டு காதல் தூதுக்கும் கண்ணீர் அஞ்சலிக்கும் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறாய்."

காந்தனின் கணக்கு சரியாகத்தான் இருக்கும் என்பது சீலனின் எதிர்பார்ப்பு. நம்பிக்கை ஊட்டியது. பிறகென்ன வேலை தொடங்கியதும் அச்சுக் கோர்ப்பவருக்கு வேலை. அச்சு இயந்திரத்திற்குத் தீனி. அச்சுத்தாள் வியாபாரிக்கு கமிஷன். கவிதைகள் அச்சாகி புத்தகமாயின. புத்தக வியாபாரிகளுக்கு விசேட சலுகை விலையில் வழங்கப்பட்டபோதும் இராசி பலன், வியாழ மாற்ற பலன் போன்ற புத்தகங்களுக்குக் கிட்டிய முன்வரிசை அந்தஸ்து இவனது கவிதைப் புத்தகத்திற்கு வாய்க்கவில்லை. மூளையைக் கசக்கிப் பிழிந்து வடித்தெடுத்த கவிதைகள் விற்பனையாகாத சரக்குகளாக தேங்கிப் போய்க்கிடக்க வேதனை தாளாமல் ஒரு அறிமுக அரங்கு... துண்டுப் பிரசுரம் அச்சிட்டு வீடு வீடாக விநியோகித்த போதும் கூட்டத்தில் தலைகளின் எண்ணிக்கை நூறைத்தாண்ட மறுத்து விட்டது. தேனீருக்காகவும் ஒலிபெருக்கிக்காகவும் செலவிட்ட தொகை கையைக் கடித்தது.

மேடை ஏறிய விமர்சக விற்பன்னர்கள் கவிதைகளில் எதுகை மோனை தேடினர். அட்டைப் படத்தின் நிறம் அழகாக இல்லை என்று குறை கண்டனர். புத்தகம் விற்பனையாகாத மர்மம் என்ன என்பதைக் கண்டறியும் முயற்சியாகவே ஆய்வரங்கும் அறிமுக அரங்கும் இடம்பெற்று முடிந்தது. கவலைதான் மேலிட்டது. தாள்களாக இல்லாதபோதும் சில்லறைகளாவது கிட்டும் என்ற எதிர்பார்ப்பும் பொய்த்துப் போனது. ஆனால் சீலன் என்ற பெயருக்கு முன்னால் கவிஞர் என்ற பெயர் பிரபலமானது தான் கண்ட மிச்சம் என்றாகியது. சிந்தனைகளை அறுப்பது போல மீண்டும் சைக்கிள் மணியின் ஓசை.
"சீலன் அண்ணையின் வீடு இதுதானே?"
"ஓமோம் ஆரைத் தேடுறியள்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவரைத்தான் தேடுறன் சந்திக்க வேணும்"
"அப்பிடியா... வாங்கோ... இருங்கோ..."

உரையாடல்கள் சீலனுக்குத் தெளிவாகவே கேட்டன. தங்கை உள்ளே திரும்பி, உன்னைத்தான் வரட்டாம் என்று கூறி நிறுத்தினாள். பார்வையால் ஒரு வெட்டு, இவனும் ஏதும் கடன் காரணமாக வந்திருக்கக் கூடுமோ? என்ற ஐயத்தை வெளிப்படுத்தியது. சோம்பலை உதறிவிட்டு முன் வராந்தாவுக்கு வந்தான் சீலன். அறிமுகமில்லாத முகம். எனினும் எதையோ யாசிப்பது போல அவனுக்குத் தெரிந்தது.

"என்ன வேணும்? என்ன விசயம்?" சீலனின் கேள்வி.
"அண்ணை வணக்கம். நாங்கள் புதிசாய் ஒரு மாதாந்த சஞ்சிகை தொடங்கப் போறம். உங்கட தமிழ் மாஸ்ரோட கதைச்சம். அவர் உங்கட விலாசத்தை தந்து கவிதை வாங்கிப் பிரசுரிக்கச் சொன்னவர். அவரும் ஒரு கட்டுரையை தாறன் எண்டவர்." வந்தவன் வார்த்தைகளை எடுத்து விட்டான். சீலனுக்கு தலை சுற்றுவது போலிருந்தது. எழுந்து உள்ளே போனான். சில நிமிடங்களில் திரும்பி வந்தபோது விரலிடுக்கினுள் ஒரு காகித துண்டு.

**<u>அழுகையும் சிரிப்பும்.</u>**
கருவறையின் பாதுகாப்பு
கழன்றுவிட்ட அக் கணத்தில்
மனிதா! நீ அழுதாய்!
சுற்றி இருந்தவர்கள்
குதூகலம் கொண்டனர்
சுகப் பிரசவம் என்று
இப்போது மட்டுமென்ன
அது தானே தொடர்கிறது
உனது அழுகையும் மற்றவர் சிரிப்பும்.

என்று அதில் எழுதப் பட்டிருந்தது. கைகளை நீட்டிக் காகிதத் துண்டைப் பெற்றுக் கொண்டவர் நன்றி சொல்லி விட்டு எழுந்து போகிறார். அவன் வீட்டு முகப்பை வெறித்தபடி.

**ஜனவரி 1995**





# 11. எக்ஸ்போர்ட் பார்சல்

"நான் இப்போது ஒரு எக்ஸ்போர்ட் பார்சல்"
மிகச் சாதாரணமாக எந்தவித சலனமும் இல்லாமலேயே அவள் வார்த்தைகளை உதிர்த்து இருந்தாள்.
ஆனால் விந்தனுக்கு சம்மட்டி கொண்டு யாரே தலையில் அடித்தது போல வலி எடுத்தது.
"எக்ஸ்போர்ட் பார்சல்"... ஏற்றுமதிக்கான பொருள்...என்ன பொருத்தமான வர்ணனை. வார்த்தைகளின் நளினத்தை விடவும் அதன் உள்ளடக்கம் பெரிதும் சங்கடப்படுத்தியது. ஒரேயொரு வார்த்தைக்குள் வாழ்க்கைப் பயணத்தின் தற்போதைய நிலை வெளிப்பட்டது. நினைவுப் பதிவுகளிலிருந்து மறைய மறுத்தது.
அவளையும் பழைய நட்பையும் நினைவுக்கு கொண்டு வந்தான்.

□ □ □ □ □ □

"ஹாய்! எங்க இந்தப் பக்கம்? எப்ப வந்தனீர்?" காலி வீதியில் நேரெதிராக வந்து கொண்டிருந்த இளம் பெண் ஒருத்தி குரல் கொடுத்தாள்.
திடுக்கிட்ட விந்தன் உற்றுப் பார்த்தான்.
பழக்கமான குரல் நன்கு அறிமுகமானது போன்ற தோற்றம். எனினும் சட்டென்று இனங் காண முடியவில்லை. சிரமப்பட்டான். யாரென்று வினவவும் வெட்கம் தடுத்தது.
"என்ன விந்தன் என்னைத் தெரியவில்லையா?
பதில் சொல்ல சொற்கள் வரவில்லை. மௌனமாக உற்றுப் பார்த்தான். அசட்டுத்தனம் முகத்தில் வழிவதுபோன்ற பிரமை. புன்னகையை வரவழைத்தான் வலிந்து.
"நான் கீதா! நாதனின் தங்கச்சி" அவளது குரல் கணீரென்றது.
"ஓ... ஐ...சீ... அடையாளமே தெரியேல்ல.
ஆளே நல்லாய் மாறிப் போனீர்!"
"அப்படியோ!"
"உடம்பும் வைச்சு.. நிறமும் மாறி.... கோலமும் வித்தியாசமாய்..." "சும்மா சொல்லுறீர் போல.... மூண்டு நேரமும் சாப்பிட்டுக் கொண்டு அறைக்குள் அடைஞ்சு கிடக்கிறது தானே! அதுதான் உடம்பும் கொஞ்சம் ஊதிப் போச்சு. நிறமும் வெளுப்பாகிப் போச்சு!.."
அவள் கூறி முடிப்பதற்கு முன்பாகவே அவன் குறுக்கிட்டான்.
"அது மட்டுமில்லை... ஹெயார் ஸ்டைல், உடுப்புப் பாசன் எல்லாம்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிப் போச்சு. இந்தக் கோலத்தில் நான் உங்கள ஊரில பார்க்கேல்லையே.''
''ஓமோம்... அதுசரி கடைசியா எப்ப கண்டிருப்போம்?''

அவளது கேள்விக்கு பதில் தேடியது மனம்.
எப்ப கண்டது? தென்னையில ஷெல் பட்டு விட்டுப் பறந்து போனதைப் பார்த்துக் கொண்டு பங்கருக்கை (Banker) ஓடிப்போனது ஞாபகம் இருக்குதோ? தற்சமயம் ஆமி வந்தாலும் இதுக்குள்ளேயே எல்லாரும் சமாதி தான் எண்டு பயந்து உறைந்து போய் இருந்தது ஞாபகம் இருக்குதோ? ஷெல் பறந்து கொண்டு போற ''உஸ்....உஸ்....'' எண்ட சத்தத்தைக் கேட்டுக் கொண்டு ''அப்பனே. பிள்ளையாரே... கடவுளே முருகா'' எண்டு கத்தினது ஞாபகம் இருக்குதோ?
''இதுகளை எல்லாம் மறக்க ஏலுமே. பங்கர் வாசலிலிலேயே எப்பவும் கதிரையைப் போட்டிட்டு குடியிருக்கிற தேவன், ரேடியோவில எப்.எம் மீற்றரைப் பிடிச்சபடி சிங்கள உரையாடலைக் கேட்கத் தெண்டிக்கிற மணியம். மாஸ்ரர். பங்கருக்குள்ளாலை எட்டிப் பார்த்தபடி குத்துறான்... எழும்புறான்... எண்டு நேரடி வர்ணனை செய்யும் லோகன். பங்கருக்குள்ளேயே பாய் போட்டுப் படுத்துக் கொள்ளும் கமலா அக்கா.
ஆரைத்தான் மறக்கேலும்''
விந்தன் மூச்சு விட்டு நிறுத்தினான்.
''குப்பிளானுக்கு ஆமி வருகுதெண்டு வெளிக்கிட்டு ஓடினாப் பிறகு உங்களைக் காணேல்ல என்ன?''
''பத்து வருசம்.... நேற்று மாதிரிக் கிடக்கு என்ன?''
''நாளும், பொழுதும் போற வேகத்துக்கு நாங்கள் போகேலுமே?''
''குப்பிளானில இருந்து வெளிக்கிட்டாப் பிறகு எங்க இருந்தனியள்''
''கொஞ்ச நாள் ஊரெழுவில இருந்தம். பிறகு நாவற்குழியில... வலிகாமத்தில் இருந்து சனமெல்லாம் வெளிக்கிட்டதோடை கொழும்புக்கு வந்திட்டம்.''
''அப்ப 1995ல் கொழும்புக்கு வந்திருப்பியள் என்ன? குப்பிளானில் இருந்து கொழும்பு வந்து சேரவே ஐந்து வருசம் எடுத்திருக்கு என்ன?'' என்று அவன் கேள்வி எழுப்பியதுடன் விரக்தியாய் சிரித்தான்.
''இந்த வாழைச்சருகுகள் கூட ரயிலில கொழும்புக்குப் போகுது. எனக்குத்தான் ரயில்ல போக விதியில்ல'' எண்டு நாதன் சின்னப் பராயத்தில் வயிற்றெரிச்சல் படுவது நினைவில் மின்னி மறைந்தது.
''எங்கடை முன்கதைச் சுருக்கம் கேட்டியள்! நீங்கள் என்ன மாதிரி?'' அவளது கேள்வி அவனை சுய நினைவுக்கு கொண்டு வந்தது.
''நாங்களோ.... குப்பிளானில இருந்து வெளிக்கிட்டதோடு யாழ்ப்பாணம் ரவுனுக்கை இருந்தம். பிறகு சனத்தோடை சனமாய் தென்மராட்சி. மட்டுவிலில்





ஒரு கொட்டில் கட்டிக் கொண்டிருந்தம். பிறகு எழுதுமட்டுவாளில் பிளாஸ்டிக் கூரைக்கு கீழ் சீவியம். கிளாலி கடற்கரை வரையும் போனம். அங்காலையும் போகத்தான் நினைச்சம்... ஆனா முடியேல்லை. அதால வலிகாமம் திரும்பினம். எண்டாலும் இன்னும் ஊருக்கு குடியிருக்கப் போகேல்லை. உங்களுக்குத் தெரியும்தானே. எங்கட குடும்பத்தைப் பற்றி.. மாதர் அணி ஒரு பக்கம். பேபி பிரிகேட் ஒரு பக்கம். சனத்தொகை கூட எல்லாரையும் வைச்சுக் கொண்டு சமாளிக்கிறதே பெரிய வேலை.''
''ஓமோம்!. அதெல்லாம் தெரியும். சாரதாக்காவை எப்பிடி இருக்கினம்? அவவின் பிள்ளைகள் எல்லாம் பெரியாக்கள் ஆகியிருப்பினம் என்ன? படிக்கினமோ? நீர் கலியாணம் செய்திட்டீரோ?'' மூச்சு விடாமல் கேள்விகளை அடுக்கினாள்.''

''இடப்பெயர்வோடை அப்பா தவறிப்போட்டார். அம்மாவும் படுத்த படுக்கைதான். அண்ணனும், சின்னக்காவும் தங்கச்சி குஞ்சுவும் கலியாணம் செய்திட்டினம். அத்தான்ரை தம்பியை வீடு பார்க்கப் போனபோது ஆமி பிடிச்சது. அனுராதபுரம் கோட்டுக்கு கொண்டு வந்தவை. பிணை எடுத்துக் கொண்டு போக வந்தனான். போக வழியில்லாததால நிக்கிறன்.'' இடைவெளி விடாமல் கூறி முடித்தான்.
அப்போது சைரன்கள் ஒலித்த சப்தம் கேட்டது. ஒன்றன் பின் ஒன்றாகச் சில அம்புலன்ஸ் வாகனங்கள் காலி வீதியின் வாகன நெரிசலை ஊடறுத்துப் பறந்தன.
''எங்கையோ அடிபாடு நடக்குது போல..''
''அப்பிடித்தான் இருக்கும்'' அவளும் உறுதிப்படுத்தினாள்.
''ஊர் நிலவரம் எப்படி? ஊர்ப்பக்கம் போனனீரோ? பள்ளிக்கூடம் கோவில் எல்லாம் இருக்குதோ''?
''அத்தான்ரை தம்பியும், அக்காட மூத்தவனும் வீடு பார்க்கப் போனவை மிதிவெடியில பட்டினம். அக்காட மகனுக்கு ஒரு கால் போச்சு... சத்தம் கேட்டு ஓடி வந்த ஆமிக்காரர் ஏதோ கேட்டிருக்கினம். சிங்களம் தெரியாம இவை முழிச்சுக் கொண்டு நிற்க சந்தேகத்தில் கூட்டிக் கொண்டு போய் விசாரிச்சுப் போட்டு கோர்ட்டில குடுத்திருக்கினம். யாழ்ப்பாணத்தில் கோர்ட் இல்லாததால அனுராதபுரம் வந்து அலக்கழியுறம்.''
விந்தனுக்கு கண்களில் நீர் தளும்பியது. சமாளிக்கத் தெண்டித்தான். ''நாதன் எங்கே? நீர் என்ன செய்யுறீர்? எங்கை நிக்கிறீர்?'' அவன் அடுத்த கட்டத்திற்கு தாவினான்.
''எங்கே நிற்கிறது ரோட்டிலதான்.'' அவளது குரலில் விரக்தியின் வெளிப்பாடு. மௌனம் போர்வையாக போர்த்த இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி நிற்கின்றனர்.
அப்போது வேட்டி சேர்ட்டும், நெற்றி நிறைந்த விபூதியுமாய் நடுத்தர வயதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இருவர் நடந்து வந்தனர். கடந்து செல்ல முயற்சித்தனர். அவர்களுக்கு வழிவிடும் முகமாக பாதையோரமாக அவனுக்கு அருகாக அவள் சென்றாள்.
"அங்க அவனுகள் அடிபடுறாங்கள். பெட்டி பெட்டியாய் அடுக்கி அனுப்பி வைக்கிறாங்கள். இங்க இதைப் பற்றி ஆருக்கென்ன கவலை. அங்கங்க சோடி, சோடியாய் நிண்டு வம்பளக்க வேண்டியது தானே. எங்கட பண்பாடு, கலாச்சாரம் எல்லாம் எப்பிடித் தெருவில சீரழியுது பாத்தியளே!"
அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டது இவர்களுக்கும் தெளிவாகவே கேட்டது.

□ □ □ □ □ □

பத்தாண்டுகளுக்கு முன்பாக சென்றது விந்தனின் சிந்தனை. யாழ்ப்பாணத்துச் செம்மண் பரப்பின் மையத்திலுள்ளது குப்பிளான். வாழைத் தோட்டங்கள் செழித்து வளர்ந்த பூமி. புகையிலை, வெங்காயம், கத்தரி, வெண்டி, மிளகாய் என்று காலத்திற்குக் காலம் பொன் விளையும் பிரதேசம். உயர்ந்து வளர்ந்த பனந்தோப்புக்கள். லக்சபானாவின் மின்சாரம் ஒளியூட்டிக் கொண்டிருந்த காலம். கமக்காரார் என்ற பெருமை தெரிய செம்மண் புழுதி படிந்த மேனியர்களாகச் செல்லும் மனிதர்கள். யாழ்ப்பாணக் கோட்டை அடிபாட்டுக்குப் பின்னர் பலாலி படைத்தளம் விரிவாக்கப்பட்டது. அப்போது கிராமம் இடம்பெயர வேண்டியதாயிற்று. பத்து ஆண்டுகள் பறந்துபோன பின்னும் இன்னமும் வழமைக்குத் திரும்பாத ஊர்.

"இனியும் பட முடியாது துயரம்" பெருமூச்சு எறிந்தான் விந்தன். நாதனும், தேவனும், லோகனும், நானும் ஊருக்குள்ள சுத்தித் திரிஞ்சது ஞாபகம் வந்தது.

"அதுதான் எப்பிடியெல்லாம் இருந்தம். எல்லாம் மாறிப் போச்சு"
"ஊருக்கு திரும்பிப் போறியளோ? அல்லது எங்கையும் வெளியில போற எண்ணமோ?" கீதாவின் கேள்வி செவிப்பறையில் அறைந்தது. "வெளியில எங்க போறது? அதுக்கும் ஒரு தொகை காசு வேணுமே, ஊருக்குத்தான் போக வேணும். போக்குவரத்தில்லை. தெருவில கிடந்து சீரழிய வேண்டிக் கிடக்கு."

விந்தன் அலுத்துக் கொண்டான்.
அவனது உள்ளத்து வேதனையை உணர்ந்து கொண்டவளாக கீதா, "வாருங்கோ ஏதாவது குடிப்பம்" என்று அழைப்பு விடுத்தாள்.
"ஓமோம் குடிக்கலாம்தான்" என்றவன் குனிந்து சட்டைப் பையைக் கண்களால் துழாவினான்.





"என்ன யோசிக்கிறியள்? வாங்கோ என்னட்டைக் காசு கிடக்கு" அவள் தெம்பூட்டினாள்.
தனது செய்கை உள்ளத்தை திறந்து காட்டி விட்டதே என்ற வெட்க உணர்ச்சி மேலிட்டது அவனுக்கு. அதனை மறைக்கும் நோக்கத்துடன் "நீங்கள் என்ன செய்யுறியள்? ஏதும் வேலை பாக்கிறியளோ?" கேள்வி எழுப்பினான்.

"சீச்சீ அப்பிடி ஒண்டுமில்லை. அண்ணை சவுதிக்குப் போய் மூண்டு வருசமாச்சு. அங்க அவரோடை வேலை செய்தவரை எனக்கு நிச்சயம் பண்ணியாச்சு. போனமுறை கொன்ராக்ட் முடிஞ்சு வந்து நிக்கேக்கை ரிஜிஸ்ரேசன் நடந்தது. பிறகும் அவர் ஜேர்மனிக்குப் போட்டார். என்னையும் அங்க வரட்டாம் கலியாணம் செய்ய. நானும் போகத்தான் தெண்டிக்கிறன். மூன்று தரம் போய் போய் திரும்பி வந்திட்டன்."
"எங்கை போய் வந்தியள்?"

"இந்தோனேசியா போய் அங்கயிருந்து பாங்கொக் ஊடாக ஜெர்மனி போக முயற்சி செய்து பிடிபட்டு திரும்பி வந்தன். பத்துப் பிளேனில ஏறியிறங்கியாச்சு. ஆயிரம் கிலோ மீற்றர் ரெயினிலையும் பயணம் பண்ணியாச்சு. இங்க லொட்சிலையும் ரண்டு தரம் பொலிஸ் கூட்டிக் கொண்டு போச்சுது. எல்லாக் கஷ்டமும் பட்டாச்சு." மூச்சு விடாமல் சொல்லி முடித்தாள். "எக்ஸ்போர்ட் பார்சல் கூட சுகமாய் போய்ச் சேர்ந்திடும் ஆனா நானும் ஒரு எக்ஸ்போர்ட் பார்சல் போல லொட்ச் ரூமுக்குள்ள முடங்கிக் கிடக்கிறன்" என்றாள்.

□ □ □ □ □ □

காலி வீதியில் சிவப்பு விளக்குகள் எரிவதையும் பொருட்படுத்தாமல் அம்பியூலன்ஸ் வண்டிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன.
"எங்கையோ சண்டை நடக்குது போல...."

**ஜனவரி 1999**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்து

"இந்தச் சாவு விபத்தில்லை கொலை.. கொலை... படுகொலை... பட்டப்பகலில் நடுவீதியில் அநியாயமாக நடந்த கோரக்கொலை.... இதை விபத்து எண்டு சொல்லிக் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்துப்போட நானொண்டும் பைத்தியக்காரனில்லை."

சபாரத்தினத்தின் குரல் உரத்து ஒலித்தது. வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணைப் பிரிவின் சுவர்களில் பட்டு எதிரொலித்தது. சட்ட வைத்திய அதிகாரியும், கூட இருந்த வைத்தியசாலை ஊழியர்களும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்து முழித்தனர். கண்ணீரும் கம்பலையுமாக நின்றுகொண்டிருந்த சபாரத்தினத்தின் முன்னால் அவரது மூத்த மகன் செண்பகராசன் உயிரற்றுக் கிடந்தான். சடலத்தை அழகுபடுத்தும் மலர்ச்சாலை ஊழியர்கள் சிலர் கதவுகளைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்தனர். சட்டவைத்தியரும், மரணவிசாரனை அதிகாரியும் முகத்தில் கவலை தேங்க நின்றிருந்ததைக் கண்டு அவர்கள் மௌனமாகினர். சடலத்தை இனிமேலாவது தூக்கிச் செல்லலாமோவென விழிகளால் வினாத் தொடுத்தனர்.

மரணவிசாரணை அதிகாரி சட்ட மருத்துவரை உற்று நோக்கினார். சட்ட மருத்துவர் சடலத்தின் மீது கையை வைத்தார். "இது சுவாசப்பை..... இந்த எலும்பு முறிந்து இதயத்தைத் தாக்கியுள்ளது. திடீர் மரணத்திற்கு காரணம் இதுதான். வேகமாக வந்த பாரமான வாகனத்தில் பலமாக மோதியதால் நெஞ்சக் கூட்டின் எலும்பு முறிந்து போயுள்ளது. இவ் எலும்பு முறிவுதான் மரணத்திற்கு காரணமான போதும் மேலும் பல எலும்பு முறிவுகளும் உள்ளன. உரசல் காயங்களும் இருக்கிறது. இங்க முகம் முதல் கை, கால் உட்பட உடம்பெங்கும் பல உரசல் காயங்கள்..... பார்க்கிறீங்களோ..... இதெல்லாம் உரஞ்சுப்பட்ட காயங்கள்....இதுகளப் பார்க்கிறப்போ விபத்தில் தான் இந்த மரணம் நடந்திருக்க வேணும்"

வைத்தியர் நிதானமாக வார்த்தைகளை எடுத்து அடுக்கினார். சபாரத்தினம் எந்தப் பதிலும் கூறாமல் தேம்பித் தேம்பி அழுதார். "ஐயா.... இது விபத்தில்லை....... கொலை எண்டு நீங்கள் சந்தேகப்பட்டால்.... ஆரில சந்தேகப்படுறியள்..... எப்படி இந்தக் கொலை நடந்திருக்கலாம் எண்டு நினைக்கிறியள்..... எண்டதுகளைச் சொல்ல வேணும். அப்பத்தான் விசாரணையைத் தொடரலாம். இல்லாட்டி விசாரணையை இடை நிறுத்திப்போட்டு சவ அடக்கத்திற்கு ஏற்பாடு செய்யவேணும். இப்ப என்ன செய்யிறது. சொல்லுங்கோ, எங்களுக்கு நேரம் போகுது." மரண விசாரணை அதிகாரி அவசரப்படுத்தினார். இந்த வேளையில் செண்பகராசனின் தம்பி





அன்பரசன் அவ் இடத்திற்கு வந்து சேர்ந்தான். எல்லோரது பார்வையும் அவன் மீது படர்ந்தது. மலர்ச்சாலையின் ஊழியர்கள் அன்பரசனை பார்வையாலேயே துழாவி உத்தரவு போட்டனர்.
"தம்பி இது விபத்தல்ல... கொலை எண்டு அப்பா சொல்லுறார். அதால மரண விசாரணையை முடித்து சடலத்தை அனுப்ப இயலாமல் இருக்கு......" வைத்தியர் மெல்லிய குரலில் இழுத்தார்.

□ □ □ □ □ □

கவலை தேங்கிய நெஞ்சத்துடனும், கண்ணீர் மல்கிய விழிகளோடும் அன்பரசன் பேசத்தொடங்கினான்.
"இதோ சடலமாய் கிடக்கும் செண்பகராசன் எனது மூத்த சகோதரர். வயது 32. இன்னமும் திருமணமாகாதவர். எனினும் இவருக்கு காதலி ஒருவர் இருக்கிறார். அவரது குடும்பத்தினர் மூலமாக எனது சகோதரருக்கு இனிப்பு வகைககள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் ஒரு நிறுவனத்தில் சந்தைப்படுத்தும் அலுவலராக வேலைவாய்ப்பு கிடைத்திருந்தது..."

"உங்கள் குடும்ப விவகாரங்கள் இங்கு தேவையற்றது. எனினும் இவரது மரணத்துடன் தொடர்புபடக்கூடிய விடயங்களாக மட்டும் சொல்லலாம். இவரது மரணத்தின் பின்னணியில் ஏதேனும் சதி இருக்கலாம் என்று சந்தேகப்படுறீர்களா?" மரண விசாரணை அதிகாரி கேள்வி எழுப்பினார்.
"சம்பவ தினமான நேற்றுக்காலையில் எனது சகோதரர் தனது மோட்டார் சைக்கிளில் தனது கம்பெனி அலுவலகம் நோக்கிப் புறப்பட்டார்."

"என்ன ரக மோட்டார் சைக்கிள்? வாகனத் தொடரிலக்கம் என்ன?" ஹீரோ ஹொன்டா ரகம். **78-9099** இலக்கமுடையது. விபத்தில் சிக்கி உருக்குலைந்து போயிருக்கும் மோட்டார் சைக்கிள் அதுதான்". குறிப்புப் புத்தகங்களை புரட்டிப் பார்த்துக் கொண்ட பொலிஸ் கான்ஸ்டபிள் கூறினார்.

"பிரதான வீதியில் கண்டயினர் (Container) வாகனத்தை ஓட்டிக் கொண்டு வந்தேன். திடீரென ஏதோவொரு சத்தம் கேட்டது. வாகனத்தை நிறுத்திவிட்டு இறங்கி ஓடிப்போய் பார்த்தபோது மோட்டார் சைக்கிள் உருண்டோடிக் கொண்டிருந்தது. இவரது மேலுடுப்பு ஒன்று கண்டயினரின் கொழுக்கியில் தொங்கிக் கிடந்தது. பின்பக்கச் சில்லுக்கு முன்பாக வாகனத்திற்கு கீழே முனகல் சத்தம் கேட்டது. எனது கிளீனரின் உதவியுடன் வாகனத்திற்கு கீழ் கிடந்த இவரைத் தூக்கி வெளியில் கொண்டு வந்தேன். அப்போது அவருக்கு உணர்வு எதுவும் இருந்ததாக எனக்கு நினைவில்லை. தேகம் முழுவதும் இரத்தக் காயங்கள் இருந்தன. உடனடியாக அவரை வைத்தியசாலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பி வைத்தோம். அதனிடையில் ஸ்தலத்திற்கு பொலிசார் விரைந்து வந்து விட்டனர்.'' கண்டயினர் வாகனத்தின் சாரதி கூறி நிறுத்தினார்.
“நேற்றுக் காலையில் பிரதான வீதி வழியாக கண்டயினர் வாகனம் வந்து கொண்டிருந்தது. அவ்வாகனத்தை வலப்புறமாக முந்திச் செல்ல மோட்டார் சைக்கிளில் வந்தவர் முயன்றிருக்கிறார். அப்போது எதிர்ப்புறமாக வாகனங்கள் வந்து கொண்டிருந்ததால் கண்டயினர் வாகனத்திற்கு சமாந்தரமாக சமீபமாக நெருங்கிச் சென்றிருக்கிறார். அவ்வேளையில் மோட்டார் சைக்கிள் வாகனமோட்டி அணிந்திருந்த மேல் சட்டை கண்டயினரின் கொழுக்கியில் சிக்கிக் கொண்டிருக்க வேண்டும். அது மோட்டார் சைக்கிளோட்டி நிதானம் இழக்கக் காரணமாகியிருக்கலாம். இதனாலேயே விபத்து நேரிட்டிருக்கலாம்.'' பொலிஸ் கான்ஸ்டபிளின் வாக்குமூலம் வெளிப்பட்டது. “சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பார்க்கும் போது விபத்து என்றே தீர்ப்பளிக்கத் தோன்றுகிறது.'' மரண விசாரணை அதிகாரி கூறிவிட்டு நிமிர்ந்து சபாரத்தினத்தை உற்று நோக்கினார்.
“இல்லையில்லை.... இது கொலை..... பட்டப்பகலில் நடந்த படுகொலை....'' உரத்த குரலில் சப்தமிட்ட சபாரத்தினம் மேலும் தொடர்ந்தார்.

□ □ □ □ □ □

விற்பனை அலுவலர் வேலை கிடைச்சிட்டுது. எல்லா ஊர்களுக்கும் போய்வர வேணும். அதுக்காக எனக்கு மோட்டார் சைக்கிள் தேவை. எனவே அதற்குப் பணம் வேண்டும் என்று செண்பகராசன் அறிவித்ததும் உடனடியாக ஊரில் எனக்கிருந்த வயல் நிலத்தை விற்றுவிட்டு எழுபத்தையாயிரம் ரூபா அனுப்பி வைத்தேன். இரண்டு மாதங்களுக்கு உள்ளேயே இப்படி நேரும் என்று நான் எதிர்பார்த்திருக்கவே இல்லை. தேம்பித் தேம்பி அழுதார்.

“இங்க கிடப்பது எனது மகனின் சடலம் மட்டுமல்ல. இந்த நாட்டில் நடைபெறும் எந்த நிகழ்ச்சியையும் கட்டுப்படுத்த முடியாத அப்பாவி மக்களின் ஆன்மா.'' வெண்கலக் குரலில் அவரது கூற்று எதிரொலித்தது. “கட்டுப்பாடில்லாத வாகன இறக்குமதி... குண்டும் குழியுமாகக் கிடக்கும் வீதிகளைத் திருத்தாத அசமந்தப் போக்குகள்.... வீணான ஆடம்பரத்தை விரும்பும் அகம்பாவம்..... இவைதான் எனது மகன் செண்பகத்தைக் கொலை செய்த கொலைகாரர்கள். இந்தக் கொலைகாரர்களைக் கண்டு பிடித்து தண்டனை வழங்க முடியுமா உங்களுக்கு?''

“செத்தவன் செத்துப் போனான். எப்பிடிச் செத்தான் எண்டு ஆராய்ச்சி பண்ணி என்னத்தைக் கிழிக்கப் போறியள். விபத்து எண்டு எழுதினால் இன்ஸ்யூரன்ஸ் கிடைக்கலாம். கொலை எண்டு எழுதினால் விசாரணை முடியாது.''





“ஆடம்பரத்தை நாடிச் சென்ற அகம்பாவத்தின் தற்கொலை எண்டு கூட எழுதலாம். ஊரில இருந்த நிலத்தை உழுது கொண்டிருந்தால் உயிரும் மிஞ்சியிருக்கலாம். நான் இப்ப என்ன செய்ய? பிள்ளையும் இல்லை! சொத்தும் இல்லை'' தலையிலும் மார்பிலும் இரு கைகளாலும் மாறி மாறி அடித்தபடி அவர் புலம்பிக் கொண்டிருந்தார்.

மரண விசாரணை அதிகாரி அன்பரசனைப் பார்த்தார். இங்க தாருங்கோ என்று கையை நீட்டி அவர் வைத்திருந்த கடதாசிக் கட்டுக்களை வாங்கிய அன்பரசன் காட்டிய இடத்தில் எல்லாம் கையெழுத்துப் போட்டான்.

சடலத்தைக் தூக்கிக் கொண்டு மலர்ச்சாலை ஊழியர்கள் அப்பால் நகர்ந்தனர்.
“என்ன நடந்தது? என்ன தீர்ப்புக் கூறியிருக்கிறார்?''
சபாரத்தினம் தொடர்ந்து கேள்வி எழுப்பினார்.

“அப்பா வாங்கோ போவம். நடந்தது நடந்து போச்சு. என்ன தீர்ப்பை எப்படி எழுதினால் என்ன? போன உயிர் திரும்பி வரவா போகுது'' அன்பரசன் தந்தையை அரவணைத்த படி வைத்தியசாலையின் சவச்சாலையிலிருந்து வெளியேறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தமிழனின் கதை

"ஐ வான்ட் ரூ சீ மை கிரான்ட்பா இம்மீடியட்லி" (எனது தாத்தாவை நான் உடனடியாக பார்க்க வேண்டும்) வீட்டுக்கதவைத் திறந்து கொண்டு உள் நுழைந்த விந்தன் கத்தினான். ஒரு நாளும் இல்லாத விதமாய் மகன் இப்படிக் கேட்டதும் தனு திடுக்குற்றுப்போனாள்.

மெல்ல மெல்ல நடந்து அவனருகே வந்தாள். விந்தன் இருந்த கதிரையின் கைப்பிடியில் அமர்ந்து அவன் வைத்திருந்த புத்தகப் பையை வாங்கினாள். மெதுவாகத் தலையை வருடினாள். அவன் அணிந்திருந்த தடித்த கோர்ட்டைக் (மேல் சட்டையை) கழற்றி எடுத்தாள். கழுத்துப்பட்டியை அகற்றினாள். அப்படியே குனிந்து சப்பாத்து லேசுகளையும் மெல்ல அவிழ்த்தாள்.

"தம்பி...... காலை கொஞ்சம் நீட்டுங்கோ..... சொக்ஸ் கழட்டுவம்" என்றாள். அவன் மீண்டும் தலையைச் சிலுப்பி

"வெயர் இஸ் மை கிரான்ட்பா" (எங்கே எனது தாத்தா) என்றான். ஓகே.... ஓகே.... ஐ..வில் லெட் யூ நோ (நான் உனக்கு தெரிவிக்கிறேன்) என அவள் பதிலளித்த" படி எழுந்து நடந்தாள். பொடட்டோ சிப்ஸ்.... சீஸ்... சில பாண் துண்டுகள் நிரம்பிய தட்டு ஒரு கையில்.... மறு கையில் ஒரு கோப்பை தேனீருடன் அவள் திரும்பி வந்தாள். கதிரையை விட்டு அசையாமல் தாயையே உற்றுப் பார்த்தப்படி இருந்தான் விந்தன்.

கான் யூ காவ் சம் சிப்ஸ் (நீர் சிலவற்றை சாப்பிடுகிறீரா?) என்றாள் அன்பு ஒழுக.

(No, I want to see my grandpa first) "நோ.... ஐ வான்ட் ரு சீ மை கிரான்ட்பா பெஸ்ட்" விந்தனின் குரல் உறுதியாக ஒலித்தது.

கொண்டு வந்த தட்டையும், தேனீர்க் கோப்பையையும் அருகில் இருந்த மேசையில் பக்குவமாக வைத்துவிட்டு அவனருகே போய் அமர்ந்தாள்.

"யூ நோட்டி" (you naughty) என்ற படி அவன் விலகினான். "வட் கப்பன் ரு யூ (What happen to you) அவள் வினவினாள். அவன் சிறிது நேரம் எதுவும் பேசவில்லை. உம்மென்று முகத்தை





வைத்துக் கொண்டிருந்தான். மெல்ல எழுந்து வாசல் கதவு வரை சென்றவள் திரும்பி வந்து அறையின் வெப்பக் கணகணப்பைச் சரிப்படுத்தினாள். லண்டனின் குளிர் உடலை நடுங்கச் செய்ததை விடவும் அதிகமாக மகனின் கேள்வி உள்ளத்தை நடுங்கச் செய்தது.

தொலைபேசியின் எண்களைச் சுழற்றினாள் தனு. 00941 597087 என்ற எண்கள் அழுத்தப்பட்டு முடிந்ததும் தொலைபேசியின் மணி ஒலித்தது கேட்டது. "ஹலோ.... ஹலோ.... நான் தனு பேசுறேன்" "Yes Good Morning . How are You" என்று ஒலித்தது. மறுமுனை.

"அம்மா எணேய்.... அப்பா இல்லையே.... ஒருக்கா கதைக்கச் சொல்லுங்கோ அவசரமாய்" "What.... What.... Why...." அம்மா கொழும்பிலிருந்து அவசரம் விளங்காமல் கேள்வி எழுப்பிக்கொண்டிருந்தாள்.

"அது பிறகு ஆறுதலாய் சொல்லுறன். இப்ப அப்பாட்டைக் குடணை" தனுவின் பதிலில் வேகம்.

"இஞ்சை வாங்கோப்பா.... உங்களைத்தான் கதைக்கட்டாம்.... லண்டனிலே இருந்து தனு எடுத்திருக்கிறாள்." எனக் கூறியபடி கமலம்மா தொலைபேசியைக் கணவனிடம் கொடுத்தாள். "என்னப்பா.... இந்த நேரம்" அலுத்துச் சலித்தப்படித் அவர் றிசீவரை வாங்கினார். "ஹலோ.... தனு.... நான் இங்கை அப்பா பேசிறன். சொல்லும் என்ன அவசரம்.... என்ன பிரச்சனை."

"இல்லையப்பா.... இவன் விந்தன் பள்ளிக்கூடத்தால வந்த நேரம் தொடக்கம் அடம்பிடிக்கிறான். உங்களோட கதைக்க வேணுமாம்".

"என்ன இருந்தாலும் அவன் என்ர பேரன் எல்லே" எனச் சத்தமிட்டுக் கூறிப் பெலத்துச் சிரித்தார்.

"எங்க அவனிட்டக் குடு நான் கதைக்கிறேன்".

"விந்தன் கம் கியர்.... கியர் இஸ் யுவர் கிராண்ட்பா" (Vinthan Come here. Here is your grandpa) அவள் அழைத்தாள். ஓடிச் சென்று தொலைபேசி றீசிவரை அவன் பறித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Hello Grandpa.... How are You...."

"Yes I am fine. How are You"

"fine.... will you come on tomorrow"

"Why ?"

"To take me to School"

"How Can I...." விழி பிதுங்க முழித்தார்.

" I don't know.... you must come on tomorrow to take me to School. Otherwise I will not go"

உறுதியாகத் தெரிவித்த அவன் படக்கென றிசிவரை வைத்து தொலைபேசித் தொடர்பைத் துண்டித்துவிட்டான்.

□ □ □ □ □ □

தனுவுக்கு இப்போது கவலை இன்னும் அதிகமாயிற்று. தனது சிறிய பராயத்தில் அம்மம்மாவுடன் சைவத் தமிழ் பாடசாலைக்கு நடந்து போனது நினைவுக்கு வந்தது. பிஞ்சு புளியங்காய் பிடுங்கி வழி வழியே கடித்துத் துப்பியப்படி வீடு வந்து சேர்வது. இலந்தைப்பழம் பொறுக்கவும், நெல்லிக்காய் தேடவும், தன் வயது ஒத்தவர்களுடன் திரிவது.... பெரியவளானது.... எல்லாம் மனக் கண்ணில் நிழலாடியது.

பத்தாம் வகுப்புப் பரீட்சை நடக்கும் சமயத்தில்.... விமானக் குண்டு வீச்சும் சம்பவம் ஒன்றைக் கண்ணால் கண்டதும்.... அதன் விளைவாக உணர்ச்சி வசப்பட்டு நின்றதும்.... நண்பிகள் சிலருடன் இணைந்து பயிற்சி பாசறை நோக்கிப் பயணம் செய்ததும்.... தமிழ் மண் காக்க, மானம் காக்க, போராடுவதற்காக வியர்வை சொரிந்ததும்.... குருதி சிந்தியதும்.... எல்லாம் நினைவுக்கு வந்து அலைக்கழித்தது.... இந்தக் கதைகளை இப்போது எடுத்துச் சொன்னால் இவனுக்கு விளங்கப் போவதில்லை. ஆனாலும் நாங்கள் யார்? ஏன் இங்கு வந்தோம்? சிங்கள அரசின் எதேச்சாதிகார அடக்குமுறை எப்படிப் பட்டது? இவற்றைச் சாடையாக என்றாலும் இவனுக்குச் சொல்லி வைக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. இதனை உணர்ந்தவளாக எழுந்து நடந்தாள். தன் அறைக்குள் சென்று உலக உருண்டை ஒன்றையும் பெரிய உலகப் படம் ஒன்றையும் எடுத்துக் கொண்டு வந்தாள். "விந்தன் கம் கியர்"





(Come here) அவள் அழைத்தாள். அவன் அசையவில்லை. அவனிருந்த கதிரையின் அருகே சென்று நிலத்தில் உலகப் படத்தை விரித்தாள்.

"ஹியர் இஸ் சிறிலங்கா" (Here is Srilanka) அவள் தொட்டுக் காட்டினாள். விந்தன் புருவத்தை உயர்த்திப் பார்வையைச் செலுத்தினான்.

"வீ. ஆர் சிறிலங்கன்ஸ் (We are Srilankans)

அவள் சொன்னாள் "SO" அவன் பதிலில் கேள்வியின் தொனி. "வீ ஆர் அசைலம் சீக்கர்ஸ் ஹியா" (We are asylum Seekers here) அவளது சொற்களில் தடுமாற்றம். "What" அவனது குரலில் வியப்பின் தொனி.

"Yes, we came from Srilanka. That is our mother land" தனு விளக்கினாள்.

"Where is our mother land" என வினவியபடி அருகே வந்து கத்தினான் விந்தன்.

சுட்டுவிரலால் தொட்டுக் காட்டினாள். இந்து மா சமுத்திரத்தின் நடுவே சிறு பொட்டாய் கிடந்த அப்புள்ளி அவளது சுட்டுவிரலில் மறைந்து கிடந்தது. அவளது கையை விலக்கி அந்தச் சிறு புள்ளியை உற்று நோக்கினான் விந்தன். அவள் தட்டிலிருந்த சில உருளைக்கிழங்குப் பொரியலை எடுத்து அவனுக்கு ஊட்டினாள். அவற்றை இடைமறித்ததுக் கையில் வாங்கிக் கொண்ட விந்தன் "Please show me where are we now" என்றான்.

"ஹாவ் இட்" எனக் கூறியபடி உலகப் படத்தை சிறிது அசைத்து "Here is England" எனக் காட்டினாள்.

அவன் உற்றுப்பார்த்தான் "Where is London" வினவினான்.

"Here" அவள் சுட்டிக் காட்டினாள்.

"It is too far from Srilanka" வியப்பு மேலிட விந்தன் தெரிவித்தான்.

"It is too far" அவளும் தலை அசைத்தாள்.

"Why did you Come here" அவனது கேள்வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“Because” என்று இழுத்த தனு அங்கே இனப்பிரச்சனை...யுத்தம்... போர்...ஆமிப் பிரச்சனை என்று சொல்ல முனைந்தாள். அவன் மௌனித்து நின்றான். நீ அப்ப சின்னப்பிள்ளை எனச் சொல்லியபடி அவள் தொடர்ந்தாள். இராணுவ அட்டூழியம் , சித்திரவதைகள், படுகொலைகள் எனப் பட்டியலை நீட்டி விரித்தாள் . அவன் பொறுமையாக ஆனால் நிதானமாகக் கேட்டுக்கொண்டு இருந்தான். உன்ரை அப்பாவும் ஒரு காலத்தில் போராளியாக இருந்தவர். அம்மாவும் கூடத்தான் . அதனால் உயிராபத்தை எதிர்நோக்க வேண்டி வந்தது. அப்பத்தான் தப்பியோடி இங்கை அரசியல் அடைக்கலம் கோரி இருக்கிறோம். அதால பாஸ்போட் இல்லை. நாங்கள் சிறிலங்காவுக்கும் போக ஏலாது. அங்கே இருக்கிற தாத்தா, பாட்டியை ஸ்பொன்சர் செய்து கூப்பிடவும் ஏலாது. கவலையும் கண்ணீருமாக தனு தன் கதையைக் கூறினாள். தாயின் தலையை மெல்ல வருடினான் விந்தன்.

“மம்... ஹியர் இஸ் சீறிலங்கா. இட் இஸ் வெரி குளோஸ் ரு திஸ் பிக் லான்ட்” என்றான் இந்தியாவைச் சுட்டிக்காட்டியபடி. “வை டிட் யூ எவொய்ட் திஸ் லான்ட் அன்ட் கம் ஒவர் திஸ் பார்எவே லான்ட்?”

(Why did you aviod this Land and come over this faraway land?)

விந்தன் கேள்வி எழுப்பினான். இப்போது நீ சின்னப் பிள்ளை எனச் சொல்ல அவளால் முடியவில்லை. இந்த வேளையில் கையில் கார்ச் சாவியுடன் வந்து சேர்ந்த மாதவன் “என்ன நடக்குது அம்மாவும் பிள்ளையும்” என்றான்.

**நன்றி தினமுரசு. மார்ச் 2003.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு (1994), காணி உறுதி (1988) ஆகிய
சிறுகதைக் கோவைகளை ஏலவே
ஈழத்து இலக்கிய உலகிற்கு அளித்த
இளையவன் வழங்கும்
மூன்றாவது சிறுகதைக் கோவை இந்நூலாகும்.
முன்னே கூறப்பட்ட நூல்கள்
வெளிவந்த காலங்களும் பின்னணிகளும்
எழுத்தாளனின் அநுபவங்களும்
அவன் காலூன்றி நின்ற தளங்களுமே
அக் கதைக் கோவைகளின் கதாமாந்தர்களையும்
களங்களையும் கருப்பொருட்களையும்
தீர்மானித்தன. உருவ அமைதியையும் வடிவமைத்தன.
உருவமும் உள்ளடக்கமும் படைப்பு நிலை சார்ந்த
இலக்கண அணிகளாக இருந்த பொழுதிலும்
படைப்புக்கு அப்பால் நின்றும் ஒரு பேரணியாக
இயங்க வேண்டிய நிர்ப்பந்தங்களும் இவற்றுக்குண்டு
என்பதை தற்கால பிறநாட்டு இலக்கியங்கள்
உணர்த்தி நிற்கின்றன. இந்த இலக்கியல்வாத
நிலையில் இவரது எழுத்துக்கள் எழுகின்றன
என்பதை எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது.

- செம்பியன் செல்வன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org